# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

63

**மலையகச் சிறப்பிதழ்**





நேர்காணல் - மலரன்பன்



காமன் கூத்து
பன்முக நோக்கில் ஓர் ஆய்வு

தோழர் இளம்செழியன்
- லெனின் மதிவானம்

யாழ்ப்பாணத்தில் 'மடகொம்பரை'
41 வது இலக்கியச் சந்திப்பை
முன்னிறுத்திய
ஒரு நினைவுப்பதிவு
- மல்லியப்புசந்தி திலகர்

கலை இலக்கிய மாத சஞ்சிகை
மார்கழி – 2013

120/=



# நதியினுள்ளே...


**சிறுகதை**

பதுளை சேனாதிராஜா
மு.சிவலிங்கம்
அல்அஸூமத்
மொழிவரதன்
சுதர்மமகாராஜன்
திண்ணனூரான்

**கவிதை**

செ.ஜெ.பபியான்
நேரு கருணாகரன்
மு.கீர்த்தியன்
எஸ்.பி.பாலமுருகன்
எஸ்.திலகவதி
சு.தவச்செல்வன்
சண்முகம் சிவகுமார்
வே.தினகரன்
சு.முரளிதரன்
கிசோக்குமார்
ஜெயதர்மன்

**நேர்காணல்**

மலரன்பன்

**அட்டைப்படம்**

நன்றி இணையம்

**கட்டுரை**

தோழர் இளஞ்செழியன்
லெனின் மதிவானம்

காமன் கூத்து - பன்முக நோக்கில் ஓர் ஆய்வு
அ.லெட்சுமணன்

நாட்டார் பாடல்கள் மூலம் அடையாளம்
காணப்படும் மலையக மக்கள்
எஸ்.ராமையா

யாழ்ப்பாணத்தில் "மடகொம்பரை" 41 வது
இலக்கிய சந்திப்புக்கான பயணத்தை
முன்னிறுத்திய ஒரு நினைவுப் பதிவு
மல்லியப்புசந்தி திலகர்

மலையக இலக்கியத்துக்கு ஒரு புதிய வரவு
சாரல்நாடன்

கவிஞர் குறிஞ்சி தென்னவனின் வாழ்வும் - பணியும்
அந்தனி ஜீவா

**நூல் விமர்சனம்**

மு.சிவலிங்கம்

# ஜீவநதி

**2013 மார்கழி இதழ் - 63**

**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா



**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank
Nelliady
A/C - 8108021808
CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.
- ஆசிரியர் -



## ஜீவநதி
(கலை இலக்கிய மாத சஞ்சிகை)


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## ஜீவநதியின் 10வது சிறப்பிதழ்


மீண்டுமொரு சிறப்பிதழுடன் ஜீவநதி வாசகர்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். பெண்கள் சிறப்பிதழ், சிறுகதைச்சிறப்பிதழ், கவிதைச் சிறப்பிதழ், எழுத்தாளர் மாநாட்டுச் சிறப்பிதழ், உளவியல் சிறப்பிதழ், கே.எஸ்.சிவகுமாரனின் பவளவிழாச் சிறப்பிதழ், இளம் எழுத்தாளர்கள் சிறப்பிதழ், அவுஸ்திரேலியச் சிறப்பிதழ், கனடாச்சிறப்பிதழ் வரிசையில் 10 வது சிறப்பிதழாக மலையகச் சிறப்பிதழ் வெளிவருகின்றது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் அதிக சிறப்பிதழ்களை வெளியிட்ட சஞ்சிகை என்பதை சுய புழுகு அற்ற மனப்பான்மையோடு கூறுவதில் பெருமை கொள்கின்றேன்.

இச்சிறப்பிதழை பல மலையக எழுத்தாளர்கள் அலங்கரித்துள்ளார்கள். இதில் உள்ள பெரும்பாலான ஆக்கங்கள் மலையகத்தை மையப்படுத்தியவை. இரண்டு மாதங்களுக்கு முன்னரே 30 இற்கு மேற்பட்ட மலையக எழுத்தாளர்களுடன் தொடர்பு கொண்டு ஆக்கங்களை அனுப்பி வைக்கக் கோரினேன், அதில் பெரும்பாலானவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு தமது ஆக்கங்களை அனுப்பி வைத்தார்கள். அவற்றின் தொகுப்பே இன்று உங்கள் கைகளில் மலையகச் சிறப்பிதழாக தவழ்கின்றது. உண்மையில் மலையக படைப்பாளிகள் அனைவரையும் உள்ளடக்கியதாக பெரியதொரு மலையகச் சிறப்பிதழை வெளியிட வேண்டும் என்பது அவா, காலப்போக்கில் முயற்சிப்போம்.

இச்சிறப்பிதழ் வெளிவருவதற்கு பலவழிகளிலும் உதவிய மலையகப் படைப்பாளிகளான சுதர்மமகாராஜன், மு.சிவலிங்கம் ஆகியோருக்கு எமது நன்றிகள். ஏற்கெனவே வெளிவந்த ஜீவநதியின் சிறப்பிதழ்கள் வாசகர்களிடையே பெரு வரவேற்பை பெற்றுக் கொண்டன. இச்சிறப்பிதழும் வாசகர்களிடையே பெரும் வரவேற்பை பெறும் என்று நம்புகின்றோம். வாசகர்களிடமிருந்து ஆக்கபூர்வமான விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.

- க.பரணீதரன்

# தோழர் இளஞ்செழியன்



**இளஞ்செழியன் தாம் சார்ந்த ஸ்தாபனங்களை உருவாக்குகின்ற போது அவை உழைக்கும் மக்களையே ஆன்மாவாக கொண்டிருந்தார். அவர் தமது பண்பாட்டு செயற்பாடுகளை தோட்டத் தொழிலாளர்களிடையே முன்னெடுத்து செல்கின்ற போது பல தொழிற்சங்க அரசியல் அமைப்புகள் சார்ந்தவர்களை அவ்வமைப்புகளில் அங்கம் வகித்தனர். ஒரு பொது பணிக்காக அவர்களை வெகுசனமாக திரட்டியிருந்தார்.**

"எனது வாழ்நாள் முழுவதும், தந்தை நாட்டிற்காகவும் புரட்சிக்காகவும் உள்ளத்தா லும் உடலாலும் சேவை செய்துள்ளேன். இந்த உலகத்திலிருந்து நான் மறையும் போது, இன்னும் நீண்ட நாள் இருந்து மேலும் அதிக சேவை செய்ய முடியாமல் போய் விட்டதே என்பதற்காகவே அல்லாமல் வேறு எதற்காக வும் வருந்த மாட்டேன். நான் இறந்த பின், எனது இறுதி சடங்குகளைப் பெரியளவில் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். மக்களின் நேரமும் பொருளும் விரையமாக்கப்படாமல் இருப்பதற் காகவே இதைக் கூறுகின்றேன்."

என ஹோர் சி மின் தம் உயில் எழுதி வைத்துவிட்டு சென்றுள்ளார். தோழர் இளஞ் செழியன் பற்றி எழுத நினைக்கின்ற போது மேற்குறித்த நினைவுகள் நெஞ்சை நெருடு கின்றது. அவர் வாழ்ந்த காலம், காலத்தின் சூழ்நிலை, அச்சூழ்நிலையில் அவர் இயங்கிய முறை எளிமையான வாழ்க்கை, மக்களை நேசிக்கின்ற பண்பு என்பன ஹோ சி மின்னுடைய வாழ்வின் சில பகுதிகளோடு பொருத்திப் பார்க்க கூடியதாக உள்ளது. எவரொருவருடைய வாழ்வும் பணிகளும் மனித வாழ்வின் சிறந்த இலக் கணமாக திகழ்கின்றதோ அத்தகையோரின் வாழ்வு சமூக முக்கியத்துவம் உடையவையா கின்றது. இளம் செழியன் இத்தகையோரில் ஒருவராவார். அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக் காக தன்வாழ் நாள் பூராவும் ஓய்வு ஒழிச்சல் இன்றி உழைத்தவர்.

மலையக சமூகம் காலணித்துவவாதி களாலும், இனவாதிகளாலும் மிக கொடூரமாக நசுக்கப்பட்டது. இளஞ்செழியன் தன்னளவில் ஒரு ஒடுக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதி என்ற வகையிலும் தன்னுடைய தொடர்ச்சியான தேடல் வேட்கையும் இத்தோழரில் ஆழமாக மனிதநேயமாக மாறுவதையும் அந்த மனித நேயம் அரசியல் பண்பாட்டுத்துறையில் அவரை செயலூக்கத்துடன் செயற்படத் தூண்டுவதை யும் அவருடைய வாழ்க்கை வரலாறு எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

இளஞ்செழியன் பற்றிய ஆய்வுகளும் மதிப்பீடுகளும் அவ்வப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத் தக்கது. இவ்வகையில் திரு. பெ. முத்துலிங்கம் எழுதிய "எழுதப்படாத வரலாறு" (இரண்டா வது பதிப்பு இலங்கை தி.மு.க. வரலாறு எனத் தலைப் பிடப்பட்டு: நாளந்தா பதிப்பகம்-சென்னை) என்ற இவர் தொகுத்து வெளிவந்த நூலாகும். இந்நூலையொட்டி இளஞ்செழியனை பல்துறை நோக்கில் அணுகி ஆராயும் மதிப்பீடுகளும் விமர் சனங்களும் வெளிவந்திருப்பதாக தெரிய வில்லை. கொழுந்து இதழ்களில் இவர் பற்றிய பல செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அவ்வாறே திரு. அந்தனி ஜீவா சூரியகாந்தி

பத்திரிகையில் இளஞ்செழியன் பற்றி எழுதிய நினைவுக் குறிப்புகளும் பல செய்திகளை கூறுவதாக அமைந்திருந்தன. அந்தவகையில் இளஞ்செழியன் பற்றி உருப்படியான விமர்சனங்கள் ஏதும் வந்ததாக தெரியவில்லை. மறுபுறத்தில் அவர் இயங்கி காலத்தில் தோழர்களுக்கு எழுதிய கடிதங்கள், வெளியிட்ட அறிக்கைகள், நூல்கள் யாவும் தொகுக்கப்பட்டதாக தெரியவில்லை. இந்நிலையில் கிடைக்கப்பெற்ற சில ஆதாரங்களை கொண்டே அவர் பற்றி எழுத வேண்டியுள்ளது. அதே சமயத்தில் அவை அனைத்தும் கிடைத்தால் தான் தொகுக்கப்பட வேண்டும் என்ற முயற்சியில் ஒரே கருத்தை திரும்ப திரும்ப கூறிக்கொண்டு இருப்பதோ அல்லது இது பற்றிய மதிப்பீடுகளை புறக்கணிப்பதோ அபத்தமான செயலாகும்.

இளம்செழியன் தமது ஆரம்பகால செயற்பாடுகளை கொழும்பில் வாழ்ந்த தொழிலாளர்களிடையே முன்னெடுத்தவர். வர்க்க ரீதியாகவும் சாதிய ரீதியாகவும் தாழ்த்தப்பட்டிருந்த கடைசிப்பந்திகள், வீட்டு வேலை யாட்கள், நகர சுத்தி தொழிலாளர்கள், சலவை, சிகையலங்கார தொழில்களில் ஈடுபட்டிருந்த வர்கள் இன்னும் இது போன்ற இதர வர்க்கத்தினர் மத்தியில் தான் அவரது இயங்கு தளம் வேர் கொள்கின்றது. இந்தப் பின் புலத்தில் அத்தகையோரின் சுய மரியாதையை காத்துக் கொள்வதற்காக தோற்றம் கொண்ட ஸ்தாபனமே இலங்கை சுயமரியாதை இயக்கம் (இ.சு.ம-1932). இவ்வியக்கம் தழிழகத்தில் பெரியாரின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தது. "ஈழத்தில் தலைநகர்ான கொழும்பு கொள்ளுபிட்டியில் 1932 ஆம் ஆண்டு இலங்கை சுய மரியாதை இயக்கம் என்ற ஒரு இயக்கத்தை தோழர்களான நா.பழனியப்பன், எஸ்.கே. மாயகிருஸ்ணன், எஸ்.டி.சுப்பையா, எம்.ஏ ஹமீது, சிங்காரம் ஆகியோரின் முயற்சியால் தொடங்கப்பட்டது. இதே ஆண்டு ஈ.வெ.ரா பிரச்சார கழக மொன்று தொடங்கப்பட்டது. இக்கழகத்திற்கு தலைவராக ந. முத்துப் பரியர், செயலாளராக வீரையா, பொருளா ளராக நெ.க.காளிமுத்து, ஆகியோர் பொறுப் பேற்றிருந்தனர். இக்கழகத்தில் தோழர்கள், ஆறுமுகம், டி. எஸ். சுப்பையா, கு.யா. திராவிட கழல், காத்தமுத்து இளம் செழியன், சிங்காரம், டீ.எம் குரே, ஏ.டி.சுப்பையா ஆகி யோர் முக்கிய பிரமுகர்களாக இருந்தனர் ( இளஞ்செழியன். அ. 2000, ஈழத்தில் பெரியார் முதல் அண்ணா வரை, நாவலர் இளஞ் செழியன் அரசியல் பொன் விழாக் குழு, கண்டி, ப.2).

இவ்வகையில் தோற்றம் கொண்ட இவ்வியக்கத்தின் கூட்டங்கள் பெரும் பாலும் இரவு பத்து மணியளவில் தான் ஆரம்பிக்கும் என இளஞ்செழியன் தமது நூலில் பதிவு செய்திருக்கின்றார். காரணம் அந்த தொழிலாளர்களுக்கான ஓய்வு நேரம் என்பது அதுவாகவே இருந்தது. இவ்வியக்கத் தில் பங்கு பற்றிய பல தோழர்கள் மிகுந்த உணர்வுடனும் அர்ப்பணிப்புடனும் செயற் பட்டமையினாலேயே குறித்த காலம் வரை நின்று நிலைக்க கூடியதாக இருந்தது. மூடநம்பிக்கைகளுக்கும் மத நம்பிகைகளுக்கும் எதிராக தீவிர கருத்து பிரச்சாரத்தை முன்னெடுத்தனர். சாதியமைப்பை தீவிரமாக சாடிய இவ்வியக்கம் உழைக்கும் மக்கள் மீதான சுரண்டலுக்கு எதிராகவும் செயற்பட்டது.

1932ஆம் ஆண்டு ரஷ்ய பயணத்தை மேற்கொண்டிருந்த பெரியார் அதனை முடித்துக் கொண்டு வரும் வழியில் இலங்கைக்கும் வருகை தந்தார். அவர் இவ்வியக்கத்தின் கூட்டத்தில் கலந்துக் கொண்டு நீண்ட உரையாற்றியுள்ளமை இவ்வியக்கத்தினருக்கு ஆதர்சனமாக அமைந்திருக்கின்றது. இதன் தாக்கத்தால் இவர்கள் இந்தி மேலாதிக்கத்திற்கு எதிராகவும் குரல் கொடுத்தனர். இவ்வகையில் ஒரு ஒடுக்குமுறைக்குட்பட்ட சமூகம் பிறிதொரு சமூகம் ஒடுக்கப்படுகின்ற போது அது பற்றிய கரிசனை கொள்வது தார்மீகமாகும். இ.சு.ம த்தில் அங்கம் வகித்தவர்கள் பெரும் பாலோனோர் சாதிய ரீதியாகவும் மொழி ரீதியாகவும் ஒடுக்கப்பட்டவர்கள் என்ற உணர்வும் கோபாவேசமும் இந்தி மொழி திணிப்பிற்கும் அதன் பின்னணியில் இருந்த பிராமண ஆதிக்கத்திற்கும் எதிராக குரல் கொடுத்தனர்.

இவ்விடத்தில் பிறிதொரு விடயம் பற்றியும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. பெரியார் தனது 68ஆவது வயதில் 26 வயது நிரம்பிய மணியம்மையை திருமணம் செய்து கொண்டமை இயக்க தோழர்களிடையே பல அதிருப்திகளை ஏற்படுத்தியிருந்தது. அதன் வெளிப்பாடாகவே திரு அண்ணாத் துரை பிரிந்து சென்று திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாற்று அமைப்பை நிறுவிக் கொண்டார் என பொதுவாக கூறப்படுகின்றது. இருப்பினும் பெரியார் பண்பாட்டுத் தளத்தில் இயங்க அண்ணாத்துரை அரசியல் தளத்தில் இயங்க முனைந்தமையே இதற்கான பின்னணியாக

அமைந்திருந்தது. பார்பன ஆதிக்கத்தை அரசு அதிகாரத்தை கைப்பற்றி தகர்த்த முனையலாம் என்பதை விட தாம் ஒரு அழுத்த சக்தியாக நின்று கொண்டு அரசை நிர்ப்பந்திப்பதன் மூலமே பார்பன ஆதிக்கத்தை தகர்த்தலாம் என்ற அடிப் படையில் பண் பாட்டுத்தளத்தில் செயற்பட்டவர் பெரியார். அண்ணாத்துரை அரசியலதிகாரத்தை கைப் பற்றி சீர்த்திருத்த நடவடிக்கைகள் மூலமாக மாற்றத்தை கொண்டு வரலாம் என நம்பி செயற்பட்டார். இதுவே பெரியார் அண்ணாத் துரை முரண்பாட்டிற்கான பிரதான காரண மாக அமைந்திருந்து எனலாம். இது பற்றிய ஆழமான ஆய்வுகள் வெளிவர வேண்டியது அவசியமான தாகும். இது அதற்கு ஏற்ற இடமல்ல. இதன் தாக்கத்தை நாம் இலங்கை யிலும் காணக் கூடியதாக உள்ளது. அதன் பின்னணியில் உரு வானதே இலங்கை திராவிட முன்னேற்றக் கழக மாகும். புதிய பெயர் மாற்றம் பெற்ற இக்கழகத் தின் அ.ம. அந்தோனிமுத்து பொதுச் செயலாள ராக தெரிவு செய்யப்பட்டார். பின் 1949 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் தோழர் இளஞ் செழியன் அதன் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார்.

இத்தகைய பின்னணியில் தமது சமூக அரசியல் செயற்பாடுகளுக்கு வியூகம் அமைத்துக் கொண்ட இளஞ்செழியன் அவர் களுடைய பார்வை மலையகத்தை நோக்கி நகர்கின்றது. சுயமரியாதை திருமணம் ஒன்றிற் காகவே அவர் மலையகத்திற்கு (கடு கண்ணாவில் உள்ள கிரிமெட்டியா தோட்டத் திற்கு) வருகின்றார். பெரும்பான்மையாக உழைக்கு மக்களை தளமாக கொண்டிருக் கின்ற மலையக சமூகம் சார் வாழ்நிலை இ.தி.ம.க. த்தினதும் தோழர் இளஞ்செழிய னதும் சமூக செயற்பாடுகளுக்கான பரந்து விரிந்த தளமாக விளங்குகின்றது. இக்காலச் சூழலில் இ.தி.ம.க.த்தின் நோக்குகளும் போக்குகளும் இலங்கையை(குறிப்பாக மலையகம்) தழுவிய தாக மாறியது. இளஞ் செழியன் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் இவ்வம்சம் தெளிவாகவே சுட்டிக்காட்டப் பட்டிருந்தது.

“இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம், இலங்கை மக்களுடையது என்பதே அதன் லட்சியமும் வாழ்வும் ஆகும் என்பதை புரிந்துக் கொண்டு ஒரே இன மக்கள் என்ற திராவிட இனத்தவர்களுக்கான தன்னால் ஆன மட்டும் ஒத்துழைப்பு கொடுப்பவர்களாக இருக்க வேண்டுமே தவிர, பாரத நாட்டு காந்தியார், நேருஜி போன்ற தலைவர்களின் பெயர்களை கூறி நாம் இந்தியர்கள் நமது தலைவர்கள் காந்தி நேரு என காங்கிரஸ் பக்கம் மலைநாட்டு மக்களை இழுத்து மக்கள் மீது இந்நாட்டுப் பற்றும், இந்நாட்டு நம்பிக்கையை கொள்ளாத வண்ணம் பல லட்சம் மக்களது வாழ்விலே மண்ணைத் தூவி அவர்களை நாடற்றவர், நாதியற்றவர், என்ற நிலைக்கு ஆளாக்கி யுள்ளனர். மலைநாட்டு மக்களே! அஞ்ஞாதீர்! அஞ்ஞாதீர்! உங்களது பிரஜா உரிமை இதோ பாரோர் புகழும் பாரதப் பிரதமர் நேருவிட மிருந்து வருகிறது தபாலில் என்ற நம்பிக்கையை ஊட்டி... இன்னுமொரு பிரிவினர் சென்னையை காட்டி அங்கிருந்து தான் உங்கள் விடுதலை நிச்சயமாக வரும் என்ற ஆகாத ஊட்டி... வருகின்றனர்” என இ.தி.மு.க சார்பில் தோழர் இளஞ்செழியன் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடுகின்றார். (மேற்கோள், முத்துலிங்கம். பெ.மே.கு.நூ.ப.40)

இளஞ்செழியன் தாம் சார்ந்த ஸ்தாபனங்களை உருவாக்குகின்ற போது அவை உழைக்கும் மக்களையே ஆன்மா வாக கொண்டிருந்தார். அவர் தமது பண் பாட்டு செயற்பாடுகளை தோட்டத் தொழிலாளர் களிடையே முன்னெடுத்து செல்கின்ற போது பல தொழிற்சங்க அரசியல் அமைப்புகளைச் சார்ந்தவர்கள் அவ்வமைப்புகளில் அங்கம் வகித்தனர். ஒரு பொது பணிக் காக அவர்களை வெகுசனமாக திரட்டியிருந்தார். எடுத்துக் காட்டாக தோழர் இளஞ்செழியனாலும் அவரது தோழர்களாலும் உருவாக்கப்பட்ட இ.தி.மு.க, இளம் சோஷலிச முன்னணி (இ.சோ.மு.) ஆகிய அமைப்புகளின் கோட்டையாக ஹட்டன் பகுதியை சார்ந்த காசல்றி தோட்டம் விளங்கியது. அத்தோட்டத் தில் வாழ்ந்த பெரும்பாலான தொழிலாளர்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸினதும், தொழிலாளர் தேசிய சங்கத்தினதும் அங்கத்தவர்களாக இருந்தனர். தோழர் இளஞ்செழியனின் கூட்டங்களை ஒழுங்கமைத்த கோ. ஆறுமுகம் தொழிலாளர் தேசிய சங்கத் தில் முக்கிய பதவியை வகித்தவராவார். அதே போன்று திரு.வே.மணிபாலன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை சேர்ந்தவராவர். அத்தோட்டத் திலும் அதனை அண்டிய தோட்டங்களிலும் வாழ்ந்த மக்களில் 75 வீதத்திற்கு மேற் பட்டவர்கள் இளஞ்செழியனின் கூட்டங் களிலும் வகுப்புகளிலும் பங்குப்பற்றியுள்ளனர்.

தொழிற்சங்கங்களுக்கு அப்பால் ஒரு பண்பாட்டுத்தளத்தில் பொது மக்களை அணிதிரட்ட முடியும் என்பதை மலையகத்திலே சாத்தியமாக்கியவர் தோழர் இளஞ்செழியன். இவ்வாறு அணித்திரட்டிய மக்களிடையே தி.மு.கா, மார்க்ஸிய கருத்துக்களை முன்னெடுத்து சென்றார். இருப்பினும் பெரியாரின் கருத்துக்களே இவரில் முனைப்புற்றிருந்தது. மக்களிடையே பகுத்தறிவு சார்ந்த கருத்துக்களை அம்மக்களின் உழைப்பு சுரண்டலோடும் அதற்கு துணை போகின்ற பிற்போக்கு தொழிற்ச்சங்கள் குறித்தும் தீவிரமான கருத்துப் பிரசாரத்தை முன்னெடுத்துச் சென்றார். இத்தகைய பிரச்சாரங்களின் மூலமாக தோட்டத் தொழிலாளர்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டதுடன் அவர்கள் தாம் அங்கம் வகித்த தொழிற்சங்க அமைப்புகளிலும் கேள்விகளை

## தொழிற் சங்கங்களுக்கு அப்பால் பண்பாட்டுத்தளத்தில் மக்களை அணி திரட்ட முடியும் என்பதை மலையகத்தில் சாத்தியமாக்கியவர் தோழர் இளம் செழியன்



எழுப்பினர். இளஞ் செழியனைக் கடந்தும் திராவிட கருத்துக் கள் மலையகத்திலே பரவியிருந்தன என்பதும் உண்மை. தமிழ் நாட்டு பத்திரிகைகள் மற்றும் திரைப்படங்களின் தாக்கத்தினால் அத்தகைய கருத்துக்கள் பரவியிருந்தன. ஆனால் அவை இளஞ்செழியனால் முன்னெடுக்கப்பட்டது போன்று மலையக சமூகம் சார் சிந்தனையாக அவை அமைந்திருக்கவில்லை. அவை வாழ்க்கைக் கும் நடைமுறைக்கும் பொருத்தமற்றதாக காணப்பட்டது.

இந்த பின்புலத்தில் மலையக மக்கள் இம்மண்ணுக்குரியவர் என்ற சிந்தனைப் போக்கு இளஞ்செழியனில் முனைப்புரு கின்றது. மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டு அவர்களை அரசியல் அநாதை ஆக்கியதற்கு எதிராக தீவிர குரல் கொடுத் தவர் இளஞ் செழியன். அவர் ஆரம்ப காலம் முதலாகவே தமிழ் மக்களின் மொழியுரிமை, மலையுக மக்களின் வாக்குரிமை தொடர்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களிலும், எழுச்சிக் கூட்டங் களை நாடாத்துவதிலும் கவனமெடுத் திருந்தார். 1963 ஆம் ஆண்டு பண்டாரவளையில் ஆயிரக் கண்க்கான தொழிலாளர்களை ஒன்றுத்திரட்டி நாடற்றவர் மறுப்பு மாநாட்டை கூட்டியமை இதற்குதக்க எடுத்துக்காட்டாகும். கூட்டம் நடைப்பெற்றுக் கொண்டிருக்கையில் காடையர் கூட்டத்தால் இவர்கள் தாக்கப் பட்டும் உள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் இவருடன் உறவு கொண்டிருந்த இடதுசாரி சிங்களத் தோழர்கள் இவர்களை காப்பாற்றிய துடன் ஆதரவும் அளித்துள்ளனர் என்பதும் கவனத்தில் கொள்ளத் தக்கது. மலையக மக்களிடையே வீரியமிக்க உணர்வை ஏற்படுத்து வதில் இம் மாநாடு பெரும் தாக்கம் செலுத்தியிருக்கின்றது.

அவ்வாறே இளஞ்செழியனின் முக்கியமான பங்களிப்புகளில் ஒன்று மக்கள் விடுதலை முன்னணியின் இந்தியவிஸ்தரிப்பு வாதம் தொடர்பான நிலைப்பாட்டை அம்பலப் படுத்தியதுடன் அது குறித்து தெளிவை அவர்களுக்கு ஏற்படுத்த முனைந்தமையாகும்.

இலங்கையில் மூலவளத்தை கொள்ளையடித்து அதனை இந்தியாவிலே கொண்டு சேர்த்து நம்நாட்டில் வாழ்கின்ற இந்திய முதலாளிகளுக்கு எதிரான இனவாத பார்வை மலையக மக்களுக்கு எதிராகவே திருப்பட்டிருந்தன. இலங்கை வாழ் இந்திய முதலாளிகள் பேரினவாதிகளிடையே தமக்கான எதிர்ப்பு தோன்றுகின்ற போது அதற்கு ஆதரவு தேடி மலையக மக்களை அணிதிரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். இந்தப்பின்னணி

யில் மலையக சமூகத்தின் இருப்பை சிதைக்க வேண்டிய தேவை பேரினவாதிகளுக்கு இருந்தது. 1970களின் இறுதிப்பகுதியில் நோர்வூட் பிரதேசத்தில் இளம் சோஷலிச முன்னணி யினரின் ஏற்பாட்டில் திரு ரோஹன விஜய வீராவுடனான கூட்டம் ஒழுங்கமைக்கப் பட்டிருந்தது. கூட்டத்தை ஒழுங்கமைத்தவர் களில் திருவாளர்கள் கருப்பையா, ஜெகதீஸ் வரன், பி.எம்.லிங்கம், இரா ஜெயராமன், முதலா னோர் முக்கியமானவர்கள். தோழர் சி. மாசிலா மணி கூட்டத்திற்கு தலைமை தாங் கினார். இளஞ்செழியன் சிறப்புரையாற்றி யுள்ளார். இக்கூட்டத்தில் திரு. திரு ரோஹன விஜயவீர இந்திய விஸ்தரிப்பு வாதம் குறித்து பேச மறுத்து விட்ட அதே சமயம் அதனை அவர் சார்ந்த கட்சியுடனான தனிப்பட்ட கலந்துரையாடல் களின் போது விவாதிக்கலாம் தட்டிக்கழித்தமை குறித்து இளஞ்செழியன் தமது நூலில் பதிவு செய்திருக்கின்றார். இது தவறானது என்பதை திரு.ரோஹகண விஜயவீரவுக்கு சுட்டிக்காட்டிய திலும் அதனை மக்கள் மத்தியில் வெளிக் கொணர்ந்ததிலும் இளம்செழியனுக்கும் இ.தி.மு.க அமைப்பாக்க செயற்பாட்டின் பின்னணியில் தோற்றம் கொண்ட இளம் சோஷலிச முன்னணிக்கும் முக்கிய பங்குண்டு. இக்கூட்டத்தின் பின் இவ்வியக்கத்தினர் பொலி ஸாரின் தேடுதலுக் குட்பட்டனர். இளஞ் செழியன், இரா. ஜெயராமன் முதலானோர் தலை மறைவாகியிருந்த சந்தர்ப்பத்தில் கருப்பையா, ஜெகதீஸ்வரன், பி.எம். லிங்கம் முதலானோர்கள் பொலிசாரின் விசாரணைக்கும் சித்திரவதைக்கும் உள்ளானார்கள் என்பதும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டத்தக்கது.

மலையக சமூகத்தின் மீதாக தொடந்து மேற் கொள்ளப்பட்டு வந்த காட்டு மிராண்டித் தனமாக இன வன்முறைகள் இம்மக்களை பார தூரமாக பாதித்தது. உயிர் ஆபத்துகள் – ஈவிரக்க மற்ற நிலையில் இடம் பெற்ற கொலைகள், கற்பழிப்பு சம்பவங்கள். அவர்கள் சேர்த்து வைத்திருந்த பொருட்கள் கொள்ளையடித்த துடன் சிலவற்றை அழித்தும் நொருக்கிய நிகழ்வுகள்– தாம் வாழ்ந்த மண்ணிலிருந்து அந்நியமாக்கப்பட்ட கொடுமைகள் இன்னும் இது போன்ற நிகழ்வுகள் யாவும் இம்மக்களின் வாழ்வை பல்வேறுவிதங்களில் சிதைவுக் குள்ளாக்கியது. இவ்வாறனதோர் சூழலில் மக்கள் தமக்கான பாதுக்காப்பு தேடி வடக்கு பகுதிக்கும் இந்தியா விற்கும் சென்றனர். சிறு வியாபாரி களும் மற்றும் இதர மத்திய தர வர்க்கத் தினரும் பெரும்பாலும் இந்தியாவிற்கு சென்றனர். ஒரு சமூகம் என்ற வகையில் இவர்களின் புலம்பெயர்வு அவர் களின் இருப்பில் தாக்கம் செலுத்தக் கூடியதாக இருந்தது. இவ்வகையில் இலங்கையில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பேரின வாதத்திற்கு எதிராக தோழர் இளஞ்செழியன் செயற்பட்டுள்ளார். அவரது இரத்த ஜூலை (இளம் சோஷலிச முன்னணி வெளியீடு, கொழும்பு) என்ற நூலில் இம்மக்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட சட்டங்கள், மேற் கொள்ளப்பட்ட இனவன் முறைகள், அதன் பின்னணியில் மலையக தலைமைகளில் நிலைப்பாடுகள் என்பன பற்றியெல்லாம் தயவு தாட்சணயமின்றி விமர்சனத்திற்குட்படுத்து கின்றார்.

இவ்விடத்தில் மிக முக்கியமாக கவனத் தில் கொள்ளவேண்டிய அம்சம் ஒன்றுள்ளது. அதாவது சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கையில் அரசியல் அதிகாரத்தை கையேற்ற தலைவர் கள் சிங்கள பௌத்த நிலபிரபுத்துவ வர்க்கத்தை சார்ந்தவர்களாகவே இருந்தனர். இதே போன்று வடகிழக்கு சார்ந்து வெளிப்பட்ட மிதவாத தலைமைகளும் இலங்கை தேசியத்தின் பின்னணியில் ஏகாதிபத்திய காட்டிக்கொடுப்பு குணாதிசயத்துடன் தம்மை இனங்காட்டிக் கொண்ட போது அதற்கு எதிராக விட்டுக் கொடுக்காத போராட்டத்தை தமிழ் இடது சாரிகள் முன்னெடுத்தனர். “ஒடுக்கப்பட்ட மக்களின் சாதி தகர்ப்புக்கான கோரிக்கைகளை உள்ளடக்கியதான பண்ணையடிமைத் தகர்ப்புத் தேசியக் கடமையை நிறைவுசெய்யும் வரலாற்று பணி கையேற்கப்பட்டது. அதேவேளை தேசிய இனங்களின் நியாயமான கோரிக்கைகளுக் காகவும் போராடி இருக்க வேண்டும் தான். அவ்வாறு போராடவில்லை என்பதாற்றான் தமிழ் தேசியம் பிற்போக்கு நிலையில் வளர்ந்தது என்பதற்கில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் தேசியப் போராட்டத்திற்கு எதிராகத் தமிழ் தேசியம் வளர்ந்ததால் அதற்கு எதிரான, தவிர்க்கவியலாத நிலைப்பாடு எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நிலைமை காரணமாகவே சுயநிர்ணய உரிமை குறித்த அவசியமான போராட்டங்களை கைவிட்டனர் தமிழ் இடது சாரிகள்”(இரவீந்திரன்.ந. 2012 பின்னுரை, ஊற்றுக்களும் ஓட்டங்களும்– லெனின் மதிவானம், பாக்கியா பதிப்பகம், கொழும்பு).

இந்நிலையில் ஒடுக்கப்பட்டமக்களின்

சாதி தகர்ப்பு போராட்டத்தில் கவனம் செலுத்திய இடதுசாரிகள் தமிழ் மக்கள் மீதான இனவொடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தை முன் வைக்க தவறியமை ஒரு இடைவெளியை ஏற்படுத்துவதாகவே அமைந் திருந்தது. தமிழின ஒடுக்கு முறைக்கு எதிரான பார்வையை தமிழரசுக் கட்சியினர் கொண்டி ருந்தனர். ஆனால் அவர்களின் வர்க்க நிலைப் பாட்டின் காரணமாக சாதி தகர்ப்பு போராட்டத்தை நிராகரித்தனர். இங்கு சாதி தகர்ப்பு போராட்டமும் தமிழ் இன வொடுக்கு முறைக்கு எதிரான போராட்டங்களும் பிளவுப் பட்ட தேசியப் போராட்டங்களாக அமைந் திருந்தன. சிங்கள இடது சாரிகளும் தமிழ் தேசியத்தின் ஏகாதிபத்திய சார்பை தமக்கு சாதகமாக தூக்கிப் பிடித்துக் கொண்டு ஏகாதி பத்தியத்திற்கு எதிரான போராட்டத்தை முன் வைத்தனர். மேற்கிளம்பி வந்த பேரினவாதத் திற்கு எதிராக உருப்படியான விமர்சனத்தையும் செயற்பாடுகளையும் முன்னெடுப்பதில் சிங்கள இடதுசாரிகள் போதிய கவனமெடுக்கவில்லை என்பது கவனத்திலெடுக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

இவ்வாறானதோர் சூழலில் இலங்கை வரலாற்றில் பேரினவாததை அரசியல் அரங்கில் இனங்கண்டு அதற்கு எதிரான போராட்டத்தை முன்வைத்தவர்கள் நடேசய்யர் மீனாட்சியம் மாள் தம்பதி களாவார். அதன் தொடர்ச்சியான ஆளுமையாக வெளிப்பட்டவரே இளஞ் செழினாவார். பேரிவாத ஒடுக்கு முறைக்கு எதிரான விட்டுக் கொடுக்காத போராட்டத்தை முன்னெடுத்த இளஞ்செழியன் இனவாதியல்ல. இந்நிலை யில் தான் அவரது தமிழரசுக் கட்சி யினூடான தொடர்புகள் ஏற்படுகின்றது. இருப் பினும் காலப்போக்கில் தழிழரசுக் கட்சிக்குள் காணப்பட்ட முற்போக்குணர்வுகள் மழுங்கடிக் கப்பட்டு வலதுசாரி சந்தர்ப்பவாதங்கள் மேலோங்கு கின்ற போது அவர்களுடன் இளஞ் செழியன் முரண்படுவது அவரது தெளிவான பார்வையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

பண்பாட்டுத்தளத்தில் மொழியுரிமை வாக்குரிமை தொடர்பில் தொடர்ந்து முன் னெடுத்த அவரது செயற்பாடுகள் சிங்கள பேரினவாதிகளை மட்டுமல்ல தமிழ் மிதவாத சக்திகளையும் கூட அச்சம் கொள்ள செய் திருந்தது. இ.தி.மு.க பேரினவாதிகளின் தூண்டு தலினால் தடைசெய்யப்பட்ட போது தமிழ் மிதவாதிகளின் மௌனம் இந்தப் பின்னணி யிலானதாகும். அதேசமயம் சிங்கள இடதுசாரி தோழர்கள் அவருக்கு இளஞ் செழியனுக்கு ஆதரவளித்திருந்தனர். இந்திய விஸ்தரிப்பு வாதத்துடன் இளஞ்செழியனை இணைத்துப் பார்த்தமைக்கு இ.தி.ம.க என்ற பெயரும் ஒரு காரணமாக சுட்டிக்காட்டப் பட்டது. தொடந்து வந்த காலங்களில் புதிய ஜனநாயக முன்னணி என்ற பெயரிலேய அவ்வமைப்பு செயற்படத் தொடங்கியது.

யாழ்ப்பாண சாதி அமைப்பு முறையை மலையக சாதி அமைப்பு முறையுடன் ஒப்பு நோக்குகின்ற போது அத்தகைய இறுக்கம் கொண்டதாக காணப்படவில்லை. பண் பாட்டுத்தளத்தில் சாதிய அமைப்பு தகர்ப்புத் தொடர்பில் இளஞ்செழியன் தொடர்ந்து இயங்கினார். ஆதிக்கம் சார்ந்த சடங்கு முறை களை நிராகரித்து சுயமரியாதையிலான சடங்கு களை அறிமுகம் செய்திருந்தார். பூப்புனித நீராட்டு விழாவின் போதும் திருமண சடங்கு களின் போதும் சமூக சீர்திருத்த முறையில் நிகழ்வுகளை ஒருங்கமைத்ததுடன் நீண்ட உரைகளையும் ஆற்றியுள்ளார். பல கலப்புத் திருமணங்களையும் செய்து வைத்துள்ளார். சாதியத்திற்கு மூலமான இந்து சமயத்திலிருந்து வேறு சமயங்களுக்கு மாறுவதால் தமது சாதிய அடையாளத்தை மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையில் பெரியாரும் அம்பேத்கரும் முன் வைத்த கோட்பாட்டை தழுவி தாழ்த்தப்பட்ட மக்களை பௌத்த மதத்திற்கு மாற்றுவதற்கான முயற்சி களை இளஞ்செழியனும் மேற்கொண்டு உள்ளார். இந்தப் பின்னணியில் இளஞ் செழியன் இலங்கையில் தோற்றுவித்த அமைப்பே தமிழ் பௌத்த சங்கம் ஆகும். வடக்கிலும் திரு. வைரமுத்து தலித் மக்களை சாதிய ஒடுக்கு முறையிலிருந்து விடுபடவும் தமக்கான உரிமைகளை பெறுவதற்காகவும் சிங்கள மொழியை கற்பதுடன் பௌத்த மதத்திற்கு மாறுவதே சரியான திசை மார்க்கம் என்ற அடிப்படையில் செயற்பட்டுள்ளார். அது நடைமுறை சாத்தியமற்ற செயற்பாடு களுக்கே இட்டு சென்றது என்பதை திரு. யோகரட்ணம் எழுதிய "தீண்டாமைக் கொடுமைகளும் தீ மூண்ட நாட்களும்" என்ற நூலில் தெளிவு படுத்தியிருக்கின்றார். இதற்கு அப்பால் பரந்துப் பட்ட வெகுசன போராட்டங் களின் ஊடாக தலித் மக்களின் உரிமைகள் எவ்வாறு வென் றெடுக்கப்பட்டன என்பதை வரலாறு காண்பித்திருக்கின்றது. இளஞ்செழியனின்

பௌத்த மதமாற்றமும் இந்தப் பின்னணியில் நோக்கத்தக்கதே. இவரது இயக்கம் வேகமாக பரவிய காலத்தில் தான் அதிகமான கலப்பு திருமணங்கள் மலையகத்தில் நடந்துள்ளன. அத்துடன் பிள்ளை களுக்கு பெயர் சூட்டும் போதும் திராவிட இயக்க சார்ந்த மார்க்சிய மூலவர்கள் சார்ந்த பெயர்களே இக்காலத்தில் தான் பெருமளவில் வைக்கப்பட்டுள்ளன.

தோழர் இளஞ்செழியன் ட்ரொட்ஸ் கிய சிந்தாந்தத்தில் ஈடுபாடு காட்டியதால் வடக் கிலும் மலையகத்திலும் இயங்கிய ஸ்டாலினிச மாஓ சார்ந்த இடது சாரிகளுடன் ஐக்கிய பட முடியாமல் போயிருக்கலாம். அதே சமயம் அவ்விடதுசாரிகளும் தமிழ் தேசிய போராட்டம் பற்றியும் இ.தி.மு.க பற்றியும் கொண்டிருந்த நிலைப்பாடு- அவற்றில் காணப்பட்ட இடை வெளிகள் காரணமாக இளஞ்செழியனை அரசியல் பண்பாட்டுத் துறையில் இனங்காண முடியாமல் போனமை துரதிஸ்வசமா தொன்றாகும்.

இவ் வகையான புரிதலுடன் ஒரு வெகுசன அமைப்பை கட்டியெழுப்பப்பட வேண்டிய சூழ்நிலையில், இ. தி. மு. க. பற்றி சி. சிவசேகரம் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

> "தமது சமூகத்தின் பின்தங்கிய நிலை, பரவலான மூட நம்பிக்கைகள், மக்களது அறியாமையைப் பயன்படுத்தி அவர்களைச் சுரண்டும் இ.தொ.கா. தொழிச்சங்க தலைமை போன்றவற்றைக் கண்டு மனம் வெதும்பியவர்களுக்கு திராவிட இயக்கத் தின் மீது கவர்ச்சி ஏற்பட்டது அந்தச் சூழலில் இயல்பு என்றாலும், தமிழகத்தில் பகுத்தறிவு சுயமரியாதை இயக்கங்களது வளர்ச்சிக்கு வசதியாக இருந்த பிராமண விரோத உணர்வு, இந்தி எதிர்ப்பு போன்றவை இலங்கையில் இருக்கவில்லை. எனவே பகுத்தறிவு சுயமரியாதைச் சிந்தனைகளில் கவர்ச்சி ஒரு சமுதாய இயக்கமாக வளர முடியாது போனது. என்றாலும் புதிய சமுதாயத்துக்கான தேவையும் மனித சமத்துவம் என்ற இலட்சியத்தையும் சாதி மதங்களின் பேரால் மக்கள் ஏமாற்றப்படு வதை நிறுத்தப்படுவதையும் ஏற்றுச் செயற்படக் கூடிய சக்திகளின் முக்கியமான தோற்றுவாய்களில் பகுத்தறிவு சுயமரியாதை சிந்தனையும் ஒன்று." (அறிவாஞ்சலி, 2000, தம்பு இளையதம்பி நினைவுக் குழு, கொழும்பு, ப. 15)

இதுவரை பார்த்த விடயங்களை கொண்டே மேற்குறித்த கருத்து தவறானது என்பதை காட்டக் போதுமானவை என நம்புகின்றேன். தமது முன்னூக்கங்களுக்கு மாறாக ஆதாரங்கள் தென்படும் போது அதனை எதிர்கொள்வதற்கு நிரம்ப துணிச்சலும் நேர்மையும் தேவை. அத்தகைய பண்புகள் இல்லாத போதே மேற்குறித்த புலம்பல்கள் வெளிப்படுகின்றன.

இளஞ்செழியன் பண்பாட்டு தளத்தில் இனவாதத்திற்கும் குறுகிய பிரதேசவாதத் திற்கும் அப்பால் ஓர் உழைக்கும் மக்கள் நலனில் அக்கறைக் கொண்டு அவர் ஆற்றிய பங்கு முக்கியமானது. மலையத்தின் ஆன்மா வாக திகழ்கின்ற தொழிலாள வர்க்க போராட்டத்தின் பின்னணியில் மலையகம் விடுதலை பெறுவதே காலத்தின் தேவை யாகும். இந்நிலையில் மலையகத்தின் முன்னோடிகளின் எத்தனங்களை- முயற்சி களை- செயற்பாடுகளை இன்னொரு தலை முறையினரிடம்- புறப்பாட்டிடம் கையளிக்கின்ற போது இளஞ்செழியன் போன்ற ஆளுமைகள் குறித்த ஆய்வுகள் காய்த்தல் உவத்தலின்றி வெளிக் கொணரப்படல் வேண்டும். முற் போக்கு மார்க்சிய ஆய்வுகளின் ஊடாகவே அத்தகைய ஆய்வுகளை வெளிக் கொணர முடியும். •

## உப்புத்துளிகளாய்...

குரங்குகளும் பொல்லா நரிகளும்
மிஞ்சிய பூமியில் பிருந்தாவனமாய்
வாழ்க்கை பற்றிய கனவு மலர்ந்தது.

கருமை படர்ந்த மேகங்கள் மழை பொழியும்
நேரத்தில் கண்ணீர் விட்டோம்
களை பறிக்கத் தவறிவிட்டு...

நீரோடும் விழிகளுடன் வீதிகளில்
கால்வைத்த பொழுதுகளில்
எல்லோரும் சிந்திய உப்புத்துளிகள்
தீயில் பட்டு வெடித்து சிதறுகையில்
புதிதாய் பிறந்தன பச்சிலைகள்
அரும்பு விட்ட அதன் தண்டொடித்து
வேர் பறிக்கும் புல்லுருவிகள்
இருந்தும் ஏந்தியிருந்தேன்
பச்சிலைகளுக்காய் என் கையில் சில
தண்ணீர் பாத்திரங்களை...!

**செ.ஜெ.பபியான்**

# பதினெட்டாம் நூற்றாண்டின் மனிதர்கள்



நாரங்கலை தோட்ட லயத்தில் இருந்து கீழே பார்த்தால், பாம்புகளாக கருத்த ரோடும், செம்மண் பூசிய மண் பாதைகளும், இடைக்கிடையே சீமேந்தினால் வார்க்கப்பட்ட சாம்பல் நிறமடிக்கும் பாதைகளும், "கூகுள் ஏர்த்"தில் பார்ப்பது போல அங்கும் இங்கும் ஓடித்திரியும்.

மழைக்காலம் என்றால் முகில்கள் கீழிறங்கி இளைப்பாறிக் கொள்ளும். முகில்களுக்கிடையில் பறந்து செல்லும் விமானத்தின் கண்ணாடி வழியாகப் பார்ப்பது போலத்தான் ஒன்றுமே தெரியாது.

இன்றோ நல்ல வெயில். வானம் முழுக்க நீல நிற ரேகைகள் கருத்தரோடு வழியாக சரியாக காலை பத்து மணிக்கு "சர் சர்" என்று பல ஜீப்புகள் கரும்புகையை கக்கிக் கொண்டு பாடசாலை மண்டபத்தை நோக்கி விரைந்து சென்றன.

கொஞ்சநேரத்தில் "படார்... படார்... டொம்" என்கிற பட்டாசின் செறிவான சத்தம் மேட்டு லயத்துக்கும் கேட்டது.

வேறு ஒன்றுமில்லை. பத்தோடு பதினொன்றாக அரசியல்வாதிஒருவரின் தோட்ட விஜயம்! அவ்வளவு தான்!

சரி... மேட்டுலயத்தில் இருந்து இறங்கி பாடசாலை மண்டபத்தில் என்ன நடக்கிறது என பார்க்கலாம் தானே..!

அவர் ஜீப்பில் இருந்து இறங்கினார். இறங்கும் போது ஜீப் ஒருமுறை குலுங்கியது. அவரின் நிறை அத்தகையது.

அவரின் பின்னால் "பொடிகாட்" என்பவர்கள் இரண்டு மூன்றுபேர் நடந்தனர்.

அவர் பின்னால் நடக்க அவரின் வயிறுத் தொப்பை குலுங்கி குலுங்கி முன்னால் நடந்தது.

"ஐயா... வாங்க மொதல்ல டாக்டர் வீட்டுக்குப் போய் "டீ" சாப்பிட்டு போகலாம். எல்லாம் எரேஞ்ச் பண்ணி வச்சிருக்கோம் ஐயா" என்று அந்த பெரியவர் தனது முதுகு கூனல் என்பதையும் மறந்து மூன்றாய் நான்காய் அவரைப்பார்த்து மரியாதை செய்வதாக நினைத்து வளைய முயற்சி

செய்தார்.

அவர் அதற்குச் செவிமடுப்பதைப் போல அந்தப் பெரியவருடன் நடந்தார். பின்னால் தன் பொடிகார்ட்டும் நடந்து வரு கிறார்கள் என்றால் அவரின் நடை கம்பீரமாக இருக்கும்.

குறுநில மன்னர்களைப் போல!

ஆனால் இந்த நடை அடுத்த தேர்தல் வரும் வரை நீடிக்கும்.

மண்ணைக் கவ்வினால் அவ்வளவு தான்! அதோடு ஆட்டம் குளோஸ். நடையும் வாபஸ். தொப்பையும் குறையும் நல்லது தானே!

பலாச்சுளையில் "ஈ" மொய்ப்பது போல அவரை எல்லோரும் சூழ்ந்துக் கொண்டு "டாக்டரின்" வீட்டை நோக்கி நடந்து போகின்றார்கள். அவர்களில் பாதிபேர் அவருடன் வந்தவர்கள். இப்படியான சமயங் களில் அவருடன் அல்லது அவரைப் போன்ற ஆட்களுடன் கதைப்பது, ஒன்றாக நின்று படம் எடுத்துக் கொள்வது தோட்டத்தின் பெரியவர்கள், செல்வாக்குள்ளவர்கள் என்று சொல்லித்திரிபவர்களுக்கு கட்டாயமான கடமை அது! ஒரே நிமிடத்தில் உச்சிக்கே போய் விட்டதாக அவர்கள் பெருமைப்படுவார்கள். ஒருவிதமான "மமதை"யும் அவர் களுடன் அட்டையைப்போல ஒட்டிக் கொள்ளும்.

"அவர்" போன பிறகு சனங்களுக்கு அதுவே, அந்த சந்திப்பே வாழ்நாள் முழுவதுக்குமான உற்சாக பானமாக இருந்து தொலைக்க, அவருக்கோ ஜீப் தோட்ட எல்லையைத் தொட்டதும் எல்லாமே மறந்து போகும்! மனைவி வாங்கி வரச் சொன்ன சாமான்களின் லிஸ்ட்டைப் போல!

வீட்டின் "இஸ்தோப்பில்" எங்கிருந்தோ கொண்டு வரப்பட்ட "குஷன்" செட்டில் அவர் அமர்ந்தார். மற்றவர்கள், அவருடன் வந்த வர்கள், தோட்டத்து கடைசி பஸ்சை பிடிக்கும் அவசரத்தைப்போல ஆளுக்கொருபக்கம் பாய்ந்தும் ஓடியும் அந்த குஷன் செட்டில் அமர்ந்துக் கொள்வதற்கு கடும் பிராயாத்தனம் செய்தார்கள். இடம் கிடைக்காதவர்கள் அவரின் பின்னால் நின்றுக் கொள்வதற்கு முண்டியடித்தார்கள். தப்பித்தவறி நிழற்படம் எடுத்தாலோ அல்லது பத்திரிகையில் வந்தாலோ நாங்களும் வரமாட்டோமா என்கிற நப்பாசைதான் அவர்களுக்கு!

கடவுளே! இதற்கெல்லாம் எம்மவருக்கு ஆசையா?

"டீரேயில்" ஆவி பறக்க தேனீரும் பிஸ் கட்டுக்களும் அழகாய் வெட்டி அடுக்கப்பட்ட "கேக்" துண்டுகளும், அலங்கரிக்கப்பட்ட பெண்மணிகளினால் பரிமாறப்பட்டன.

அவர் டீ யை குடித்துக் கொண்டே பெண்மணிகளையும் ரசித்துக் கொண்டி ருந்தார்.


ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு தேனீர் உபசரிப்பு இனிதே முடிந்தது! எங்கிருந்து மக்கள் அவரை தேடி வந்தார்களோ தெரியாது. முண்டியடித்துக் கொண்டு அவரிடம் பல கடிதங்களை சேர்த்தார்கள். வெகுபத்திரமாக அவற்றை வாங்கிக் கொண்டு அருகில் ஜிப்பாவுடனும் தங்க மாலையுடனும் இரண்டு மூன்று கைத் தொலைபேசியுடனும் இருந்த தன் செய லாளரிடம் கொடுத்தார்.

இடைக்கிடையே "ஒண்ணும் கவல படாதீங்க, நான் இருக்கே இல்ல", "நா பாத்துகிறேன்..." என்ற வசனங்களை நம்பிக்கையூட்டும் விதமாகச் சொல்லிக் கொண்டே வந்தார்.

இப்போது அவருக்கு கை நிறைய கடிதங்கள் வந்துச் சேர்ந்து விட்டன. அக்கடிதங்கள் ஒருவகையில் தோட்ட மக்களின் உதிரம் கலந்த மானுட வாழ்வியல் தேவைகள்! காற்றைப்போல! நீரைப்போல! ஆனால் அக்கடிதங்களுக்கு அவர் பதில் அளிப்பாரா! கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பாரா என்பது போன்ற கேள்விகள் அல்லது வினாக்கள் அவருக்கு "கோபத்தை" தூண்டும் மருந்துவில்லைகள்! காலவதியான வில்லைகளை போல அன்றே அவை தூக்கி எறியப்படும். அல்லது கைவிடப்படும்.

கோரிக்கை கடிதம் எழுதியவர் எவராவது பின் நாளில் தொலைபேசி மூலமோ நேரிலோ வந்து தொந்தரவு செய்தால் ஒன்று அவருக்கு அதட்டலும் நல்ல பேச்சும் வழங் கப்படும். அல்லது அவரின் செயலாளர் கோரிக்கைக் கடிதத் துக்கு பதில் கடிதம் போடுவார்.

"கௌரவ ஐயாவுக்கு அனுப்பிய கடிதம் சம்பந்தமாக விரைவில் பதில் நட வடிக்கை எடுக்கப்படும் என்பதை இத்தால்



ஐயா சார்பாக அறிவித்துக் கொள்ளுகின்றேன்" அதோடு அந்த கோரிக்கைக் கடிதம் குளத்தில் போட்ட கல்லைப் போலத்தான்!

பலர் இந்த தத்துவத்தை தெரிந்து வைத்திருந்தார்கள்! ஆனாலும் என்றாவது ஒரு நாள் "சுவீப் டிக்கெட்டுக்கு" பரிசு விழும் என்கிற நப்பாசையில் மை தீரும்வரை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர் அடிக்கடி மணிக்கூட்டை பார்த்துக் கொண்டிருந்தார்! ஏனென்றால் அவ்வளவு "பிசி". எங்கெல்லாமோ போக வேண்டுமே!. ஏதோ தோட்டப்பகுதி கொஞ்ச காலத்தில் அமெரிக்க மாநிலமாக மாற்றிக் காட்டப்போகிறேன் என்பது மாதிரியான வெறும்பாவனை! அவ்வளவுதான்!

"என்னா நேரமாகுமா...அடுத்த பங்ஷன் எப்ப," அவர் செயலாளரைப் பார்த்துக் கேட்டார்.

"ஒரு மணிக்குத்தான் சேர் போயிடலாம்". அவன் நாலாய் மடிந்துச் சொன்னான்.

அடுத்த நிகழ்வு அவர் மாரி தோட்ட கோவிலுக்கு, "மாரியம்மன் சிலை" கொடுக்கும் விழா.

தோட்ட மக்களுக்கு இவர் கடவுளையே தருகிறார் என்றால் என்ன கொக்கா?

கட்சி பெனியன் போட்ட ஒருவர் விரைவாக ஓடி வந்தார். அங்கே இருந்த பெரியவரிடம் காதில் ஏதோ "குசுகுசு" வென்று ஊதினான்.

முதலில் வந்தடையும் செய்தி யாருக்கும் தெரியக்கூடாதாம். அந்தப் பெரியவருக்கு மாத்திரம் ஏனெனில் அது ரகசியம்!

அடுத்த கணமே அந்த பெரியவர் அவரிடம் "ஐயா எங்களை மன்னிக்கணும்.... ஸ்பீக்கர்ல ஏதோ பெரச்சினையாம்... எங்க ஆக்கள் அடுத்த தோட்டத் துக்கு போயிருக்காங்க.... ஒரு பத்து நிமிசம் லேட்டா அங்க வந்திங்கனா நல்லா இருக்கும். என்று சொல்லி விநாயகருக்கு போடும் குத்துகரண "ஸ்லோமோஷனில்" அப்படியே நின்றார்.

அவர் கண்களை அங்கும் இங்கும் உருட்டினார்.

அவருடன் மற்றவர்கள் அவரை கொஞ்சம் சலனப் பட்டவர்கள் போல பார்த்தார்கள்.

"என்ன செய்றது.... மாரி தோட்ட பங்ஷன் எப்போ.... டைம் கெடைக்குமா...." அவர் கேட்டார்.

"போய்யிடலாம் சேர்.... அங்க ஒரு மணிக்குத்தான் பங்ஷன்" அவரின் எடுபிடி யாரோ பவித்திரமாக பதிலளித்தான்.

பெரியவர் மற்றவர்களுடன் கதைத்து விட்டு உரக்கச் சொன்னார் "மற்றவங்க எல்லாம் மண்டபத்துக்கு போங்க... ஐயா கொஞ்சம் ரெஸ்டாக இருக்கட்டும்"

இருந்தவர்களில் அரைவாசிப் பேர் மண்டபத்தை நோக்கி நடந்தார்கள்.

இன்னும் பல ஜீப்புகள் "கர்.கர். என்று வந்து நிற்க! அந்த ஜீப்களிலிருந்து பலர் இறங்கினர்.

இறங்கியவர்கள் நேராக வந்து அவரை வணங்கிவிட்டு ஐயாவிற்கு நேராக அப்படியே நின்றனர்.

அவர்களின் உடையும் வயிறும், உடம்பும் ஏதோ பிரதேசசபை உறுப்பினர்கள் போல காட்டியது. அப்படி வந்தவர்களின் கழுத்திலும், கைவிரல்களிலும் தங்கம், மின்னி காண்பித்தது. அணிந்திருந்த சட்டையின் சைட் பாக்கட்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கைத்தொலைபேசிகள்! ஆ... அதை விட இன்னொரு ரகசியம் பத்தாம் வகுப்பையே தாண்டாத அவர்களின் சட்டைப் பைக்கட்டில் தங்க நிறமடிக்கும் வகையிலான பேனாக்களின் தலைகள் எட்டிப் பார்த்தன. நெற்றியில் சந்தன பொட்டுடனும் உப்பிய கன்னங்களையும், சிவப்பேறிய கண்களும், பெரிய மீசைகளும் சவரம் செய்யாத முகங்களும் காலில் செருப்பிற்கும், சப்பாத்திற்கும் இடைப்பட்ட "சென்டில்ஸ்" சை அணிந்து வெகு ஒய்யாரமாக "சுத்தமாக" இருந்தார்கள்.

தலைவர் கண்களில் ஒருமுறை தீர்க்கமாக உற்றுப்பார்த்தார். சில கணங்

களில் அவரின் முகத்தில் "கொஞ்சம்" சிரிப்பு பிறகு சொன்னார்.

"என்னா.... எல்லோரும் சொல்லி கிட்டே தாமதமாக வந்தீங்களா?... சரி.. சரி.. உக்கார்ங்க" அவர்கள் மந்திரித்துவிட்ட கோழிகளைப் போல் அங்கு கிடந்த கதிரை களிலும், சோபாக்களிலும் குந்தினார்கள்.

அனுபவமும் தலைவரிடம் செல்வாக்கும் மிகுந்த ஒருவர் தலைவரின் அருகில் குந்தினார். பிறகு என்ன தாமதமாக வந்ததற்கு அவருக்கு அவல் வைத்தார்கள் எதிர் அரசியல்வாதிகளைப் பற்றி அலசி ஆராய்ந்தனர். தோட்ட மக்களின் வாழ்வா தாரத்தைப் பற்றிய விடயங்களுக்கு அலசலில் இட மில்லை! திடீரென்று ஒருவர் ஓடிவந்தார். வயதுக்குரியவரின் ஓட்டத்தில் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

"என்னா சுந்தரம்... எல்லாம் ரெடியா... ஐயா வேறு ஒரு பங்ஷனுக்கு போகணும்" என்றார் ஒரு பிரதேசசபை உறுப்பினர்.

"மைக்ல சின்ன பிரபுளம்... அதுதான். இதப்பத்தி முன்னாலையே ஐயாவுக்கு சொல்லிட்டேன். அதுவரைக்கு ஐய்யா மலர பத்தியும் கொஞ்சம் பேசணும். அதுதான் மலர வெளியிட முந்தி கொண்டு வந்துட்டேன்" என்று பெரியவர் மிக பவ்வியமாக நயமாக மலரை அவரிடம் கொடுத்தார்.

"ஐயா இது இன்னைக்கு வெளியிட இருக்கிற மலர்!" என்றார் பெரியவர்.

அவர் அதை ரெடிமேட் புன்னகை யுடன் வாங்கிக் கொண்டார்.

மலரின் கனத்தையையும் நேர்த்தியை யும் பார்த்து அவர் மகிழ்ந்தவாறே பக்கங்களை புரட்டிப்பார்த்தார்.

இரண்டு மூன்று தடவைகள் மலரின் பக்கங்களை திறந்து மூடினார்.

அவரின் முகம் இருண்டது. முகத்தில் கோபத்தின் சாயல் தேயிலை மலையின் பனிபோல படர்ந்தது.

மலரை சோபாவின் "டீபோ"வுக்கு வீசினார்.

நாரங்கல தோட்ட பாடசாலைக்கு வந்த ஆசிரியருக்கு வணக்கம் சொன்ன மாணவர்கள் போல சோபாவில் இருந்தவர்கள் "கோரஸ்சாக" எழும்பினர்கள்

"ஐயா என்னா நடந்திருச்சி"

எல்லோர் குரலிலும் ஒரே கேள்வி!.

"என்னா... வா... வாட் மேன்... ஐ...சே... திஸ்" அவர் கோபமாக குரல் கொடுத்தார்.

வெள்ளை வேனை கண்டவர் போல பெரியவர் உண்மையிலேயே பயந்து நடுங்கிப் போனார்.

"பாத்ரூம் எங்க இருக்கு" அவர் மிக அதிகாரத் தோரணையுடன் கேட்டார்.

"வாங்கையா காட்டுரேன்" பெரியவர் மரியாதையாக பவ்வியமாக சொல்லி அவரை அழைத்துச் சென்று அந்த அறையைக் காட்டி விட்டு முன் இஸ்தோப்பில் வந்து நின்றார்.

சோபாவில் இருந்தவர்கள் ஆளுக் கொரு பக்கமாக வெளியிட இருக்கும் அந்த மலரை இழுத்தனர். ஐயாவுக்கு கோபம் வந்தது ஏன் என்பதை அறிந்துக் கொள்ள அத்தனை ஆர்வம்!

இந்த ஆர்வம் மக்களின் ஈடேற்றத் துக்குமாக இருந்திருந்தால்! நினைக்கவே நெஞ்சமெல்லாம் பூரிக்கிறதே!

பெரியவர் மிரண்டு போய் இருந்தார். வலுவிழந்த கால்களும் கைகளும் "காச்சல்" காரனைப் போல் நடுங்கிக் கொண்டிருந்தன. அதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

மூன்று வருடங்களுக்கு முன்னர் அவர் இங்கே "காமன்கூத்து" நிகழ்ச்சிக்கு வந்தபோது தனக்கு தனியாக, சொகுசாக ஒரு நாற்காலி தரவில்லையாம் சாதாரணமாக குந்தியிருப்பவர்களுக்கு போட்ட நாற்காலி தான் தனக்குமா! தன்னுடைய அந்தஸ்த்து, கௌரவம் தன்மானம் (இருந்தால் தானே) என்னாவது" என்று குதித்தாரே ஒரு குதி!

அப்பப்பா இப்போது அந்த சம்பவத்தை பெரியவர் நினைத்ததும் அவருக்கு வயிற்றைக் கலக்கியது!

சுவரைப் பிடித்து ஒருவாறாக நின்று கொண்டார்.

பின்னர் டொக்டர் வீட்டில் இருந்த அந்த சுழல் நாற்காலியை கொண்டு வந்த பிறகு தான் அவரின் கரகாட்டமே நின்றது. பிறகுதானே உண்மையான கரகாட்டமே தொடங்கியது.

என்ன பொல்லாத நிகழ்ச்சி அது!

"தலவர போல பெரியவங்க வரும் போது இவங்களுக்கு புத்தி எங்கே போனது"

என்று அவரின் செயலாளர் பெரியவர் மேல் பாய்ந்ததை நினைக்கையில் பெரியவருக்கு வயிற்றுக் கலக்கல் இன்னும் அதிகமாகியது.

பெரியவர் ஒண்ணும் பேசாமலே "சடாரென்று" வெளியில் நடந்தார். ஓடினார், தேயிலைக் காட்டை நோக்கி! ஐந்து நிமிடங்கள் கடந்திருக்கும்!

தலைவர் மீண்டும் சோபாவில் வந்து குந்திக் கொண்டார். கண்கள் கொஞ்சம் சிவப்பாக இருந்தன. இன்னும் "கோபம்" வற்ற வில்லை போலும்.

சோபாவில் அமர்ந்திருந்த மற்றவர் கள் எழுந்து நின்று கொண்டிருந்தார்கள். தலைவருக்கு மரியாதை.

மரியாதை என்பது ஒருபுறமிருக்க அவரின் கோபத்திற்கு ஆளாகினால் அரசிய லுக்கே சாவுமணிதான்! ஐடி இல்லாதவனை பார்க்கும் ஆமிக்காரனை போல

அவர் அனைவரையும் முறைத்துப் பார்த்தார்.

பிறகு கோபமாகச் சொன்னார்

"ஏ ஓங்களுக்கெல்லாம் கண்டு பிடிக்க முடியலயா? என்னாத்த மெம்பரா இருக்கி றீங்க. ஓங்களுக்கெல்லாம் இதெல்லாம் தெரியாதனாலத்தான் எப்பவும் மெம்பராக இருக்கிங்க" அவரின் ஏளனம் கலந்த வார்த்தைகள் அங்கிருந்தவர்களுக்கு சிங்கத் தின் குகையில் மாட்டிக் கொண்ட ஆட்டுக் குட்டிப் போல அவர்கள் பட்ட அவஸ்தை இருந்தது. அவர்களைப் பார்த்துக் கொண்டி ருக்கவே ஒன்றில் இருந்து பத்தாக வளைந் தார்கள்.

"ஏ... அந்தபுக்க தா..." தனது செயலாளரை அழைத்தார். மின்னல் என செயலாளர் பாய்ந்து அந்த மலரை எடுத்து கடவுளுக்கு விளக்கு காட்டுவதைப் போல மிக அவதானமாக, மரியாதையாக அவரிடம் கொடுத்தான்.

மலரை வெடுக்கென்று பறித்த அவர் பட படவென்று பக்கங்களைப் புரட்டினார்.

"இங்க பாருங்க.... எனக்கு என்னா மரியாத இங்க கொடுத்திருக்காங்க..."

அவர் காட்டிய பக்கதை எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு பார்த்தார்கள். முதல் பக்கத்தில் தர்மசீலன் எம்.பி. யின் படம் அவர்தான் இந்தப் பகுதிக்கு எம்.பி. அது சரி அடுத்தப் பக்கம் இவரின் படம்.

"சரி அதுக்கென்ன இப்போ" என்று ஒரு பிரதேச உறுப்பினர் சொல்ல நினைத்து வாயை மூடிக்கொண்டார்.

பிழையைக் கண்டுபிடிக்க முடியாமல் திருடனைப்போல "திருதிரு" வென்று அவரைப் பார்த்து முழித்தார்கள்.

"அட ஒங்களுக்கெல்லாம் ஒண்ணுமே புரியாதா? நாசமாப்போச்சி... இத பாருங்க... எம்.பி அடுத்த பக்கத்துல நா. என்ட அந்தஸ்த்துக்கு தலைவர் போஸ்ட்டுக்கு என் படம் தானே முன்னுக்கு வந்திருக்கணும்..."

அங்கிருந்தவர்கள் அத்தனை பேருக்கும் செம அதிர்ச்சி! தலைவர் சொல்றது சரிதானே! சரியோ தப்போ அவரின் படம் முன்னால் வரவேண்டியது கட்டளையே! என்ற பாணியில் அவர்கள் அனைவரும் ஆமோதித்தார்கள்.

வெளியில் ஓடிய பெரியவர் திரும்பி வந்தார்.

"யோவ் பெரியவரே... என்னா பேரு.... ஓ சுந்தரம்... என்னத்த பண்ணி தொலைச் சீங்க.. ஐயாவுட்டு படமில்ல முன்னுக்கு வரணும். இது என்னாடான்னா பின்னுக்கு இல்ல போட்டிருக்கீங்க" என்றார் ஒருவர் கோபாவேஷத்துடன்.

"என்னைய்யா... நிகழ்ச்சி நடத்து றீங்க..." என்றார் இன்னொருவர்.

தலைவர் அருகில் இருந்த பிரதேச சபை உறுப்பினரை அழைத்து காதில் ஏதோ சொல்லி கட்டளை இட்டார். அந்த உறுப் பினர் பெரியவரைப் பார்த்து "இங்க வா! பெரியவரே... என்னா... செஞ்ச... சரி சரி... இந்த தடவ இந்த புக்க வெளியிட வேணாம். ஐயா வுட்டு படத்த முன்னுக்போட்டு திரும்பவும் புக் எல்லாத்தையும் கட்டச் சொல்லு... சரியா..." பெரியவருக்கு உரக்க கட்டளையிட்டார்.

"அப்படியே செய்றேங்க" அந்தப் பெரியவர் திக்குமுக்காடிப் போய்க் கொண்டி ருந்தார். உடல் வெலவெலத்துப் போனது கால்கள் பின்னின.

நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

தேசிய கீதம் இசைத்ததும் அவரும் எழும்பி மரியாதை செய்ய வேண்டியதாயிற்று.

கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

இடையில் ஒரு அறிவித்தல்.

"பெரியோர்களே, சகோதரர்களே, சகோதரிகளே, எங்களின் தங்க ஐயா... அவசரமாக வேறு ஒரு நிகழ்ச்சியில் கலந்துக் கொள்ள இருப்பதனால் அவரை ஓர் சில வார்த்தைகள் பேசுமாறு அன்புடனும், தாழ்மையுடன் அழைக்கின்றேன்"

வானை பிளக்கும் கைத்தட்டல்கள், மண்டபம் அதிர்கிறது!

எல்லோருடைய பார்வையும் அவரை சுத்தி நின்றது.

"பெரியோர்களே, சகோதரர்களே சகோதரிகளே... மாணவர்களே.. எங்கள் கட்சித் தொண்டர்களே... இந்த நிகழ்ச்சி வெற்றி பெறவும் மீண்டும் இம்மாதிரியான நிகழ்ச்சிகளை கொண்டாடவும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நிகழ்ச்சியில் வெளியிட இருந்த மலர் ஏராளமான அச்சுப்பிழைகளினால் தடைபட்டு விட்டதற்கு நான் மிகவும் துன்பப்பட்டேன். என் கைகளினாலேயே வெளியிடப்படாதது எனது துரதிஷ்டமே. உங்களுக்கெல்லாம் தெரியும் நான் பெரியவன் சிறியவன் என்று எண்ணைக்குமே யாரையும் பார்ப்பதில்லை. எல்லோரையும் சமமாக மதிப்பவன். ஆகவே நாளைய சமுதாயம் என்னைப்போல எல்லோருமே தலைவராக வர வேண்டும் என எதிர்பார்க்கிறேன். சரி அவசரமாக வேறு ஒரு தோட்டத்துக்கு போக இருப்பதால் என் பேச்சை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்" என்று அவர் பேச்சை முடிக்க மீண்டும் ஆரவாரம்! கரகோஷம்.

அவரின் மணியான பேச்சுக்கு மரியாதை! மேடையில் அவரோடு இருந்த அவரின் சகாக்கள் சிலர் சத்தத்தோடு சத்தமாக மேசைகளையும் தட்டியதை பார்த்த அந்தப் பெரியவர் தலைப்பாகையை தலையில் சுற்றிக் கட்டிக்கொண்டு சபையோர்களைப் பார்த்து பரிதாபமாக அசடு வழிந்தார்.

அவர் தோட்ட எல்லையை தாண்டும் போது அருகில் உள்ள பொலிசுக்கு "போன்" செய்து ரோங்கலை தோட்டத்திலே குழப்பம் உண்டாவதற்கு சாத்திய கூறுகள் உள்ளமையினால் ரெண்டு போலீஸ்காரர்களை அனுப்பும்படி கட்டளையிட்டார்.

நிகழ்ச்சிகள் யாவும் முடிந்த கையுடன் மண்டபத்தில் இருந்தவர்களில் கோவில் கமிட்டி, விழாகுழு கமிட்டி உறுப்பினர்கள் தவிர மற்றவர்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று வெளியேறினர்.

கோவில் கமிட்டியில் அந்த பெரியவர் சொன்னார்

"என்னா பண்ணிபுட்டிங்க... விழா குழுவுக்கு நாங்க கமிட்டிய அமைச்சி கொடுத்தா ஒழுங்கா வேல பார்க்க வேணாமா? ஏம்மா... யோசிக்காம ஐயாவுட்டு படத்த பின்னால போட்டு எம்.பி யுட்டு படத்த யார கேட்டு முன்னால போட்டிங்க"

"ஏன்... ஒங்களுக்கெல்லாம் புறாப் கொடுத்தது தானே என்னத்த பார்த்துகிட்டு இருந்தீங்க"

"புறுப்புல படம் இருந்தாதானே"

"எல்லா... சரியாதா இருந்திச்சி"

"கிளிச்சிச்சி... ஒரு மயிரும் அதுல இல்ல"

"இந்தா சும்மா மயிருனு பேசாத"

"பேசுனா என்னாடா செய்வ"

"செஞ்சு காட்டுறேன்"

"காட்டேன் பெரிய ஆளு... இவரு..."

"இந்தா எவனோ ஒருவன் மற்றவனை அடிக்க சண்டை ஆரம்பம்.

இந்த சண்டையை பார்த்துக் கொண்டிருந்த எவனோ விஷமிகளில் ஒருவன் மிகுதியாக இருந்த பட்டாசுகளை பற்ற வைக்க அந்த மண்டபமே அதிர்ந்தது... சத்தத்தோடு சத்தமாக வேகமாக வந்து நின்ற போலீஸ் ஜீப்பில் இருந்து பொலீஸ்காரர்கள் இறங்கிக் கொண்டிருந்தார்கள். ●





**கொழுந்து சஞ்சிகையின் 38 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.**

**தொடர்புகளுக்கு:**
**அந்தனிஜீவா,**
**57, மஹிந்த பிளேஸ், கொழும்பு**
**தொ.பே-0776612315**



அ. லெட்சுமணண்

# காமன் கூத்து

## - பன்முக நோக்கில் ஓர் ஆய்வு -



பிரித்தானிய சாம்ராஜ்யத்தை வளப்படுத்தும் நோக்கில் பெருந்தோட்ட தொழிற்துறையை விருத்தி செய்வதற்காக அழைத்துவரப்பட்ட மலையக மக்கள் ஈழநாட்டில் காடுகள் அழித்து சொல்லெனா துயரங்களுடன் புலம் பெயர் வாழ்வை அர்ப்பணித்த நிலையில் தாயக பூமியின் கலாசார பண்பாட்டு அம்சங்களையும் மலையகத்தில் ஊடுருவ செய்து தங்கள் இருப்பை பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்த நிலையில் உறுதிப்படுத்தி யுள்ளனர். சர்வதேசத்தில் மனித உரிமை, சுதந்திரம் என முனைப்பாக்கப் பட்ட நிலையிலும் ஐம்பது வருட பாய்ச்சலின் பின்பே முழுமையாக பிரஜாவுரிமை பற்றிய திருப்திகரமான முடிவுகள் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இருப்பு தொடர்பான அவ் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ள நிலையில் அதற்கெதிரான மறைமுக நிகழ்ச்சி நிரல்கள் அரங்கேறிய வண்ணமே உள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

ஓர் சமூகம் தங்கள் பண்பாட்டு அம்சங்களை தக்க வைக்கின்ற போதே அதற்குரிய தனித்துவ அடையாளமும் இருப்பும் உறுதிப்படுத்தப்படும். அந்த பண்பாட்டு அம்சங்களை நிலைபெற செய்வதற்கு அச் சமூக கலைகள் மீதான கவனம் இன்றியமையாததாகும். அந்த வகையில் இருநூறு வருடங்களுக்கு முன்பு புலம் பெயர்ந்த மலையக மக்கள் பாரம்பரிய உணர்வுடன் தன் சமூகம் சார் கலைகளை பாதுகாத்து வருகின்றனர். அத்தகைய கலைகளுள் காமன் கூத்து கலை மிக முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. அவ்வாறு முக்கியத்துவம் பெறுவதற்கு ஏதுவான காரணங்கள் பற்றி அறிய விளைவதும் சமகாலத்தில் அக் கூத்தின் போக்கு பற்றியும், எதிர்காலத்தில் அவை ஆவணப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி தெளிவுறுத்துவதாகவே இக் கட்டுரையின் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

### தெய்வீக கலையாக காமன் கூத்து

பக்தி உணர்வுடன் மாசி மாதம் பிறையன்று காமன் பொட்டலில் காமன் ஊன்றுதல் இடம் பெறும். காமன் ஊன்றுதல் தொடக்கம் காமனை தகனம் செய்து மூன்றாம் நாள் காமனுக்கு உயிர் வழங்கும் நிகழ்வு வரை பக்தியுணர்வுடனே ஒவ்வொரு நிகழ்வும் இடம் பெறும். அண்ணாவியாரின் (காமன் மாஸ்டர்) வழிகாட்டலில் இடம் பெறும் இந்நிகழ்வில் சம்பந்தப்பட்டுள்ள சமூகத்தினரின் ஒன்றித்த ஈடுபாடு இக் கூத்து அரங்கேற்றத்தில் முக்கிய கணிப்பிற்குரியதாகும். இக் கூத்துடன் தொடர்புபட்ட வேடங்களை தரிப்பவர்கள், அப்பாத்திரங்களுடனும் ஏனையவர்கள் இக் கூத்துடன் ஒன்றித்த நிலையில் அவ் உணர்வின் உச்ச கட்டமாக "மருள்" வருவதுண்டு. மேலும் தெய்வீக உணர்வுகளுக்கு மதிப்பளித்து விரதம் அனுஸ்டித்தல், நேற்றிக்கடன் வைத்து, எண்ணிய காரியம் சித்தி கிடைத்த பின்பு அவ் நேற்றிக் கடனை நிறைவேற்றல் போன்ற விடயங்களில் இக் கலையை

நேசிக்கின்ற தரப்பினர் பார்க் கின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே இக் கூத்துடன் தொடர்புபட்ட குருவை தெய்வீகத் தன்மை பொருந்தி பார்க்கின்ற தன்மையையும் அவதானிக்கலாம். மூத்த கலைஞர் ஒருவரிட மிருந்து குருவாக்கு பெற்றுக் கொள்வதற்கு சீடர்கள் பலவேறு பிரயத்தனங்களை மேற் கொள்ள வேண்டியிருக்கும். காமன் மாஸ்டர் (அண்ணாவியார்) ஒருவர் இலகுவில் தங்கள் சிஷ்யர்களுக்கு குருவாக்கை வழங்குவது அபூர்வம். தன் மனதைவென்ற ஒருவருக்கு, அல்லது மிக நெருங்கிய உறவினர்களுக்கு, மட்டுமே குருவாக்கை வழங்கி வந்துள்ளார் கள். பெரும்பாலும் குடும்ப ரீதியான ஆதிக்கத்தை கருதி தங்களுடைய புதல்வர் களுக்கு மாத்திரமே குருவாக்கை வழங்கு வார்கள். இவ்வாறு குருவாக்கை பெற்றவர்கள் மாத்திரமே தொடர்ந்து காமன் கூத்து கலையை நடத்தி வந்துள்ளனர். குரு தட்சனை செலுத்துதல், குருவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம் செலுத்துதல். குருவுக்கு உபசாரம் செய்தல் நிகழ்வுகளில் குரு மீதான முக்கியத்துவத்தை தெளிவுறுத்துவதாக அமைகின்றன எனலாம்.

கந்த புராணத்துடன் குமார கடவுளின் தோற்றத்தை ஏற்படுத்துவதற்கு சிவன் பார்வதி ஆகியோரிடம் காமத்தை ஏற்படுத்துவதற்கு காமன் முக்கிய பாத்திரமாகக் கொள்ளப்படு கிறான். சிலப்பதிகாரத்தில் காமன் விழா தொடர்பிலும் நாச்சியார் திருமொழியில் காமன் தொடர்பிலும் கூறப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். காமனை கிரேக்கர் "இரான்" என்றும் ரோமானியர்கள் "கூப்பிட்" என்றும் பெயரிட்டு காமனுடன் தொடர்புடைய கதைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி வந்துள்ளனர். இந்துக்களின் நம்பிக்கையாக முத்தொழில்களுக்கும், செல்வங்களை வழங்குவதற்கும் தனித்தனியே கடவுள்கள் இருப்பது போல் ஆணும் பெண்ணும் ஒருயிர் ஈருடலாக வாழ்ந்து தங்கள் இனத்தை விருத்தி செய்வதற்கு ஏற்ற சக்தியை வழங்குவதற்கான கடவுளாக காமன் போற்றப்படுகிறான். காமனுக்கு பல்வேறு பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அவனது தோற்றம் பற்றி பல்வேறு வகையாக சித்திரிக்கப்படு கின்றன. புராணங்கள் பலவற்றில் காமனுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளன.

மேற்கத்தேய கலாசாரங்களிலும் இந்திய கலாசார அம்சத்திலும் காமன் ஏற்றுக் கொள்ளப்பட்டவனாகவும், விமர்சனத்திற் குட்பட்டவனாகவும் சித்திரிக்கப்பட்டு வந்துள்ளான். இந்திய மரபின் வழிவந்த மலையகத்தவர்களின் கவனிப்பில் காமன் எவ்வகையில் காட்டப்படுகின்றான் என்பது பற்றி காமன் கூத்து கலையை உற்று நோக்குவதன் வாயிலாக அறிய முடிகிறது. இந்திய நாகரீக மரபின் தோற்றம் தொடர்பாக புவியியல் ரீதியிலான தொடர்புபடுத்தலோடு இமயமலையின் தோற்றம், உயிர் பல்வகைமையின் தொடர்ச்சி நிலைபற்றிய ஆதாரப்பூர்வ கதையம்சத்தை மகாகவி காளிதாசரின் படைப்பான "குமார சம்பவம்" தெளிவுறுத்துகிறது.

இந்திரனின் வேண்டுகோளிற்கமைய சிவனின் தபசளிக்க துனிந்த மதன் ரதியிடம் விடைபெற பல்வாறு முயற்சிக்கிறான். சிவனின் மகிமையால் மதன் அழியப்போவது உறுதி என்பதை அறிந்த ரதி தபசளிக்க போகவேண்டாம் என வலியுறுத்துகிறாள். இந்நிலையில் தங்கள் தந்தையரின் உயர்வை கோடிட்டுக்காட்டி ஒருவரிலிருந்து ஒருவரின் உயர்வை சிவன், விஷ்ணு பற்றி முறையே ரதி, மதன் ஆகியோர் பாடல்களாக எடுத்துரைப் பதைக் காணலாம். மதன் தன் தந்தையின் உயர்வு குறித்தும், ரதியின் கேளிக்கைக்கு உள்ளான போது விஷ்ணு பற்றி உயர்வாக பாடல்கள் இசைப்பதையும் காணலாம்.

பச்சமுள்ள பெண் ரதியே
இக்கணமே என் தகப்பன்
பரந்தாமன் தன் பெருமை
நிரந்தரமாய் கேட்டிடுவாய்
பக்தரட்சகனெனும் முத்திக்கு
ஆதாரமான
பன்னவர் சகாயனெனும் வின்னோர்
மாயன் துதிக்கும்

எனத் தொடங்கி பத்மா சூரனுக்கு வரத்தை வழங்கி அவனிடமே சிக்கிக் கொள்ளும் சிவனை விஷ்ணு காப்பாற்றிய கதையை பாடலாக மதன் கூறுகிறான். அவ்வாறே மதனை நோக்கிரதியானவள்

அச்சுதனார் தன் மகனே
பச்சைக்கிளி வாகனனே
அரண்மேல் கணை தொடுக்க
பரமசிவனை ஜெயிக்க
ஆராலுக்காகாது நேராக இப்போது
அவருடைய தன் சமர்த்தும்
பாண்டு ரங்கன் சமர்த்தும்

எனத் தொடங்கும் பாடல் அடிகளின் வாயிலாக சிவனின் பெருமையை எடுத்துரைக்கிறாள்.

மதன் ரதி இருவருக்கும் இடையில் கருத்துக்கள் பரிமாறப்படுகிறது. மத மேன்மைகள் கூறப்பட்டும் கணவனை பெண்ணானவள் இழக்க நேரிடும் போது அவள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்தும், காதல் உணர்விலிருந்து பிரிவைத் தாங்க முடியாத வேதனைகளையும் இப்பாடல் களினூடாக அறிய முடிகிறது. பாடலினூ டாகவே கதை அம்சம் நகரும் நிலையில் லாவனி அமைப்பினூடாக மதன், ரதி உரை யாடல் தன்மை எடுத்துக் காட்டப் படுகிறது.

தென்றல் ரதம் நானெடுத்து
பெண்ணே பெண்ணே
அந்த தேவர் சபை போரனடி
கண்ணே கண்ணே
தென்றல் ரதம் நீர் எடுக்க
வேண்டாம் வேண்டாம்
அந்த தேவர் சபை நீரும் போக
வேண்டாம் வேண்டாம்
செங்கரும்பு வில்லெடுத்து
பெண்ணே பெண்ணே
அந்த சிவன் மீது போர்தொடுக்க
போறேன் போறேன்
ஐயா செங்கரும்பு வில்லெடுக்க
வேண்டாம் வேண்டாம்
அந்த சிவன் மீது போர்தொடுக்க
வேண்டாம் வேண்டாம்



காமன் கூத்தில் பாடப்படுகின்ற பாடல்கள் இயல்பான சொற்களுடன் ரசனையை ஏற்படுத்துவதையும் பல பாடல் களில் ஒவ்வோர் வரியும் ஒரே எழுத்தில் தொடங்குவதையும் சிறப்பம்சமாகக் கொண்டமைந்துள்ளதைக் காணலாம். எடுத்துக் காட்டாக ரதியை நோக்கி மதன் "ந" எழுத்தில் ஒவ்வொரு வரியும் தொடங்குமொறு அமைந்த பாடலொன்று,

நல்லதடி பெண்ணரசே வில்லடி
கொண்டோன் மகளே
நாராயணன் மருகிதோ நா வடிவழக
நாட்டில் உள்ள கன்னியர்க்கே
மேட்டிமையான கண்ணே
நடமாடும் சித்திரமே வடிவான ரத்தினமே
நாடியே தூதனுப்ப வாடியே நீயுமிப்போ
நாயமதாய் உரைத்து போகாதென தடுத்து
நாட்டமதாய் சொல்லவந்த வாட்ட
மென்ன உந்தனுக்கு
நலமான தேவரென்னை
பிறவானென்றறிந்து
நாடியே தூதனுப்ப வாடியே நீயுமிப்போ
நானே போய் இந்திரசபை மானே
அதை அறிந்து
நாயகியே வாரனென்றான் மாயன்
மகன் மன்மதனார்

இவ்வாறே சொல் இணைப்புகள் பாடலின் சிறப்பை ஏற்படுத்துவதாக அமைவதைக் காணலாம். கேட்பவரை எளிதில் கவரும் வகையிலும் பலவேறு உத்திகள் கையாளப்பட்டு பாடல் புனைவு திறமையை வெளிபடுத்தும் ஆற்றல்களை இப்பாடல்களில் காணலாம்.

## மொழித்திறனை வளர்க்கும் கலையாக காமன்கூத்து

மொழி புலமையும், வாதத்திறமையும் வளர்த்தெடுக்கும் வகையில் சொல்லாட்சி சிறப்பை வளர்க்கும் கலையாகவும் காமன் கூத்து கலை திகழ்கிறது. அண்ணாவியாரின் பாடல்கள், ரதி மதன் சார்பான குரல்களாக தர்க்கித்துக் கொள்வதாக அமைகிறது. மதன் எரிந்தான், மதன் எரியவில்லை என்ற வாதங்களுக்கு வலுச் சேர்க்கும் கருத்தியல் களும், தர்க்கிக்கும் திறன்களையும் வளர்த்தும் வந்துள்ளது. மொழிவளம், சொல்லாட்சி என்பனவற்றை வளர்க்கும் கலையாகவும் காமன் கூத்தை நோக்கலாம். மொழியை வளர்ப்பதற்கும், பாடும் திறன், பாடல் புனையும் திறன் என்பன்வற்றை வளர்க்கும் பணியில் பாடலாசிரியர்களின் வித்துவ செருக்கையும் மொழிபுலமையையும் காணலாம். விடுகதை கள், பழமொழிகள், மற்றும் நுண்ணறிவு தொடர்பான பரீட்சித்தல்களும் இக் கூத்தினூ டாக வளர்க்கப்படுமாற்றை காணலாம். எடுத்துக் காட்டாக எரிந்த கட்சி சார் பிரதி நிதிகள் எரியாத கட்சி தரப்பினரிடம் மொழி புலமையை பரீட்சிக்கும் வண்ணம்

ஐந்தாறு வண்டி மாட்டை ஓர்
ஆற்றங் கரையான் முழுங்குது பார்
அம்மியைத் தூக்கி தண்ணி தவளை
முழுங்குது பார்
வாத்தியாரை தூக்கி கீரைப் பாத்தி
முழுங்குதுப் பார்
கவியறிந்த வானவரே எந்தன்
செவிதனிலே சொல்லும்படி
கட்டுடைக்க வேண்டுமென்று
உன் கால்களிலே தெண்டமிட்டேன்

என்றவாறு வினாத் தொடுப்பதும் அவற்றுக்கு பொருளறிந்து விடையளிப்பதும்

தொடர்ந்து எரியாத கட்சி சார்பான குரலாக

கண்ணுமுண்டு வாயுமுண்டு
அது பெண்ணுமல்ல ஆணுமல்ல
கழுத்திலே மாலையுண்டு
நெழிந்த கால் கையுமில்லை
கவுந்தமில்லா மேனியது
கொஞ்சம் சிவந்திருக்கும் ரூபமது
மங்கையர்க்கு காடை வார்க்க
அது என்ன வசனமது?

எனப் புதிர் போடுவதும் மொழி வளர்ப்பின் ஓர் முக்கிய அம்சமாக திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும். நுன்னறிவு தொடர் பான பயன்படுத்துதலையும் பாடல்களில் காணலாம்.

தமிழ் பண்பாட்டு மரபில் ஆண், பெண் உறவு தந்த படிம முறைமையில் பரஸ்பர புரிதலை உணர்த்தும் வகையிலான அம்சங் கள் காமன் கூத்தில் எடுத்துரைக்கப்படுவதைக் காணலாம். இந்திர சபையின் கோரிக்கையை செவிமடுத்த நிலையில் மதன் ரதியிடம் உத்தரவு கேட்பதும், ரதியானவள் தன் நிலையை நினைத்து மதனை தடுப்பதும் வாழ் வியலில் ஆண், பெண் உறவில் ஒருவரை யொருவர் இழந்து வாழும் போது ஏற்படும் பாதிப்பையும், பிரிவுதரும் வேதனை ஏற்படுத்தும் தாக்கத்தையும் புலப்படுத்து கிறது. வாழ்வியலின் இல்லறம் போற்ற வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தும் முனைப்பினை காமன் கூத்து கொண்டு உள்ளது. பெண்ணானவள் நாசூக்காக தன் கணவனுக்கு அவன் இடர்படுகின்றபோது எடுத்துரைக்கும் வல்லமையையும் பெண்ணு டைய ஆலோசனையை பொருட்படுத்தாத போது நேருகின்ற பாதிப்பு நிலையையும் இருவரும் ஒருமித்து முடிவெடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் பணியையும் காமன் கூத்து ஆற்றுகிறது எனலாம்.

## பெண்ணிலை வாதத்தை முன்நிறுத்தும் கலையாக காமன் கூத்து

பெண்ணிலை வாத முனைப்பில் ரதி என்ற பாத்திரத்தினூடாக மதனின் ஆதிக்க துணிவு கருத்துக்களுக்கு மறுப்பு தெரிவிப் பதையும் முற்போக்கான சிந்தனை ஓட்டம் இருந்த போதிலும் மதனின் ஆதிக்க சிந்தனை மேலோங்கி ரதியின் கோரிக்கையை செவிமடுக்காது துணிந்த மதனின் ஆண் வர்க்கத்தின் செயற்பாடுகளினை வெளி படுத்தும் ஏகப் பிரதிநிதிகளாக காட்சிப் படுத்தப்படும் சமகால அல்லது இந்திய நாகரீக மரபின் தன்மையையும் வெளிப்படுத்தி நிற்பதைக் காணலாம். முற்போக்கு தன்மையை வெளிப்படுத்தும் வகையில் ரதி என்ற பாத்திரத்தினூடாக தன் கணவனுக்கு ஏற்பட்ட கொடுமையை எதிர்க்க துணிந்த வளாக புறப்படுகிறாள். உலக சிருஷ்டிப்பின் பிரதானியாக சித்திரிக்கப்படும் சிவன் தன் தந்தை என்ற போதிலும் எதிர்க்கத் துணிந்து மதன் இழந்த செய்தியின் பின் வேதனை யுறுவதும் அப்பாதிப்பின் தாக்கத்துடன் தனக்கு ஆதரவான ஓர் அணியை திரட்டு வதற்காக ஊர்வலம் செல்கிறாள். அவலச் சுவையுடன் ஒப்பாரி இசைத்து தனக்கு ஆதரவான பிரசாரத்தை மேற்கொள்வதைக் காணலாம். இச் சமூக அணித்திரட்டலில் பெண்ணின் இயங்கும், இயலும் தன்மைகள் வெளிப்படுத்தி நிற்பது குறிப்பிடத் தக்கது.

பெருந்தோட்ட பொறிமுறையில் தொழிலாளர் வர்க்கம் ஏகாதிபத்திய அசை வியத்தினுள் அகப்பட்டுள்ள நிலையில் அதற்கெதிரான மீள் எழுகையை வலி யுறுத்தும் முனைப்பாய் அமைந்த நிகழ்வு பார்ப்பவரையும், கேட்பவரையும் துயரத்துடன் துணிந்தவரோடு இணையும் தன்மையை ஒப்பாரியினூடாக வலியுறுத்தப்படுவதையும் காணலாம். மலையக நாட்டுப்புற மரபில் ஒப்பாரி பாடல்கள் வாழ்வியலை வெளிப் படுத்துவதில் முனைப்பு பெறுகிறது. கணவனை இழந்த பெண் தூற்றுவதற்குரிய வளாக போற்றும் நிலைபற்றி ரதியின் குரலாக,

ஆத்தில வாழை வச்சி
அளர பழுத்தாலும்
ஆகாத வாழையினு என்னை
ஆத்தில தள்ளுவாங்க
குளத்தில வாழை வச்சி
குளுர பழுத்தாலும்
கோவமுள்ள வாழையினு
குளத்தில தள்ளுவாங்க

என யதார்த்தம் பற்றி கூறுவதும் இழப்பு தந்த வேதனை,

ஆத்தங் கரையோரம்
அண்ணம்போல் குந்தியிருந்தேன்
அம்பு மேல் அம்பு போட்டு
குண்டு மேல் குண்டு போட்டு
இந்த அம்புபட்ட காயமது
அணைய நாள் செல்லுமையா

என்றவாறும் அமைகிறது.

நியாயத்துவத்துக்கான பெண்ணிலைவாத குரல் சிவனை சிந்திக்கவைப்பதும் ரதியின் வெற்றியாக அமைகிறது. பெண்களின் முற்போக்கு தன்மையை வலியுறுத்தும் கலையாகவும் காமன் கூத்து திகழ்கிறது. ஆணாதிக்கத்தை எதிர்க்கும் சக்தியாக சிவனை எதிர்த்த சக்திகள் சிறு தெய்வங்களாக போற்றப்படும் மரபின் வழியில் அவ் வழிபாட்டு முறை மலையகத்திலும் ஊடுருவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ் முனைப்பின் வெளிப்பாடாகவே சிவனை எதிர்த்த உமையின் வழி தோன்றலாக மாரியம்மன் வழிபாடு முக்கியத்துவம் பெற்றுள்ளதைக் காணலாம்.

## ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை தூண்டும் கலையாக காமன் கூத்து

சமூக அடக்கு முறைக்கெதிரான வலியுறுத்தலை, அணிதிரட்டலை உளவியல் ரீதியில் ஏற்படுத்தும் முனைப்பையும் காமன் கூத்து உட்பொருளாக கொண்டமைந்தமைக்கான ஆதாரங்கள் பல உள்ளன. "கலை என்பது கலைஞனுக்கு ஏற்பட்ட பாதிப்பாகும் இங்கு தொழிலாளி கலைஞனாகிறான். எனவே தொழிலாளியின் பாதிப்பு கலைஞனின் பாதிப்பாக வெளிப்படுத்தப்படுகிறது." என்பதோடு "கலையின் மூலம் தன் அகவுணர்வை அதன் அழுத்தத்தை வெளிப்படுத்தும் புறகருவியாக அவன் கலைகளை காண்கிறான்". என்ற இரா. நித்தியானந்தனின் கூற்றுக்கமைய இக் கலையினூடாக தன்னுள் சுமந்துள்ள அடக்குமுறை தந்த அவலம் தொடர்பிலான மீட்டுருவாக்கத்திற்கான தயார்படுத்தலுக்கு சமூக அணிதிரட்டும் உணர்வை ஏற்படுத்தும் முனைப்பும் காமன் கூத்தினூடாக கையாளப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

துணிவும் எதிர்ப்புணர்வும், தன்னம்பிக்கையையும் ஒடுக்கப்பட்ட சமூகமொன்றில் வளர்த்தெடுக்க வேண்டிய அவசியத்தையும் உணர்வை ஏற்படுத்தும் கைங்கரியமும் இக் கூத்தினூடாக கட்டியெழுப்பப் பட்ட வெளிப்படுத்தலின் உண்மையை புரிந்து கொண்ட நிலையில் இக்கலை தொடர்பான பற்றுதல் மலையக மக்களிடத்தில் ஊடறுக்கப் பட்டுள்ள வாய்ப்புகள் அதிகம் உள்ளன. பெருந்தோட்ட பொறிமுறையில் பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் நலன் மட்டுமே முக்கியத்துவம் வழங்கப் பட்டுள்ள நிலையில் தோட்ட துரைமார்கள் தொடக்கம் கங்கானிமார் வரையிலான கட்டமைப்பு ஆதிக்கம் செலுத்துதலில் அடிமைத்தனம் பொருந்திய வாழ்வியலுக்கு மட்டுமே சொந்தமான துன்பியல் வாழ்வை மீட்டெடுக்கும் வகையில் சிவனையே எதிர்க்க துணிந்த மதன் பாத்திரத்தை நேசிப்பதனூடாக எதிரிப்பியக்கத்திற்கு இக்கூற்று பிரசாரமாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.



## சாதிய எதிர்ப்புணர்வை தூண்டும் கலையாக காமன் கூத்து

தனியே எதிர்ப்புணர்வு மட்டுமில்லாமல் வாழ்வியலுக்கு தேவையான அனைத்து அம்சங்கள் தொடர்பிலான வழிகாட்டல் இக் கூற்றில் உள்ளடக்கப் பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். மதன் ஓர் போராளியாகவும், போராட்டத்தில் தன்னை இழக்க துணிந்தவனாகவும் கொண்டிருந்த ஆன்மபலம் குறித்த சித்திரிப்பு கவனிக்கத் தக்கதாகும். ஆதிக்க செல்நெறியை உடைக்க முற்படும் முற்போக்கு எண்ணமும் போராட்டம் ஒன்றின் இழப்பும் விடிவுக்கான வழியை புதுப்பிக்கும் தெம்புடையது என்ற சிந்தனை வளர்க்கப்படுவதும் சிறப்பம்சமாகும். பொருளாதார பொறிமுறையின் ஏற்றத்தாழ்வுகள் சமூக வர்க்க அடக்கு முறைக்கெதிரான போர்குண பாய்ச்சலை ஏற்படுத்துவதுபோல் தொழிலாளர் வர்க்கத்துக்குள்ளே சமூக கட்டமைப்பு சாதிய பிரிவினையை ஆமோதித்த சமூகமாக திகழ்ந்து வந்துள்ளது. இச் சாதிய அமைப்பை அங்கீகரிக்கின்ற, அதனை வளர்த்தெடுக்கும் கைங்காரியத்தில் முதலாளி வர்க்கம் அக்கறைக் கொண்டுள்ளது. சொத்து சேர்க்கையில் இறையாகும் தொழிலாளர் வர்க்கத்தை நசுக்கவும், நாசூக்காக பயன்படுத்தும் வகையில் பிரிவினைவாதத்தை வளர்த்தெடுத்து குளிர்காய முற்பட்டு வந்துள்ளமை தொடர்பில் கசப்பான வரலாற்றை மலையக சமூகம் கொண்டுள்ளது. மாரியம்மன் வழிபாடு தொடர்பான ஆதிக்கம் தோட்டங்களை சேர்ந்த உயர் சாதியினரை

சார்ந்ததாகவும் காணப்படுகின்ற நிலையில் விரக்தி மனப் பான்மையின் உந்துதலோடு ஏனைய சிறு தெய்வங்கள் மீதான கவனம் தாழ்த்தப் பட்டவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அவ்வாறு காணப்பட்ட அம்சத்தின் வெளிப்பாடாகவே காமன் கூத்து கலை தாழ்த்தப்பட்ட சாதியினரின் கவனத்தை வென்றதாகவும் காணப்படுகிறது. சாதிய ஒடுக்குமுறையின் எதிர்வாத சிந்தனையை ஊடறுக்கும் வகையில் காமன் கூத்து நேசிக்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் பல உள்ளன. மேல் சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதியினரை கோயிலினுள் அனுமதிகப்படாத கசப்பான சம்பவங்களும் இடம் பெற்றுள்ளது. துரைமார்களின் கைக்கூலிகளாக திகழ்ந்த கங்கானிமார்கள் மேல்சாதியினர் என்ற வகையில் இக்கட்டுப் பாட்டை தோட்டங்களில் நிலைபெற செய் திருந்தனர். கோயிலினுள் உள் நுழைய முடியாத வேதனையின் வெளிப் பாடாய் முற்றத்தினுள் தங்கள் வழிப்பாட்டு முறையினை தீர்மானித்துக் கொண்டதுடன் அதனுடன் கலைகளையும் வளர்ப்பதில் தங்கள் பங்களிப்பை வழங்கி வந்துள்ளனர். மேல் சாதியினரின் செயற்பாட்டுக்கு எதிர் செயற் பாடாகவே இவ் வழிபாட்டு முறை கலை வளர்ப்பு என்பன இடம் பெற்று வந்துள்ளது எனலாம்.

ஓர் அசைவியக்கத்துக்குள் மட்டுப்படுத்தப் பட்ட மக்கள் கூட்டம் தங்களுக்குள் ஓர் தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டும் நெறியாள்கையின் கீழ் வழிப்படுத்தப்பட்டும், அழகியல் எதிர்புணர்வுகளை வளர்த்துக் கொண்டும் நேசிக்கப்பட்ட கலையாகவும் காமன் கூத்து திகழ்கிறது. புராண, இதிகாச, வரலாற்று, ஒழுக்கம் தொடர்பிலான மேற் கோள்களை சுமந்ததாகவும் இக் கூத்தின் உள்ளடக்கம் திகழ்கிறது.

1. மகாபாரதம்
2. இராமாயணம்
3. சிறு தொண்டர் புராணம்
4. நளவெண்பா
5. அரிச்சந்திரன் புராணம்
6. இரணியன் கதை
7. தக்கன் கதை

போன்றவற்றின் உப கதைகள் இக் கூத்துடன் தொடர்புபடுகின்றது. வாழ்வி யலுக்கு தேவையான ஒழுக்க நெறிகளை போதிக்கும் பணியை ஆற்றுவதையே பிரதான நோக்காகக் கொள்ளப்படுகின்றது. இக் கூத்தில் பல வேடங்கள் காட்டப்படுவதுடன் உலக உற்பத்தி தொடர்பிலான புவியியலோடு தொடர்புடைய அம்சங்களும் சித்திரிக்கப் படுவது உயிரின் உற்பத்தி பஞ்சபூதங்களின் தொழிற்பாட்டு ஆதிக்கம் தொடர்பிலான அறிவை பாமர மக்களிடம் ஏற்படுத்தும் முனைப்பும் இடம்பெற்றுள்ளது எனலாம். தர்க்க திறனுடன் அறிவியல் தொடர்பான சிந்தனை வாதமும் போதிக்கும் வகையில் ஓர் பாடத்திட்டமாக காமன் கூத்து வடிவமைக்கப் பட்டுள்ளது.

ஒழுக்க நெறியினை வலியுறுத்தும் காமன் கூத்து வாழ்வியலில் காமம் எந்தளவு முறையாகக் கொள்ளப்படல் வேண்டும் என்பதை போதிக்கின்றது. இறைவனா னாலும் காமம் முறையாக கைக்கொள்ளாத போது ஏற்படும் விளைவுகள் தொடர்பிலான வலியுறுத்தலை போதிக்கின்றது. இது ஒரு வேளை அக்காலத்தில் நிலவிய பலதார திருமணத்தை தடுக்கும் கைங்காரியமாகவும் அமையப்பெற்றுள்ளது. தேவலோகமாக இருப்பினும் காமம் முறையற்று பிரயோகப் படுத்தப்பட்டதன் விளைவை பிரமன், சிவன் போன்ற பாத்திரங்களினூடாக வெளிப்படுத்து வதையும் காணலாம்.

## பல்வேறு கலைகளின் சேர்க்கையாக காமன் கூத்து

காமன் கூத்தினூடாக பல கலைகள் வளர்க்கப்பட்டு வந்துள்ளன. இசைக்கலை முக்கிய இடம் வகிக்கின்றது. இக் கூத்தின் ஒவ்வோர் அங்கமும் பாடலினூடாகவே நகர்த்தப்படுகின்றது. நல்ல குரல் வளம், இசை ஞானம் உடையவர்களே அண்ணா வியர்களாக திகழ்ந்துள்ளனர். இக்கூத்து வளர்ப்பின் கடப்பாடுகள் இவர்களின் வசமே காணப்பட்டது. இக்கூத்தில் பாடகர்கள் இல்லாவிட்டால் கூத்தே இல்லை என்ற நிலை காணப்படுகின்றது. இக் கூத்தில் பாடகர்களை போலவே இசைக்கலைஞர்களின் பங்கும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை யாக திகழ்கிறது. இப்பாடல்களுக்கு தப்பிசையே பிரதான இடம் வகித்தது. சால்ராவின் ஆதிக்கமும் இக்கூத்தை

களைக்கட்டச்செய்தது.

ஆடற் கலை இக் கூத்தின் முக்கிய ஓர் அங்கமாக திகழ்ந்தது. இசைக்கேற்ற பாடல்களுக்கு தாளக்கட்டுடனான ஆடல் பார்வையாளர்களை கவர்ந்துள்ளது. பல்வேறு பாத்திரங்களின் பங்களிப்பு இருந்த போதிலும் ரதி மதன் ஆகிய பாத்திரங்களின் ஆட்டமே கூடுதல் செல்வாக்கு பெற்றுள்ளது. சந்தோசம், துக்கம், தர்க்கம், என்பவற்றை வெளிப்படுத்துமாறு ரதி மதனின் ஆட்டம் காணப்படும். அரை வட்டத்தில் எதிர் எதிரே இருந்து உலாவரும் ஆட்டம் பல்வேறு தப்பிசைக்கமைய மாறுபடும். ஒயிலாட்டத்தின் தன்மையும் ஓர் ஆட்டமாகக் காணப்படும். ஏனைய பாத்திரங்கள் சாதுவான நிலையிலும் யமன், தூதன், வீரபத்திரர் போன்ற பாத்திரங் களின் ஆட்டங்கள் பய உணர்வை தூண்டுவ தாகவும் அமையும். சபையோரை கவர்ந்த ஆட்டமாக குறத்தி நடனமும், மூர்க்கமான நிலையில் ரதி மதனின் ஆட்டத்தின் நடுவே சபையோருக்கு நகைச்சுவை உணர்வை ஏற்படுத்தும் பபூன் ஆட்டமும் குறிப்பிடத்தக்க தாகும். எனவே பல்வேறு ஆடல்களின் சேர்கையாகவும் இக் கலை திகழ்கிறது.

ஒப்பனைக்கலை, உடைவடிவமைப்பு கலை, ஓவியம் என்பன குறித்து தனித்து மதிப்பிடக்கூடிய வகையிலும் இக் கலைகளை வளர்க்கும் பணியையும் இக் காமன் கூத்து வளர்த்துள்ளது. வாதிடும் கலை, அரங் கமைப்பு கலை, நிர்மான கலை, ஆபரணங் களை உருவாக்கும் கலை என்பவற்றையும் வளர்த்துள்ளது. எனவே பல்வேறு கலை களின் கூட்டாகவே இக் கூத்து நேசிக்கப்பட்டு வந்துள்ளது.

ஒட்டு மொத்தமாக பார்க்கின்ற போது காமன் கூத்தானது ஆன்மீகம், அறிவியல், கலைகள், ஒழுக்கவியல் என்ப வற்றை வாழ்வியலுக்கு போதிக்கும் தன்மையை கொண்டுள்ளது. காமன் கூத்தானது ஓர் சமூகம் ஒன்றின் வாழ்வியலை யும், வாழ்வியல் அம்சத்தையும் போதிக்கும் கலையாக வளர்க்கப்பட்டு வந்துள்ளதுடன் மலையக சமூகத்தின் முக்கிய வரலாற்று ஆவணமாகவும் திகழ்கின்றது. இக் கலை பாதுகாக்கப்பட வேண்டியதொன்றாகும். இக் கலை தொடர்பான சமகால கண்ணோட்டம் பற்றி பார்வையை செலுத்த வேண்டியது அவசியமாகும்.

மலையகத்தின் சகல பிரதேசங் களிலும் காமன் கூத்து அரங்கேற்றப்பட்டு வந்துள்ள நிலையில் தற்போது மிகக் குறைந்தளவே தோட்டங்களிலேயே அரங்கேற்றப்படுகிறது.

1. தாழ்த்தப்பட்ட ஓர் சமூகத்தவரின் கலை என்ற மனநிலை

2. இக் கலையை ஏனையவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் மனநிலை காமன் மாஸ்டர்களிடம் இல்லாமை

3. இக் கூத்தில் பங்கெடுப்பது கௌரவ குறைச்சல் என படித்தவர்களின் மனநிலை.

4. மலையக மக்கள் மத்தியில் கூட்டுணர்வு, ஒற்றுமையுணர்வு குறைந்து போயுள்ளமை.

5. சமூக கட்டுக்கோப்பிலிருந்து விடு பட்டுள்ள தன்மை

6. நாகரீக மோகத்தில் இக் கூத்து கலைஞர்களை ஏளனமாக பார்க்கின்ற தன்மை

7. தொலைக்காட்சி திரைப்படங்களின் ஆதிக்க தன்மை

போன்ற காரணங்களினால் இக்கலை மலையக சமூகத்தவர்களிலிருந்து ஒதுங்கி போய்க் கொண்டிருக்கும் துர்ப் பாக்கிய நிலை காணப்படுவது கவனிக்கத் தக்கதாகும்.

இருந்த போதிலும் இக் கலையை நேசித்த கலைஞர்கள் பல்வேறு சிரமங் களுக்கு மத்தியில் பொருளாதார சிக்கல்கள் மற்றும் சமூக பங்களிப்பு குறைவான நிலை யிலும் உயிரோட்டமாக நிகழ்த்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும். அக் கலைஞர்கள் இன்றுமே தொழில் நுட்பங்கள் வளர்ந்த போதும் மரபு நிலை மாறாமல் இருக்கும் தேயிலை தொழிற்துறையைப் போலவே அக் கலைஞர்கள் கௌரவப்படுத்துவதில்லை.

## பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாக காமன் கூத்து

காலவோட்டத்திற்கேற்ப காமன் கூத்து கலையை பாதுகாக்கும் நோக்கில் நவீன நுட்பத்தை கையாண்டு உள்ளக அரங்கை மையப்படுத்தும் முயற்சியில்

ஈடுபட்டுவருகின்றனர். இவ்வாறு இக்கலையை மேடை வடிவத்திற்கு கொண்டுவரும் முயற்சிக்கு அமரர்களான திரு.வி.டீ. தர்மலிங்கம், திரு.திருச்செந்தூரன் ஆகியோர் எழுபதுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். இக் கூத்தில் ரதி பாத்திரத்தை ஆண்களே ஏற்று வந்துள்ளனர். மேடை வடிவத்திற்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் முதன் முறையாக பிராஷிஸ் அகுந்தா என்ற பெண்மணியே பெண் வேடமிட்டுள்ளதாக வே.இராமர் குறிப்பிடுவார். தொடர்ந்து உள்ளக அரங்கை மையப்படுத்தும் முயற்சியில் கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலை, ஸ்ரீ பாத தேசிய கல்வியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் ஈடுபட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மற்றும் அகில இலங்கை தமிழ் தினப் போட்டி நிகழ்வுகளில் கூத்து அரங்கேற்றம் ஓர் போட்டி நிகழ்வாக காணப்பட்டது. அக்கால கட்டங்களில் பாடசாலைகளில் காமன் கூத்து தொடர்பிலான கவனம் மத்திய மாகாண பாடசாலைகளுக்கிடையே காணப்பட்டமை வரவேற்கத் தக்கது. துரதிஸ்டவசமாக முக்கியத்துவம் இழந்து செல்லும் தமிழ் மொழித்தின போட்டி நிகழ்வில் இருந்து கூத்து தொடர்பான போட்டி நிகழ்வுகள் தவிர்க்கப்பட்டமை கவலைக்குரியதாகும். இருந்த போதும் தரம் 6 தமிழ் மொழி பாடத்திட்டத்திலும் உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டத்திலும் இணைத்துக் கொள்ளப்பட்டமை நாட்டின் சகல பிரதேச மாணவர்களும் காமன் கூத்து தொடர்பில் கவனத்தை செலுத்துவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது எனலாம்.

மலையக கவிதை இலக்கியத்தில், வீதிப்பாடல் யுகம் திருப்புமுனைகளை ஏற்படுத்திய காலம் அக்காலத்தில் மலையகத்தில் செங்கொடி சங்க புரட்சிகர கலை இலக்கிய குழுவினர் காமன் கூத்தில் உள்ள பலவீன அம்சங்களை, காமன் கூத்தின் சாயலில் காமன் கூத்திற்குரிய இசை தாள அமைப்புகளை கையாண்டு தோட்டங்கள் தோறும் "கீமன் கூத்து" என பெயரிட்டு தெருக் கூத்துகளையும், மேடை நாடகங்களையும் நடாத்தி வந்துள்ளனர். மேலும் அண்மைக் காலங்களில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம் மற்றும் புதிய ஜனநாயக கட்சியினர்கள் வீதி நாடகங்களை காமன் கூத்திற்குரிய இசைகளுடன் நடாத்தி விடுகின்றனர். காமன் கூத்திற்கு பயன்படுத்தப்படும் தப்பு வாத்தியமே இந்நாடகங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

கடந்த சில வருடங்களாக மேடை அமைப்பிற்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டு வந்த பிரான்சிஸ் ஹெலன் தலைமையிலான மலையக மக்கள் கலை அரங்கத்தை சேர்ந்த கலைஞர்கள் கடந்த வருடம் இடம் பெற்ற செம்மொழி மாநாட்டில் காமன் கூத்தை அரங்கேற்றி பெருமை சேர்த்துள்ளனர். குறிப்பாக இவ் வாய்ப்பின் பின்னணியில் பேராசிரியர். கா.சிவத்தம்பி அவர்களது பங்களிப்பு குறித்து வியந்து கூறுவார்கள்.

மலையக மக்களின் வரலாற்று ஆவணமாக திகழும் இக் கலையை ஆவணப்படுத்தும் பிரயத்தனத்தில் மலையக கலை இலக்கிய அமைப்பினர் கவனம் செலுத்தி வருகின்றமை கவனிக்கத்தக்கது. அந்த வகையில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம் புசல்லாவை இராமன் துரை தோட்டத்தில் அமைந்துள்ள மலையக அருங்காட்சியகத்தில் இக் கூத்து தொடர்புடைய ஆவணங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை, காமன் கூத்திற்கு பயன்படுத்தும் உடைகள், ஆபரணங்கள் பாடல்கள் என்பனவும் பாதுகாக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடதக்கதாகும்.

ஸ்ரீ பாத தேசிய கல்வியற் கல்லூரி உப பீடாதிபதி திரு. S. இராஜேந்திரன் அவர்களது வழிகாட்டலில் வருடாந்தம் ஆசிரியர் பயிலுனர்களைக் கொண்டு சமூகவியல் கண்காட்சியை நடத்தி வருகின்றனர். அக்காட்சியில் காமன் கூத்து தொடர்பான அரும் பொருட்கள் காட்சிப்படுத்தப்படுகின்றது. இக் கண்காட்சி மலையகத்திற்கென்ற பெரியதொரு அருங்காட்சியகம் அமைக்கப்படல் வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது.

## ஆய்வு முயற்சிகளில் காமன் கூத்து

இருநூறு வருடகால புலம் பெயர் சமூகமொன்றின் வாழ்வியலோடும் வரலாறோடும் மிக தொடர்புபட்ட ஓர் கலையாக விளங்கிய காமன் கூத்து தொடர்பிலான ஆய்வு முயற்சிகள் அரிதாகவே காணப்படுகின்றது. சு. திருச்செந்தூரன், மு. சிவலிங்கம்,

மாத்தளை வடிவேலன், சு.முரளிதரன், லெனின் மதிவானம், ரா.நித்தியானந்தன், அ. லெட்சு மணன் ஆகியோர் சுயாதீனமாக ஆய்வில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்க தாகும்.

பல்கலைக்கழக மட்டத்திலிருந்து பேராசிரியர் காரை செ.சுந்தரம்பிள்ளை, பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர். சி. தில்லைநாதன், கலாநிதி துரை மனோகரன், பேராசிரியர் மௌனகுரு, திருமதி. சோதிமலர் ரவீந்திரன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். மேலும் பல்கலைகழக மட்டத்தில் மாணவர்கள் ஆய்வில் ஈடுபட்டுவருகின்றனர்.

காமன் கூத்து தொடர்பிலான ஆய்வுத்தளம் அகலச் செல்ல வேண்டியது அவசியமாகும். அண்மைக்காலமாக பல்கலைக்கழக பட்டத்தை பெறுவதற்கென மாணவர்களின் நுனிப்புல் மேய்ந்தாற் போல் காமன் கூத்து தொடர்பிலான தரவுகளை வழங்கிவருகின்றனர். இந்திய பல்கலை கழகங்களில் வெளிவாரி மாணவர்களாக பயின்று ஆய்வுத் தகவல்களை வழங்குவதில் பல்வேறு பலவீன அம்சங்கள் காணப்படு கின்றது. இவ்வாறான காரணங்களினால் காமன் கூத்து தொடர்பான குறைத்து மதிப்பிடக்கூடிய நிலைமை தோன்றுகின்றது. எனவே இவ்வாறான குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.

உதய சூரியன் இதழில் "காமன் கூத்து கலையறிவோம்" என்ற அ.லெட்சுமணன் எழுதிய தொடர் கடந்த ஒரு வருடமாக வாராந் தம் தொடர்ந்து வெளிவந்தது. தற்போது அத்தொடர் நூலாக்கப்பட முயற்சி மேற் கொள்ளப்படுகின்றது. அத் தொடர் காமன் கூத்தின் முழுமையையும் திருப்தியாக ஓரளவு பதிவாக்கியுள்ளமை குறிப்பிடதக்கது. இந்நூலின் வருகை மேலும் காமன் கூத்து தொடர்பிலான ஆய்வுப் பாதையை விஸ்திரப் படுத்துவதாக அமையும் எனலாம்.

ஓர் சமூகமொன்றின் வரலாற்று ஆவணம் என்ற வகையில் இக்கூத்து கட்டிக் காக்கப்படும் நோக்கில் முழுமையாக ஆவணப்படுத்த வேண்டிய கடப்பாட்டில் பின்வரும் வகையில்

1. காலங்கா்லமாக காமன் கூத்து கலையில் ஈடுபடும் கலைஞர்களுக்கு தகுந்த கௌரவத்தை வழங்குதல், அவர்கள் தொடர்பிலான ஆவணங் களை பேணுதல்.
2. பல்கலைகழகங்களில் பயில் நிலைக் குரிய கலையாக காமன் கூத்தையும் இணைத்துக் கொள்ளல்.
3. பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங் களில் கலை இலக்கிய அமைப்பு களில் நவீன உத்திகளை கையாண்டு உள்ளக அரங்கை மையப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளல்.
4. காமன் கூத்தை தோட்டங்களில் உண்மை நிலை மாறாத வகையில் அரங்கேற்றல்.
5. காமன் கூத்து தொடர்பில் ஆய்வுத் தளத்தை விஸ்தரித்தல்.
6. காமன் கூத்தில் பாடப்படும் பாடல் களின் உள்ளடக்கம் தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்ளல்.
7. மலையகத்திற்கென தனியான அருங்காட்சியகம் அமைத்தல் மற்றும் தேசிய அருங்காட்சியத்தில் காமன் கூத்து தொடர்பிலான ஆவணங்களை பாதுகாத்தல்.
8. இக்கலையில் ஈடுபடும் கலைஞர்கள் ஒன்றிணைந்து செயலூக்கம் பொருந்திய வகையில் செயற்படல்.

ஒடுக்கப்பட்ட சமூகமொன்று விடிவை தேட வேண்டிய அவசியம் உணர்த்தப்பட்டு எழுச்சிக்குறிய எண்ணங்களை புரையோட செய்வதில் பங்களிப்பு செய்த கலை என்ற வகையில் ஆவணப்படுத்த வேண்டிய அவசியத்தை கொண்டிருக்கின்றது. இக் கூத்தினூடாக மலையகத்தவரின் இருப்பிற் கான உறுதிப்படுத்தல் அவசியமென உணரப் படுகின்ற காலகட்டமாக காணப்படுகின்றது. திட்டமிட்ட இன அழிப்புகள் சமூக செறிவை குறைப்பதற்கு திட்டமிட்ட செயற்பாடுகள் அத் திட்டமிட்ட செயற்பாடுகளின் வெற்றி நமக்கு போதிக்கும் அபாயகர சூழ்நிலை என்ற நிலையில் உலகமைய வேகத்தில் புரள வேண்டிய அவசியம் காணப்பட்ட போதிலும் இன அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் இவ்வாறான கலைகள் மலையக மக்களின் பொக்கிஷமாக பாதுகாக்கப்படல் வேண்டும் என உறுதியாக கூறலாம். •



# மேற்கில் தோன்றிய உதயம்...

மு.சிவலிங்கம்

வாசுவின் தாயார் இன்று காலையிலிருந்தே நச்சரித்துக் கொண்டிருந்தாள்...

"அடி மேல அடி அடிச்சா அம்மியும் நகரும்.. இன்னைக்கும் போயி கேட்டுப் பாரு தம்பி.. என்னா சொல்றான்னு பாப்போம்..!"

தோட்ட நிர்வாகத்தில் வீடு அல்லது குடிசையாவது கட்டிக் கொள்வதற்கு இடம் கேட்டு வந்த நாட்கள் இந்த புதன்கிழமையோடு நூறு நாட்களைத் தாண்டியிருக்கலாம்...

வாசு தாயின் சொல்லுக்குத் தலையை ஆட்டிவிட்டு, சட்டையை மாட்டிக் கொண்டு சங்கத் தலைவரைத் தேடிப் போனான். அவரை அழைத்துக் கொண்டுதான் தோட்டத்து ஆப்பிசுக்குப் போக வேண்டும்.

– இன்று புதன்கிழமை... தொழிலாளர்கள் "ஆப்பீஸ் நாளு" என்பார்கள். தோட்ட நிர்வாகம் "லேபர் டே" என்று சொல்லும்.

முன்பெல்லாம் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்திடம் தங்களது பிரச்சினைகளைப் பேச வேண்டுமானால், "தோட்டத்துரை" என்ற நிர்வாகியின் ஆப்பிஸ் அறையின் ஜன்னலூடாகத்தான் தலையை நீட்டிப் பேசவேண்டும்.

ரயில்வே ஸ்டேசனில் சந்து வழியாக பயணச் சீட்டு வாங்கும் சிஸ்டத்தைப் போன்று அமைந்திருக்கும்.

மழை வந்து விட்டால், ஆப்பீஸ் கூரையினடியில் அண்டிக் கொள்ள வேண்டும். இப்போது அந்த பரிதாப நிலைமைகளெல்லாம் மாறிப்போய் விட்டன.

தொழிலாளர் பேச்சு வார்த்தை நாளில், தனியான ஒரு அறையில் நிர்வாகியின் முன்னால் அமர்ந்து பேசுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.. இப்போதெல்லாம் சின்ன துரை, பெரிய துரை என்ற பேச்சு வழக்குகள் கிடையாது..! மெனேஜர், சுப்பிரண்டன் என்ற வார்த்தைகள் வந்து விட்டன.

பேச்சு வார்த்தை அறையில்... போடப்பட்டிருந்த நாற்காலிகளில் ஐந்து யூனியன் தலைவர்களும் அமர்ந்திருந்தனர்.. அவர்களருகில் சம்பந்தப்பட்டத் தொழிலாளர்களும் சமூகமளித்திருந்தனர்.

வாசு தோட்ட பெரிய கிளாக்கரையும், கண்டக்டரையும் மாறி மாறி முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். "இந்தத் தடவ இவனுங்க ரெண்டு பேரும் தொரைகிட்ட ஏதாவது போட்டுக் குடுத்தானுங்கன்னா... வூடு பூந்து ஒதைச்சிட்டுத்தான் போவேன்..!" என்று பற்களை நற நறவென்று கடித்துக் கொண்டிருந்தான்... கிளாக்கரும், கண்டக்டரும் வாசுவின் முகத்தைப் பார்த்து அச்சமடைந்திருந்தனர்... வாசு நல்லவனாக விருந் தாலும், சண்டியனுக்கு சண்டியனாக விருப்பவன்..

தோட்ட நிர்வாகி, தொழிலாளர்களுக்கு ஏதாவது அற்ப சலுகைகளைச் செய்து கொடுப்பதற்கு முன் வந்தாலும், தோட்ட உத்தியோகத்தர்கள் அதை தடை செய்து வருவதே வழக்கமாக இருந்து வருகின்றன. இது, ஒரு மரபு ரீதியான "மேனியா" வாகவே இருந்து வருகின்றது. இந்த "மரபு நோய்" ஆரம்ப காலத்து பெரிய கங்காணிகளை காலங் காலமாக பீடித்திருந்தது போலவே இன்றுவரை தோட்டங்களில் பரவி நிற்கின்றது.

வாசுவின் வீடு சம்பந்தமாக, யூனியன் தலைவர் சின்னையா, தோட்ட மனேஜரிடம் பேசத் தொடங்கினார்.. "சேர்..! வாசு எட்டு

வருசமா இந்தத் தோட்டத்துல வேல செய்றான்.... கலியாணம் முடிஞ்சி ஒரு கெழமயாச்சு,.! ஒரே வூட்டுக்குள்ளதான் தங்கச்சி ரெண்டு பேரு... தம்பி ஒருத்தன் அம்மா, அப்பா மொத்தமா அஞ்சி பேரு... இப்போ வாசுவும் அவன் சம்சாரமும்... எப்பிடி சேர் "ஒன்னா மன்னா இருக்க முடியும்...?"

"காம்பரா இல்ல தலவர்..! காம்பரா இருந்தா தாரதுதானே...? ஒங்களுக்கு சொன்னா வெளங்குறது இல்லத்தானே..!" மெனேஜர் எரிச்சலாகப் பதில் கொடுத்தார்.

வாசு பொறுமையிழந்தவனாய்... "சேர்..! கலியாணம் முடிஞ்சி ஏழு நாளு முடிஞ்சிப் போச்சி.. நானும் என் சம்சாரமும் "தனியா" இருக்கணுமுன்னா... குடும்பத்துல எல்லாரும் வேலைக்குப் போகணும்.. நாங்க ரெண்டு பேரும் வேலைக்குப் போகாம வீட்டுல இருக்கணும்... இது எனக்கு மானப் பிரச்சினையா இருக்குது சேர்...!" என்று மனம் நொந்து பேசினான். அவனது துயரக் குரல் தொண்டையை அடைத்தது.

மெனேஜர் அந்த இளைஞனின் பரிதாபகரமான நிலைமையை உணர்ந்து மௌனமாகினார். அவரது மௌனத்தை அறிந்த ஏனைய யூனியன் தலைவர்கள் கச முச வென முணு முணுத்தனர்.. "என்னடா..! தொரப்பயல்.. சாவக் கெடக்கும் ராமு கெழவன் வூட்டையும்... பாப்பாத்திக் கெழவி வூட்டையும் குடுக்க யோசிக்கிறானோ..? வுடக் கூடாது..! வுடக் கூடாது..!" என்ற நிலைப் பாட்டில் அந்த இடத்திலேயே கூட்டணி அமைத்துக் கொண்டனர்..

தோட்டத் தொழிலாளர்களின் வசிப் பிடப் பிரச்சினைகள் வந்து விட்டால், தோட்டத் துக்குள் நோய்வாய்பட்டு சாகப் பிழைக்கக் கிடக்கும் கிழடு கட்டைகள் மண்டையைப் போட்டதும், காலியாகும் லயத்து அறைகளை பகிர்ந்துக் கொடுப்பது தான் நிர்வாகத்தின் வழமை... தரிசு நிலங்களில் சுயமாக மண் குடிசையோ, சீமெந்து அறைகளோ கட்டிக் கொண்டால், பொலிஸ் நடவடிக்கை, நீதி மன்ற வழக்கு, வேலை நீக்கம்... என மூன்று தண்டனைகள் கிடைத்து விடும்..!

"சேர்..!சொல்ல வெக்கமாயிருக்கு,. ஜோடி ரெண்டும் மாட்டுப் பட்டியில மரத்தட்டு அடிச்சி அதுல படுத்துக்குறாங்க... மனசு வச்சி ஒரு நல்ல முடிவ குடுங்க.. சேர்..! பத்து தகரத்த குடுத்து மரக்கறி தோட்டத்துல ஒரு குடிச போட்டுக்கச் சொன்னா...வாசு பிரச்சின முடிஞ்சுடும்.. சேர்..!" தலைவர் வில்லாய் வளைந்து கெஞ்சிக் கேட்டதும் ஒரு வகை ராஜதந்திரமாகும்..

மெனேஜர் மௌனமாகத் தலையைத் தாழ்த்தி வெற்றுப் பேப்பரில் வட்டம் போட்டுக் கொண்டிருந்தார். அவரது மௌனம், சம்மதத் துக்கு அறிகுறி என்பதையறிந்த கண்டக் டரும், பெரிய கிளாக்கரும் இணைந்த குரலில் சின்னையா தலைவரைப் பார்த்து இவ்வாறு கேட்டனர்.."ஒரு ஆளுக்கு வீடு கட்டிக்க தகரமும், நெலமும் குடுத்தா.. தோட்டத்துல இருக்கிற முன்னூறு பேரும் கேப்பாங்க.. அப்ப என்னா பண்ணுறது..?"

மெனேஜரை இந்த "லோ பொயின்டு" தூக்கி வாரிப் போட்டது..

"வீட்டுப் பிரச்சன இன்னிக்கி பேச ஏலாதூ..! வேற தண்ணிபிரச்சன... கக்கூஸ் பிரச்சன இருந்தா.. மத்த தலவருமாருங்க பேசலாம்..!" என்றார்.

மற்ற யூனியன் தலைவர்மார்கள், சின்னையா தலைவர் கேட்கும் வீட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கூடாது என்றே எதிர்பார்த்தனர்.. அது இன்று முடிந்து போனதால் உள்ளூர மகிழ்ந்துப் போனார்கள்..

பாவம் அவர்கள்... ஒரு தொழிலாளி யின் வசிப்பிடப் பிரச்சினை எல்லா தொழிலா ளருக்குமான பொதுப் பிரச்சினையாகும்.. இதை கட்சி யூனியன் பிரச்சினையாக்குவது முட்டாள்தனம் என்பதை உணர விரும்புவ தில்லை... இப்படி எல்லா தொழில் உரிமை களிலும் தங்களது யூனியன்களைத் தூக்கிப் போட்டு நொறுக்கி விடுவார்கள்..

சின்னையா தலைவர் முகம் சிவந்து வியர்த்துப் போய் நின்றார். வாசு.. கண்டக் டரையும், பெரிய கிளாக்கரையும் பார்த்தப் பார்வை... அவர்களுக்கு வயிற்றைக் கலக்கி யது... வாசு... முரடன்... ஆனால் அறிவாளி... ஒரு முறை மாற்றலாகிச் சென்ற ஒரு கண்டக்டர் அவனை "வாடா.. போடா..." என்று ஏசியதற்காக... நூற்றுக் கணக்கான தொழிலாளர் முன்னிலையில் அவன் ஓங்கி அறைந்து... ஒரே அறையில் பல்லொன்றை கொட்டிவிட்ட சம்பவம் மறக்க முடியாதது.!

அந்த சம்பவத்தை கிளாக்கரும், கண்டக்டரும் நினைத்துக் கொண்டார்கள்..

***

தோட்டத்து பங்களா..

மெனேஜர் தோட்டக்காரனைக் கூப்பிட்டு,"மாட்டுக்கு சொகம் எப்படி..?" என்று கேட்டார்.

"டக்டரு ஊசி போட்டுட்டுப் போனாரு சேர்...! மாடு இப்ப எழும்பி நிக்குது..! பயப்பட ஒன்னுமில்ல... ரெண்டு மாட்டுக்கும் "காள" போட்டாச்சி..! வரப் போற அஞ்சி மாடுகளுக் கும் புதுசா பட்டி கட்டணும்.. கண்டக்டரு 100 தகரம் குடுத்திருக்காரு..!" என்று படபட வென்று மாட்டுக்காரன் பொரிந்து தள்ளினான்... தோட்டத்துக் களஞ்சியச்சாலையில் வைத் திருக்கும் பல நூறு கூரைத் தகரங்களை, தோட்ட நிர்வாகிகள் தங்கள் சொந்தத் தேவைக்கு எடுத்துக் கொள்வார்கள்... தொழி லாளர்களின் ஒழுகும் கூரை களுக்கு மாற்றுக் கூரைத் தகரங்கள் வழங்குவது குதிரைக் கொம்பாகவிருக்கும்.

மெனேஜர் பங்களா காட்சியறையில் போய் உட்கார்ந்தார். காட்சியறை முப்புறமும் ஜன்னல்கள் கண்ணாடி சட்டங்களா லானவை. உயர்ந்த மலையிலிருக்கும் அந்த பங்களாவிலிருந்து, கண்கள் எட்டும் தூரம் இயற்கையின் அழகை ரசித்துக் கொண்டிருக் கலாம்... தூரத்து நீல மலைத் தொடர்கள்... தேயிலைக் குன்றுகள்... நீர் வீழ்ச்சிகள்... நெளிந்து வளைந்து ஓடும் நதியின் நீண்ட பயணம்.. இவ்வாறு பெருந் தோட்டப் பயிர்ச் செய்கைக்காக வந்த வெள்ளைக்காரர்கள், இலங்கை மலை நாட்டை இவ்வளவு எழில் கொஞ்சும் பூமி யாக்கிச் சென்ற அற்புதங்கள் காலத்தால் அழியாதவை..

அப்பு தேநீர் ட்ரொலியைத் தள்ளிக் கொண்டு வந்தான்... மூன்று மணிக்கு அருந்த வேண்டிய தேநீரை, மெனேஜர் ஆறு மணியளவில்தான் இன்று எடுக்கிறார். இன்று "லேபர்டே"... சுணங்கி விட்டது...

"துரைசாணி" "பெரியதுரை"யின் அருகில் வந்தமர்ந்தாள். ஆவி பரக்க கரட் கிழங்கு அவியலில், "பெட்டிஸ்", மீன் கட்லட்ஸ் யாவும் வாசனையுடன் மேசையில் இருந்தன..

கோப்பி, தேயிலை காலத்தில், தமிழ் நாட்டு கைக் கூலி கங்காணிகள், கை, கால்களைத் துண்டு துண்டுகளாக மடித்து "சலாம்" போட்டு, வில்லாய் வளைந்து கனம் பண்ணும் சொற்களாக உபயோகித்த "துரை... துரைசாணி" என்ற ஆதிக்கப் பெயர்கள், வெள்ளைத் துரைகளுக்குப் பிறகு, இந்த நாட்டு கறுப்புத் துரைகளுக்கும், இந்த மரபு வழிச் சொற்கள் இன்றும் புழக்கத்தி லிருந்து வருகின்றன.

***

பகல் பொழுதிலும், வேலை நேரங் களிலும், சமையல் சாப்பாட்டு நேரங்களிலும் தாய் வீட்டில் தங்கியிருந்து விட்டு, இரவு படுக்கைக்கு மட்டும், மனைவி மீனாவோடு, வாசு மாட்டுப் பட்டிக்குப் போய் விடுவான். மண்ணெண்ணெய் போத்தல் பந்தத்தைப் பிடித்துக் கொண்டு,மகனும், மருமகளும்



இரவு குளிரில் போர்வையைப் போர்த்திக் கொண்டு, மாட்டுப் பட்டியை நோக்கிச் செல்லும் அவலத்தைப் பார்த்து குருசாமி கண் கலங்கினார்.

"நாளைக்கே வேணுமுன்னாலும் மகனுக்கு மரக்கறி தோட்டத்துல ஒரு காம்பிரா கட்டிப்புடுவேன்.. நாசமாப் போன வனுங்க முழுக் குடும்பத்துக்குமே வேல நிப்பாட்டிப் புட்டா என்னா பண்றது..?" என்று அவரது மன வோட்டம் சூளுரைத்து அமுங்கிப் போனது..

***

அழகுக் கொழுந்து மலை... கவ்வாத்து வெட்டி... மட்டம் ஒடித்து... புது மலையாகி ஒரு வருடம் முடிந்து விட்டது.. இந்த மலையை "அழகுக் கொழுந்து மலை"

என்று அடையாளப் பெயர் வைப்பது தொழில் முறையாகும்..

மீனா அழகுக் கொழுந்து மலையில் வேலை செய்பவள். இந்த மலையில் கொழுந்து ஆய்வதற்கு குமரிப் பெண்களும்... முப்பது வயதுக்குட்பட்ட பெண்களுமே வேலைக்கமர்த்தப்படுவர். முப்பதுக்கும், ஐம்பதுக்கும் உட்பட்ட பெண்களுக்கெல்லாம் "பழைய மலை கொழுந்துக்காரிகள்" என்ற பட்டப்பெயரும் உண்டு..!

மீனாவிடம் தேவகி "கிண்டி கிழங்கு" எடுத்துக் கொண்டிருந்தாள்... அவள் திருமண மாகப் போகிறவள்... அவளுக்கு அதே தோட்டத்தில் ஆள் இருக்கிறான்.. அவள் நச்சரித்துக் கேள்விகளுக்கு இனிக்க.. இனிக்க... பதில் சொன்னாள் மீனா.

அவளுக்கு முதல் இரவு நடக்க வில்லை...! முதல் பகல்தான் நடந்தது..! ஏழாம் நம்பர் கவ்வாத்து மலையில் விறகு பொறுக்கிக் கட்டி வைத்துவிட்டு, எட்டாம் நம்பர் மானாத் தோப்பு புல் வெளியில்தான் தனித்திருந்தார்கள்...! அழகழகான பட்டாம் பூச்சி... அழகழகான பட்டாம் பூச்சி... அவைகளுக்குத்தான் அவர்களின் சங்கதி தெரிந்திருக்கும்..! திரும்பவும் அந்த இரண்டு "இளசுகளும்" மனம் இனிக்க... வாய் இனிக்க... குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்கள்...

அடிப்படை வசதியற்ற தொழிலாளர் குடும்பம் என்பதற்காக, திருமணமாகிய புதுத் தம்பதிகள், வீடு வாசலுக்கப்பால், கானகத் தில்... புல்வெளி தோப்பில் முதல் உறவை நடத்திய துயரக் கதைகள், அவளுக்குத் துயரமாகத் தெரியவில்லை.. இளம் வயது.. துன்பங்கள், கொடுமைகள், அவமானங்கள் யாவும் பழகிப் பழகிப் பழக்கமாகி... அவை யாவும் சாதாரணமாகவே போய்விட்டன...!

***

கடந்த ஏழு நாட்களாக வாசு வேலைக்கு வரவில்லை... 6 ம் நம்பர் கருப்பந் தைலத் தோப்பை, "புல்லுக் கானு தோப்பு..." என்பார்கள்... அழகான சோலையாக அந்த தோப்பு காட்டுத் தொங்கலில் இருக்கிறது.. வானத்தைத் தொடுமளவுக்கு நீண்டு நெடி துயர்ந்த யூக்கலிப்ட்டஸ் மரங்கள் வளர்க்கப் பட்டிருக்கும். இவை தொழிற்சாலைக்குத் தேவைப் படும் விறகுக்காக வளர்க்கப்படுகின்றன...



ஏகாந்தமான காட்டுச் சூழல்... மான், மரை, முயல் அலையும் புல்வெளி பிரதேசம்... அங்கே ஒரு அழகான மண் குடிசை எழும்பியிருந்தது... குடிசையைச் சுற்றி உள்ள மரங்களில் பூங்கொடிகள் சரங்களாகத் தொங்கிக் கொண்டிருந்தன. சாப்பிடக் கூடாத காட்டுக் கனிகள் கொடி செடிகளில் காய்த்து அழகுக் காட்டிக் கொண்டிருந்தன..

இந்தக் குடிசை, தோட்ட நிர்வாகத் தின் சட்டம் ஒழுங்குக்கு எதிராக கட்டப் பட்டிருக்கும் குற்றச் செயலாகும்... என்ற குற்றச்சாட்டுக்களை எழுதி மனேஜரிடம் கொடுத்து, உடனே 6 ம் நம்பர் புல்லுக் கானு தோப்பில் வாசு கட்டியிருக்கும் குடிசையை, அவன் குடி போகுமுன்னர் உடைக்கச் சொல்லும்படி, தோட்ட பெரிய கிளாக்கர், கண்டக்டர், காவல்காரன், எதிர் யூனியன் தலைவர்மார்கள் எல்லோரும் துரையிடம் போய் முறையிட்டு நின்றார்கள்..

சற்று முன்புதான் மெனேஜர், வாசு உண்மையிலேயே மாட்டுப் பட்டியில் தங்கி யிருக்கிறானா என்பதை போய் பார்த்து விட்டு வந்திருந்தார்.

இப்போது இவர்களின் நடவடிக்கை யால் ஜீப்பை எடுத்துக் கொண்டு, அவர்களை யும் ஏற்றிக் கொண்டு காட்டுத் தோப்பை நோக்கிப் புறப்பட்டார். தோப்பு குடிசையில் புகை கிளம்பிக் கொண்டிருந்தது. குடிசை வாசலில் வாசுவும், மீனாவும் பொங்கல் வைத்துக் கொண்டிருந்தார்கள்... இன்றைய அந்தி பொழுதுதான் குடியேறுவதற்கு நல்ல நேரம்... காட்டு குடிசையில் கிரகப் பிரவேசம்...!

மெனேஜர் கூட்டத்தோடு போய் குடிசையைப் பார்த்து அசந்துப் போனார். மானா புற்களால் வேயப்பட்டக் குடிசை... "திஸ் இஸ் சம்திங் லைக் கபானா லைப்...! டூரிஸ்ட்ஸ் லைக் வெரி மச்..!" என்று கிளாக் கரையும், கண்டக்டரையும் பார்த்து ஆங்கிலத்

தில் சொன்னார். இந்த மாதிரி காட்டுக்குள் வாழ்வதற்கு அவரும் மனதுக்குள் ஆசைப் பட்டுக் கொண்டார். அவர் குடிசையைச் சுற்றிப் பார்த்துவிட்டு, உள்ளே நுழைந்து நோட்ட மிட்டார். சட்டிப் பானைகள், தட்டு முட்டுச் சாமான்களோடு அந்த குளிர்ந்த ஈரலிப்பான நிலத்தில் பாய் படுக்கைகளும் பரிதாபகர மாகக் காணப்பட்டன...

வாசுவை அதிகாரத் தொனியில் அதட்டி அழைத்தார் மெனேஜர்.

நிர்வாகத்துக்கெதிராக நடந்துக் கொண்ட குற்ற உணர்வில் வாசுவும், மீனாவும் வந்து நின்றனர்.. "எவனாவது குடிசையப் பிரிச்சான்னா.. வெட்டித் தள்ளிப்புட்டு ஜெயிலுக்குப் போவேன்...!" என்று வாசு சொல்லியதை மீனா அந்த நேரத்தில் நினைத்துப் பயந்தாள்..

துரையின் பின்னால் கண்டக்டர், கிளாக்கர், காவல்காரன் ஏனைய யூனியன் தலைவர்கள் யாவரும் புல்லுக் கானில் குவிந்திருந்தார்கள்.. குடிசையை உடைப்ப தற்குத் தயாராக இரண்டு தொழிலாளர் களையும் கண்டக்டர் அழைத்து வந்திருந்தார். குடிசை உடைக்கப்பட்டதும், எரித்துச் சாம்பலாக்குவதற்கு மண்ணெண்ணெய்யும் கொண்டு வந்திருந்தார்கள்..!

"கூரையைப் பிரிச்சுப் போடு..!" என்று வாசுவைப் பார்த்து மெனேஜர் சத்தமாகச் சொன்னார். அவன் கொஞ்சமும் எதிர் பார்க்காத அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது.. "நாளைக்கு ஆப்பீசுக்கு வா...! பழையத் தகரம் கொஞ்சம் தாறேன்... கூரையப் போட்டுக் கோ...!" என்றார்.

தோட்ட வரலாற்றில் என்றுமே எதிர்பார்க்காத ஒரு முட்டாள் காரியம் இது வென்று மெனேஜரோடு வந்த கூட்டம் கடுங் கோபத்துடன் முணு முணுத்தது... மனதுக் குள் கண்டனம் தெரிவித்தது. அவர்களது முகங்கள் கருத்துச் சுருங்கின...

அந்த கருப்பந்தைல தோப்பின் மரங்களுக்கூடாகத் தெரியும் சிவந்த வானத்தில் அந்திச் சூரியன் கீழே இறங்கிக் கொண்டிருந்தான்.

அந்த மேற்கு வண்ண வெளிச்சம், வாசுவுக்கும், மீனாவுக்கும், உதயமாகத் தோன்றியது..!

# காயப்பட்டவர்களின் எழுத்து

காலம் செதுக்கிய
காயங்களின் பதிவுகளை
வனைய எத்தனித்தபோதுதான்
கைவிரல் நுனியிலிருந்து
எழுத்துகளாகப் பீறிட்டுப் பாய்ந்தன அவை.

அதன்போது...
போரில் செத்த சடலங்களின்
சதைப்பிண்டங்களாய் எழுத்துக்கள்
அடுக்கப்பட்டன.
வேசியின் தேகத்திலுள்ள
கீறல்களினால்
கோடுகள் கட்டமைக்கப்பட்டன.
வன்கலவிக்குள்ளான பெண்ணின்
குதத்திலிருந்து
வழிந்தோடிய
இரத்தமாகவிருந்தன
அவற்றின் நிறம்.



பிழியப்படுகின்ற
தொழிலாளியின்
வியர்வைத்
துளிகளாக
பிரவகித்து ஓடின
சில.
கடிகார ஓசையாய் இராமல்
ஏழையின் இதயத் துடிப்புகளாய்
ஒலித்துக்கொண்டிருந்தன.

சிலவற்றை எவ்வளவுதான்
திருத்தியெழுதியபோதும்
நிர்மலமாகவே கிடந்தன.

இறுதிவரியில் எழுதிக்கொண்டிருந்தபோது
ஒட்டுமொத்த எழுத்துக்களுமே
கண்ணீரை சொரிந்தவாறு
பயத்துடனே சிறுநீரையும்
கழித்துக்கொண்டிருந்தன.

–நேரு கருணாகரன்



எஸ்.ராமையா

# நாட்டார் பாடல்கள் மூலம் அடையாளம் காணப்படும் மலையக மக்கள்



மலையக மக்களின் வரலாற்றை பின்னோக்கி பார்ப்போமானால், அவர்களின் வாழ்க்கை வரலாறு மிகவும் துன்பகரமாகவே இருந்துள்ளதெனலாம். அவர்களின் துன்பங்களிலும் இன்பமும் இருந்திருக்கின்றன என்பதை நாட்டார் பாடல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். தமது துயரங்களையும் அடிமைத்தனத்தையும் வாய்மொழிப் பாடல்கள் மூலம் எடுத்துக் காட்டியுள்ளனர். ஆரம்ப காலங்களில் தேயிலைத்தோட்டங்களுக்கே அழைத்து வரப்பட்டனர். தேயிலைக்காலத்திற்கு முன்னே கோப்பித் தோட்டங்களில் வேலை செய்தனர்.

கோப்பிச் செடிகள் அழிவுற்ற பின்னர் அதற்கு ஈடாக தேயிலை பயிரிடப்பட்டது. ஆகவே இந்தியத் தமிழர்களின் வாழ்க்கை வரலாறு கோப்பித்தோட்டங்களிலே ஆரம்பமாகின என்று கூறலாம். கோப்பித் தோட்டங்களில் வேலை செய்த போதும் தேயிலைத்தோட்டங்களில் வேலை செய்த போதும் தமது துன்ப துயரங்களை வாய்மொழிப் பாடல்கள் மூலம் தெரியப்படுத்தியுள்ளனர். இவ்வாறான பாடல்களையே மலையக இலக்கியம் என்று அழைக்கப்படுகின்றது. இவர்களது வாழ்க்கை வரலாறு மிகச் சோகமானது.

தமிழ்நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு இவர்கள் வாட்டி எடுக்கப்பட்டனர் என்றும் சொல்லலாம். அவர்களின் பட்டினிச்சாவு நாடு விட்டு நாடு செல்ல உந்தியது. இவர்களின் பஞ்ச வாழ்வை சாதகமாக எடுத்துக் கொண்ட வெள்ளையர்கள் கங்காணிகள் மூலம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். ஆரம்பத்தில் இவர்கள் இலங்கை என்பது அறியாத ஒரு நாடாகும். கண்டிக்கு போறோமுனுதான் இவர்கள் பயணத்தை ஆரம்பித்தனர். அப்படி கண்டியூர் வந்து

தேயிலைத்தோட்டங்களில் வேலை செய்யத் தொடங்கினர். முன்னர் ஒருபோதும் அனுப வித்திராத மழையும் குளிரும் அட்டை, கொசுத் தொல்லைகளும் இவர்களை விரக்தியடையச் செய்துள்ளது. பின்வரும் பாடல்கள் மூலம் இவர்களின் ஆதங்கத்தை அறிந்துகொள்ளலாம்.

**கண்டி கண்டி ஏங்காதீங்க**
**கண்டி பேச்சு பேசாதீங்க**
**சாதிகெட்ட கண்டியிலே**
**சங்கிலியன் கங்காணி**

என்றும்,

**அட்டை கடிக்குதடி**
**அழகு ரத்தம் சிந்துதடி**
**செல்லு கடிக்குதடி**
**சீரழிந்த கண்டியிலே**

எனப் பாடியவர்கள் தாம் ஊரை விட்டு வந்ததை நினைத்து இவ்வாறு பாடுகிறார்கள்.

**சீரான சீமை விட்டு**
**சீரழியக் காடு வந்தோம்**
**கூடை தலை மேலே**
**குடி வாழ்க்கை கானத்திலே**

கோப்பிக்காலத்திலேயும் இவர்கள் இன்னல் பட்டுள்ளனர். அந்தக்காலங்களிலும் இவர்கள் தமது வாய்மொழிப்பாடல்களை பாடியுள்ளனர்.

**கோப்பி பழுத்துருச்சு**
**கொண்டு போக நாளாச்சு**
**சீமை தொரைகளெல்லாம்**
**சிரிக்கிறாங்க சன்னலிலே**

கோப்பி அறுவடை செய்து வெளிநாட்டுக்கு வெள்ளையர்கள் கொண்டு செல்கையில் இவர்கள் சந்தோஷம் அடைந்தனர் என்பதற்கு மேற்கூறிய பாடல் சான்றாகும்.

இங்கு இன்னொரு தகவலையும் பதிவு செய்ய வேண்டியுள்ளது. அதாவது இவர்கள் தொழில் செய்ய அழைத்து வரப்பட்டபோது தமது கலை கலாசாரங்கள் மதக்கோட்பாடு களையும் தன்னகத்தே கொண்டு வந்து உள்ளனர்.

அப்படி வந்தவர்கள் நல்ல நடிகர் களாக பாடகர்களாக எழுச்சி மிக்க போராட்டக்காரர்களாகவும் இருந்துள்ளனர். இவர்களின் எழுச்சி பிற்காலத்தில் மலையக சமுதாயம் சிறந்து வாழ வகுத்துள்ளது எனலாம். காடுகள் அழிக்கப்பட்டு பாதைகள் அமைக்கப்பட்ட பின்னர், பாதை இரு புறங்களிலும் பூ மரங்களும் வாகை மரங்களும் நடப் பெற்றன. அம்மரங்கள் தமது தூக்கு மரங்கள் என்று நினைத்து பின்வருமாறு பாடியுள்ளனர்.

**சாலையில் ரெண்டு மரம்**
**சர்க்காரு வைச்ச மரம்**
**ஓங்கி வளர்ந்த மரம்**
**ஒனக்கும் எனக்கும் தூக்கு மரம்**

தேயிலைத் தொழிற்சாலை கட்டிய பின் பெண்கள் இது பற்றி சந்தோஷத்துடன் இப்படிப் பாடுகிறார்கள்.

**இஸ்டோரும் கட்டியாச்சு**
**இன்சீனும் பூட்டியாச்சு**
**ஊவட்ட பெண்டுகளா**
**இலை பொறுக்க வந்திடுங்க**

இவர்கள் வேலை மட்டும் தெரிந்தவர் கள் அல்ல, காதல் புரியவும் அறிந்தவர்கள் என்பதை காதற் பாட்டுக்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**மல்லியப் பூவே**
**மணமுள்ள ரோசாப் பூவே**
**கண்ணு வழிப்பூவே ஒன்னை**
**கண்டு வெகுநாளச்சு**

என்று ஆண் பாட,

**ஆளு கறுத்தாலு**
**அரை மனைக்கு ஏத்தாலு**
**ஆளோடு போகும் போது நான்**
**ஆரை விட்டு கூப்பிடட்டும்**

என்று பெண் பாடுகிறாள். இதற்கு பதில் சொல்லும்வகையில் ஆண் பாடுகிறான் இப்படி,

**மாமன் மகளே**
**மருதப்பிளாச் சோலையே**
**ஏலாம் கிராம்பே – ஒன்ன**
**என்ன சொல்லிக் கூப்பிடுவேன்**

அதற்கு அந்தப் பெண்,

**வெங்கல ரோதையிலே**
**வேலை செய்யும் என் சாமி**
**வெத்திலை வெணுமுனா**
**வெளியே வந்து கேளுமையா**

என்று பாடுகிறாள். இவ்வாறு காதற் பாட்டுக்கள் மட்டுமே பாடவில்லை. தாம் வேலை செய்த கஷ்ரம் காரணமாக இப்படிப் பாடுகிறான் ஓர் ஆண்மகன்,

**அந்தனா தோட்டமுனு**
**ஆசையா நானும் வந்தேன்**
**ஓர மூட்டை தூக்கச் சொல்லி**
**உதைக்கிறாரே கண்டாக்கையா**

இது மட்டுமல்ல தாம் தோட்டங்களுக்கு குடும்பமாய் வந்து வேலை செய்தோம் இந்த மண்ணை வளப்படுத்த உயிர்தியாகம் செய்த அண்ணனைப்பற்றி பெண் பாடுகிறாள். - இந்தப் பாடல் மூலம் நாம் அறிந்து கொள்ள முடியும். இம் மலை நாட்டை களனிகளாக ஆற்றிய பெருமை இந்திய வம்சா வழி மக்களையே சாரும்.

**ஊரான ஊர் இழந்தேன்**
**ஒத்த பனைத்தோப்பிழந்தேன்**
**பெயரான கண்டியிலே**
**பெத்த தாயை நான் மறந்தேன்.**

பெற்ற தாயை இழந்தது மட்டுமல்லாமல் சொந்த அண்ணனையே இழந்தேன் என்பதற்கு இப்பாடல் சான்றாகும்.

**கூனி அடிச்ச மலை**
**கோப்பி கன்னு நட்ட மலை**
**அண்ணனை தோத்த மலை**
**அந்தா தெரியுதடி**

மேற்கூறிய பாடல்கள் யாவும் வாய் மொழிப்பாடல்களாகவே இருந்தன. ஆனால் இவையாவும் எழுத்துருவில் இடம் பெற்றுள்ளன. இது மலையக மக்களை அடையாளம் கண்டு கொள்ள உதவியாக இருக்கின்றது என்பதில் ஐயம் இல்லை. ●

# எறும்புகள்

அவைகள்
சுதந்திரத்தின் வெளியெங்கும்
சுவாசித்தபடி திரிந்தன.

எனது வாசலோரம்
தானியங்களை சுமந்து நகரும்
அவற்றின் நீண்ட
ஊர்வலங்களைப் பார்த்திருக்கிறேன்.

உழைப்பின் வேர்களிலிருந்து
சந்தோஷங்களாலும்
கனவுகளாலும்
அவைகள் தம் வாழ்வின் கூட்டை
கட்டியிருந்தன

ஆயிரங்கள் கடந்த இரவுகளும்
ஆரேழு தலைமுறைகளுமாக...

பூக்கன்று ஒன்றின் நடுகையில்
ஒருநாள் அதன் கூடுகள்
உடைந்து சிதைந்த போது தான்

அவை தமக்குள்ளே
புலம்பிக் கொண்டிருந்தன

அவைகளின்
இரப்பு பற்றியும்
சுதந்திரம் பற்றியும்

**-மு.கீர்த்தியன்**

# காற்றாடி பறக்க முடியாத காற்றுகள்

காற்றுகள் வீசுகின்றது
அசையாத இலைகளும்
மரங்களும்
மயான அமைதியாய் இருக்கின்றது

காற்று வீசுவதாக சொல்லப்படுகின்றது
காற்று வீசத்தான் செய்கின்றது
ஆனாலும் எதுவும் அசைவது இல்லை

காற்றாடிகள் பறக்க முடியவில்லை
அதன் இயக்கத்தில்
எந்த கோளறுகளும் இல்லை
பலுதுமில்லை அப்படியும்
காற்றாடிகள் இயங்க வில்லை
காற்றுகள் ஏமாற்றுகின்றது
ஏமாந்துபோன
காற்றாடிகள் பறக்க முடியாது
தவிக்கின்றன

காற்று இருந்து என்ன செய்ய
எல்லாம் மாயையாக இருக்கிறது
காற்று இருக்கின்றது
காற்றாடி அசைவதில்லை
பெயரளவில் காற்று
வெற்றிடமாகவே கிடக்கின்றது
காற்றை நம்பி ஏமாந்த பட்டியல்
நீளுகின்றது.

**- எஸ்.பி. பாலமுருகன்**

அல் அஸ்மேத்

# தலைமை



“இன்னைக்கி வெள்ளிக் கெழமைங்க!...” என்று, போகப்புறப்பட்ட கண்டக்ட்டரிடம் ஞாபகப்படுத்தினார் மீராஸாஹிப் கங்காணி.

“ஓ!... கங்காணி பள்ளிக்குப் போகணுமில்லியா!... சரி, சில்வாக்கிட்ட மலயக் குடுத்துட்டு கங்காணி போறது!... இன்னைக்கி காடு போகணும்! சில்வாக்கிட்ட சொல்லீட்டுப்போறது!” என்றுவிட்டுக் கண்டக்ட்டர் ஐயா கொழுந்து மலையிலிருந்து இறங்கத் தொடங்கினார்.

“சரிங்க,” என்ற கங்காணி, “இருக்கிற கொழுந்த பாத்துக்கிட்டு மளமளன்னு போங்க புள்ளைங்களா! இன்னைக்கி மல முடியணும்!” என்றார் தலைமைக் குரலில்.

நாகூர் உம்மாவின் நிரைக்குட் புகுந்தார் அவர். அவர்களின் மகள் பேகம், பள்ளத்திலிருந்து ஒற்றையடிப் பாதைவழியே தேத்தண்ணி கொண்டு வருதைக் கண்டார்.

“இன்னைக்கிப் புள்ள ஸ்க்கூலுக்குப் போகல்லியா, நோனா?” என்றார் மனைவி நாகூர் உம்மாவை நெருங்கி.

“அதுக்கு இன்னைக்கி மேலு துப்பரவாகியிருக்கு.”

இடதுபுறம் பார்த்து, “என்னா லெச்சிமி சொணங்குற?... விறுவிறுன்னு எடுத்துக்கிட்டு போவியா!...” என்றார்.

“ந்தா வந்திர்றேங்க, அப்பு!...” என்று பற்கள் தெரிய உரத்துச் சொன்னவள், “இன்னைக்கி வாதம் ஒரேயடியா இல்லியா காலப் புடிச்சி இழுத்துக்கிடுது!...” என்றாள் அடுத்த நிரைக்கு மட்டும் கேட்கக்கூடியதாக.

“புரோக்கர் நானாவையும் பாத்துட்டு வரவா?” என்றார் மீராஸாஹிப் மனைவியிடம்.

“ஆமா!... என்னான்னே கேட்டுக் கிட்டே வந்திறுங்களேன்! சுடுதண்ணிய ஊத்திக்கிட்ட மாதிரி அவசரப்பட்டாங்களே, பேச்சு மூச்சயே காணோம்!”

“மகளோட ஹாலப் பேசி முடிச்சிக் கிட்டாத்தான் மகன்ட விசயத்தக் கவனிக்க வசதியா இரிக்கும்!... எனக்கென்னமோ மகள்ட விசயத்தவுட மகன்டதுதான் அவசரமாத் தெரியுது!...” என்றவர் சில்வாவின் நிரையைப் பார்த்து, “சில்வா!” என்று கூவினார்.

***

பீலியிற் குளித்து, வீட்டுக்குப் போய், வெள்ளுடை அணிந்து, பத்தாவது மைல் ஜும்மாவுக்காக அவர் மெயின் றோடில் ஏறும்போதே பஸ்ஸும் வந்து விட்டது.

வாகனத்துக்கும் அவரது மனத்துக்கும் ஓட்டப் போட்டி நடக்கலாயிற்று.

எட்வான்ஸ் லெவல் படிக்கும் மகளுக்கு வீடு தேடி வந்த கல்யாணச் சம்பத்து; இங்கே பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டிருந்த மகனின் பாதுகாப்புக்காக அவனை வெளிப் படுத்தும் சவூதிப் பயணம்; அடுத்த மாத நோன்பு; அதையடுத்து வரவிருக்கும் தோட்டத்துத் தேர்த்திருவிழா; யாரிடமும் இதுவரையிலும் எதற்காகவும் கையேந்தாத நிலையைத் தொடர வேண்டிய கயிற்றுமேலான வாழ்க்கை...

மூன்றாவது மைலில் ஒரு சிறிய கடைமண்டி. பஸ் உறுமிக்கொண்டே நின்றதில், இரண்டே பிரயாணிகள் ஏறினார்கள். இரண்டாமவர் ரவூஃப் ஃபாய்.

“ஸலாமலேக்கும், மீரஸா கங்கனீ!”

"வஅலைக்குமுஸ்ஸலாம், ஃபாய்!"

"புடியன் எப்ப அராபி போறான்?"

"நேத்து தந்தி வந்த கையோட கொழும்புக்குப் போயிரிக்கிறாரு. இதோட ஆறுவாட்டி போயாச்சி! வந்தாத்தான் எப்பப் பயணம்னு தெரியும், ஃபாய்!"

"அதெல்லாம் சரிவர்வான்! நல்லா அல்லாவ நம்பு!... அந்த முத்தாய் கெல் விக்கி என்னாச்? நம்ப வட்டி குடுக்றா னில்லே?"

"அதென்னாமோ, நீங்கதாம் போய்க் கேக்கணும், ஃபாய்!"

அதன் பின் "அது" பற்றிக் கேட்க ஃபாய்க்கே அச்சமாக இருந்தமாதிரிக் கதை நின்றது; வண்டி சென்றது.

***

கதவைத் தட்டினார் மீராஸாஹிப். "... புரோக்கர் நாநா!..."

"தாரு?..." என்ற குரலோடு கதவு திறந்தது. "...ம்மாண்டேஏஏ!... மீராஸா நாநாவா!... வாங்க, வாங்க! இப்பத்தான் ஒங்களுவளப் பத்தி கதச்சிட்டீந்தம்!"

"அஸ்ஸலாமலைக்கும்!"

"வலைக்குமுஸ்ஸலாம்!... வாங்க, வாங்க!... இரிங்க!..."

"ஜும்மாவுக்கு வருவீங்கன்னு பாத்தேன்..."

"அய்... மீராஸா நாநாஅ,... இந்த கால் பார்ங்க... ஒர் ரெண்டு மூந்நாளா வர்த்தம்! வாதம் மாய்ரிக்கொண்டு! சர்யா நடக்கோவ் மேலா!... அய்தான் இண்டைக்கி ஜும்மாக்கும் வர கெடைக்கல்ல!... இந்தாங்க, பீ பீ! தார் வந்தீக்காங்கண்டு வந்து பார்ங்களேன்!... நம்பட மீராஸா நாநா!... தேத்தாண்ணி போடுங்க!..."

"எனக்கு சொணங்குறதுக்கு நேரமில்ல, நாநா. மகளோட விசயத்தப் பத்தி ஏதாச்சும்..."

"மவளோட ஹால்தானே!... அதொண்டுக்கும் நீங்க பயப்புட வாணாம், மீராஸா நாநா! எல்லாமே அல்லாட காவல்ல நல்லாவே வந்தீக்கி! இரும்பு போட்டீங்கண்டா தங்கள் மொளைக்கிற எடம்! கல்யாணத்துக்கு டேட் வெய்க்கிறைதான் பாக்கி! மாப்புளயும் கவ்ர்மேந்தில மாஸட்டர் வேல! கைல கால்ல ஊத்தவள் படாமைக்கி ஈக்கிறவர்! கை நெறைய சீதேவி சல்லி, பணம்! பஸ்ந்தான தொர! ஊடும் நல்லா பெர்ய ஊடு; ராஜாமார் ஊடு மாய்ரி! ஒரே ஒர் தங்கச்சி மட்டுந்தான் ஈக்கி!..."

"இதெல்லாந் தெரிஞ்ச கததானே, ஃபுரோக்கர் நாநா! சொன்னதயே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கிட்றுந்து ஒரு அர்த்தமுமில்லியே!... எங்களுக்கொண்ணும் இப்ப அவசரமில்ல! புள்ளய நல்லாப் படிக்க வைக்கோணும்னுதான் எண்ட நிய்யத்தும். இப்ப நான் ஏன் வந்தேன்னா, இன்ஷால் லாஹ்! இன்னும் ரெண்டொரு மாசத்தில மகனும் சவூதிக்கிப் போக இரிக்கிறாரு. அதுக்கெடையில நாம ஒரு பேச்சு வார்த்தய வச்சிக் கிட்டம்னா, இல்லாட்டிப் போனா ஒரு ரெஜிஸ்ட்டரயாச்சும் பண்ணிக்கிட்டம்னா மகனுக்குந் திருப்தியா இரிக்குமில்லியா!"

"அய்தான் நானும் இந்த கால் வர்த்தத்தோட ஓடிக்கொண்டீக்கன், நாநா! நான் என்ட தலைக்குள்ள ஒர் வேலய போட்டு கொண்டேன்டா, அய் முடியற வரகாட்டியும் படுக்கவும் மாட்டன்; தின்டவும் மாட்டன்! நேத்து ராவ் நான் ஊட்டுக்கு வரக் குள்ள எத்தின மணின்றீங்க? ஒம்போஓஓய் மணி! கால் வர்த்தம் சுட்டி வந்த சீர்க்கு தின்டன்; படுத்திட்டன்!... நீங்க ஒண்டுக்குமே யோசிக்க வாணாம், நாநா! நான் இன்டைக்கு ஒங்கட ஊட்டுக்கு வரத்தான் ஈந்தை. அய்ல பார்ங்க, மீராஸா நாநா, மாப்புள்ளயோட தாய்மாமா ஒர் மாய்ரி ஆள்!... மிச்சம் கட்டு செட்டான மன்சர்!... ஒர்ஷாம் வீணாக்காத பொறவி!... அவர்... ஒர்... பத்து பவுணுக்கு மாய்ரி... பாக்றார்!... கல்யாணமும்... ஒங்களோட செலோவன்டு செல்றார்!... சீதனம்ன்டு வெச்சா... மிச்சமும் இல்ல... ஒர் அஞ்சி மாய்ரிக்கி...."

பிரமையுற்று இருந்துபோனார் மீராஸாஹிப். சிறிது கழித்து, "நீங்க என்னா சொல்றீங்கன்னே..." என்று தடுமாறினார்.

"மக்கைவுங்க மாய்ரி அவங் கொண்டும் அம்பை நூறுன்டு பெரீஈஈசா கேக்கல்லியே, நாநா! சும்மா் வாற சீதேவி இல்லியா!..."

அவர் திடமாகப் பேசினார். "இல்ல, ஃபுரோக்கர் நாநா! எங்க மகளுக்கொண்ணும் இப்ப கல்யாணம் அவசரமில்ல! நீங்கதான் அன்னைக்கி ஓடியாந்து, இப்படியொரு எடமிரிக்கி, அருமயான எடம், ஒங்கட நலவு பொல்லாப்புகளத் தெரிஞ்சிதான் ஒங்கட குடும்பத்தில பொண்ணெடுக்க ஆசப்படுறாங்க, டக்கு புக்குனு கல்யாணத்த எடுக்கணும் னெல்லாம் சொல்றாங்க, கல்யாணம் எடுக் காட்டிப் போனாலும். பேச்சு வார்த்தயயாவது முடிச்சிக்கிடலாம்னு சொல்றாங்க, கல்

யாணம்னு வந்தா ஜொய்ண்ட் கல்யாணம் தான் - சீதனம்ங்கிற பேச்சுக்கே எடமில்ல - அப்பிடி இப்பிடீன்னு சொன்னீங்க! நாங்களும் நாலு பக்கமும் யோசிச்சுப் பாத்துட்டு சரீன்னோம். கல்யாணம்ன்னே வந்துட்டா உள்ள நகயத்தான் போடுறதுன்னு சொன்னேன். அதே ஆறேழு பவுண் தேறும். சீதனம்ங்கிற பேச்சுக்கே எடமில்லேன்னு அடிச்சிச் சொல்லீட்டேன். நாங்களா எங்கட புள்ளய பாக்கிறது வேற; நீங்களா அது இதுன்னு கேட்டு எடுக்கிறது வேற! நீங்களும் அன்னைக்கு எல்லாத்தயும் ஒத்துக்கிட்டு, அப்பறமா அவங்களும் ஒத்துக்கிட்டதாச் சொன்னீங்க. ஆனா இப்ப நீங்க சொல்றதப் பாத்தா... வார்த்த வேறயா இரிக்கே!... இன்னொரு எடத்தில வேற யாருக்கோ பேசின கல்யாணத்தப் பத்தி ஏங்கிட்ட பேசுற மாதிரி இரிக்கே?..."

"தென்னா மீராஸா நாநா பேஸ்றீங்க! அந்த மாப்புளைக்கி பொண்ணுவள் குடுக்றைக்கி நான் நீன்டு நிக்கிறை! நீங்க ஆறேழு பவுணுன்டு செல்றத அவுங்க பத்தின்டுதானே கேக்கிறை? ஒங்கட புள்ளைக்கிதானே - வேற தார்க்குமா?..."

"இல்ல ஃபுரோக்கர் நாநா! எப்ப சீதனம்ன்டு பேச்சி வந்திச்சோ அப்பவே நான் அவுட்டு! மனைவியா வாழப் போறவ கிட்டயே சம்பாதிக்க நெனைக்கிற கூட்டம் நிச்சயமா முஸ்லிம்களா இரிக்க முடியாதுங் கிறது என்ட அபிப்பிராயம்! வஸ்ஸலா மலைக்கும்!"

"மீராஸா நாநா!... மீராஸா நாநா!..."

***

பஸ்ஸிலிருந்து மீராஸாஹிப் நாநா வீட்டுக்கருகில் இறங்கினார். ஒதுங்கியவரை இன்னும் ஒதுங்க வைத்தது ஒரு பென்ஸ் கார். சாரதியைக் குழப்பத்தோடு பார்க்கத் திரும்பினார்.

மாணிக்கக்கல் பட்டை தீட்டிக் கொண்டிருந்த காலத்தில் முஸ்லிமாக இருந்து மீராஸாஹிபின் தங்கையை முடித்து, மொரிஸ் மைனர் வாங்கிப் பிறகு கெடில்லாக் வாங்கி யிருந்த மைத்துனர் பென்ஸ் இப்போது வாங்கியிருப்பதை அவர் அறிந்திருக்க வில்லை அதை அறிந்துகொண்டதும் -

"வாங்க வாங்க, மச்சான்! நான் யாரோன்னில்ல பாத்தேன் - மேல்ல காரக் கொண்டாந்து இடிக்கிறதுன்னு!" என்றவர் சிரித்த முகத்தோடு வண்டியை நெருங்கினார்.

ஓட்டுநர் இருக்கையிலிருந்து புன்ன கைத்த இளைஞன் இடதுபுறத்துக் கதவைத் திறந்துவிட்டான்.

"நீங்க எறங்கி வாங்க - ஊட்டுக்குப் போவோம்!" என்றார் மீராஸாஹிப்.

"இப்ப டைமில்ல, மச்சான். கண்டிக்கு ஒரு பயணம் வந்தன். ஜும்மாக்கு மொதல்ல டொனால்ட் தொர கொஞ்சங் கல்லு கேட்டை. அய்தான் ஜும்மா முடிஞ்ச சீர்க்கு வாறன். அவருக்கும் அசரம்ன்டு சென்னை. ஒங்கள காணாட்டி போயிருப்பன்! இன்ஷால்லாஹ், வாறகெழுமைக்கி அவவையுங் கூட்டிகொண்டு வாறைக்கி தான் இரிக்கிறன். நிஸார் சவூதி போறைன்டு தாத்தா எழுயீந்தை?"

"நேத்தும் கொழும்புக்குத்தான் போயிரிக்கிறான்; இன்னும் வரல்ல..."

"பணங் குடுக்றை கவனம் மச்சான்! சின்ன சல்லியார்ந்தாலும் நாங்க ஏமாறக் கூடாய்ல்லையா! ... ஏதாச்சிம் சல்லி கில்லி தேவைன்டா கேளுங்க!..."

"இன்ஷால்லாஹ்!"

"வாயத் தொறக்க மாட்டீங்களே! நாங்கள்லாம் என்னமோ பொறத்திங்க மாய்ரி!..."

***

பேர் போட்டுவிட்டு வீட்டுக்கு வர ஐந்து மணியாகிவிட்டது. திண்ணையில் டியூஷன் கொடுத்துக் கொண்டிருந்தாள் பேகம்.

உள்ளே போன அவர் உடுப்புக் களைந்த பிறகு, "போன விசயம் என்னாச்சி?" என்றாள் நாகூர் உம்மா மெதுவாக.

"அது நடக்கிற காரியமா இல்ல!" என்றார் அவர் அமைதியாக - எதிலிருந்தோ தப்பித்துக் கொண்டதுபோல்.

"..............."

"பொண்ணுதான் வேணும்னு மொதல்ல சொன்னாங்க. இப்ப நம்மள ஹராமானதுகளயுஞ் செய்யச் சொல்றாங்க! பத்துப் பவுண் வேணுமாம்! சரி; குடுக்கலாம். ஆனா என்னமோ சொல்ற மாதிரிக் கெடச்ச சந்தர்ப்பத்தில சுருட்டுற மாதிரித் தெரியல்ல?... கல்யாணச் செலவு நம்முதாம்! செய்வோம் - நம்ம கல்யாணமில்ல! ஆனா நப்பிக் கூட்டம் மாதித் தெரியல்ல?... அஞ்சாயிரம் ரொக்கத் தில வேணுமாம்! பத்தாயிரமுங் குடுப்போம்னு சொல்லுவமே! ஆனா, ஹராத்தில உறுதிப்பாடா இரிக்கிறவன் நம்ம புள்ளய நாளைக்கி ஹலாலாக் காப்பாத்து வானா?...

தன்னக் காப்பாத்திக்கிட நாளைக்கே நம்ம புள்ளய அராபிக்காரன் கிட்ட அனுப்பலா மில்ல?..."

"..............."

"வேற எடத்தப் பாக்கச் சொல்லீட்டு வந்திட்டேன்."

"..............."

"தேத்தண்ணி தாங்க."

"..............."

"இன்னைக்கிக் கோயில்ல கொமிட்டிக் கூட்டம் இரிக்கின்னாய்ங்க, ஒருத்தரயும் இன்னுங் காணல்லியே?..."

"..............."

"நிஸார் இன்னைக்கி வாரானோ என்னமோ..."

"..............."

"..............."

"ஏங்க,... ஒண்ணு சொன்னா கோவிக்க மாட்டீங்களே?"

"இப்ப என்னா சொல்லப் போறீங்க? மூணு பவுண்தானே கூட, அஞ்சாயிரந்தானே ரொக்கம், சரிபாதிக் கல்யாணச் செலவ முழுசாப் போடுறதுதானே, நிஸார் சவூதி போய்ட்டாத் தான் எல்லாஞ் சரி வத்திறுமேன்னு சொல்லப் போறீங்க?..."

"..............."

"இங்க பார்ங்க, நாகூர்ம்மா! எனக்கு மார்க்கம் முக்கியம். அதுனால வாக்கும் முக்கியம்! கலிமா சொல்லீட்டம்ல? அது முக்கி யம்! இது ஃபுரோக்கர்ட வேலயோ, மாப்புள்ள ஊட்டுக்காரங்கள்ட வேலயோ - ஆரம்பமே தில்லுமுல்லா இருந்தா நம்ம புள்ளட வாழ்க்க எப்பிடி அமையப் போகுதுன்னு கொஞ்சம் யோசிச்சிப் பார்ங்க!..."

திண்ணையிலிருந்து, "உம்மா! காக்கா வந்தாச்சி!" என்ற குரல் வந்தது.

பையைத் தோளிலிருந்து கழற்றித் திண்ணைக் கட்டிலிற் போட்டுவிட்டு, "ஸ்ஸ்ஸ்!..." என்று உட்கார்ந்தான் நிஸார். "எல்லாமே சரி, வாப்பா! குவைட் போறம். டிக்கட்டெல்லாம் ஃபுக் பண்ணியாச்சி! ஒம்பதாந் தேதி ஃப்ளைட்!... தேத்தண்ணி ஊத்து, பேகம்!... ஸ்ஸ்ஸ்!..."

"அப்ப இன்னும் எட்டு நாத்தானே இரிக்கி?" என்றாள் நாகூர் உம்மா.

"ஆமா, உம்மா! ராவ் பதினொண்ணுக்கு ஃப்ளைட். எயா லங்காவ்ல. ஒம்பதாந்தேதி காலைல ஏஜன்ஸியில நிக்க ணும். சல்லியும் அன்னைக்கிக் கட்டணும். எட்டாந் தேதியே இங்கர்ந்து போயிறணும்..."

"அல்ஹம்துலில்லாஹ்!" என்றார் மீராஸாஹிப். "எல்லாம் அல்லாஹ்ட நாட்டம். நாகூர்ம்மா! நாளைலர்ந்து நிஸார் போற மட்டுக்கும் நீங்க வேலைக்கிப் போக வாணாம். புள்ளைக்கிக் கொண்டு போறதுக் குத் தேவையானதுகளப் பாத்துச் செய்யுங்க..."

"உடுப்பு சப்பாத்தெல்லாம் வாங்கணும், வாப்பா!"

"என்னடாது! சப்பாத்தெல்லாம் இரிக்கிதுதானே, மகன்?... ரெண்டொரு உடுப்பு மட்டும் எடுப்பம்?..."

"அது பழசு, வாப்பா! எல்லாரும் புதுசு புதுசா ட்ரெஸ் பண்ணிக்கிட்டு வருவாங்க!"

"சரி சரீ!... ஒரு லிஸ்ட்டப் போடு!"

"நாலு யூனிஃபோம்; நாலு ஷேட், நாலு ட்றவுஸர்; ஒரு ஸஃபாரி கிட் இருந் தாலும் நல்லது - போற நேரம் போட்டுக் கிட்டு போறதுக்கு. ரெண்டு ஜோடி சப்பாத்து, மேஸ். ஒரு ஜோடி ஸிலிப்பர் இருந்தாப் போதும்! நாலஞ்சி ஃபெனியன்; ரெண்டு மூணு சாரம்..."

"ஆகா!... ஒரு கடையையே கொண்டு போகப் போறியா? அதுதான் யூனிபோம், ஃபெட்ஷீட் டெல்லாம் கம்பனி யிலயே குடுப்பாங்களாமே!..."

"அது நம்பிக்கயில்ல, வாப்பா! ஒவ் வொரு கம்பனி ஒவ்வொரு மாதிரியாம்!..."

"அப்பீடீன்னா நாலு நாலா எடுக்காம ரெண்டு ரெண்டா எடுப்போம்? அங்க போனொடன எட்வான்ஸ் குடுப்பாங்கதானே?"

"அந்த எட்வான்ஸ்ல என்னென்னத்த வாங்குறது, வாப்பா? ஒரேயடியாக் கொண்டு போய்ட்டா லேசுதானே? அங்க உடுப் பெல்லாஞ் சரியான வெலயாம் - ஒண்ணுக்கு நாலு! சப்பாத்து ஆயிரம் ரூவா யாம்! முடி வெட்டிக்கிட நூறு ரூவாயாமே! கலிசான் ஒண்ணு தெய்க்க எட்டுநூறு ரூவாயாம்! அநியாயமில்லியா!..."

"முடி வெட்ட நூறு ரூவான்னுகிட்டு ரெண்டு வருசத்துக்குஞ் சேத்து இங்கர்ந்தே வெட்டிக்கிட் டுப் போகேலுமா?... சரி, விடு! எவ்வளவு வருதுன்னு பாரு."

"மூவாயிரங்கிட்ட வருது, வாப்பா!"

"எல்லாங் கணக்குப் பண்ணித்தான் வச்சிரிக்கிற!..."

மீராஸாஹிப் மனக்கணக்குப் போட்டார் - "சீட்டு சல்லி நாலாயிரம்;

கைரொக்கம் மூவாயிரத் தெரநூறு. இன்னும் ஏழாயிரத்திச் சொச்சம் மொத்தமா வேணும்!..."

"தலவரே!" என்று வாசலிலிருந்து குரல் வந்தது.

"யாரு, காத்திகேஸா? இந்தா வந்திட்டேம்பா!"

***

இரவு எட்டரை மணி. தண்டாயுத பாணிக் கோவில் மண்டபம். பன்னிரண்டு கமிட்டி உறுப்பினர்களும் வட்டமாக அமர்ந்திருந்தார்கள். தலைவர் மீராஸாஹிப் இருபக்கமும் சிறு இடைவெளிவிட்ட தனித்துவத்தில் கம்பீரமாக. அவரையடுத்தே கோவில் ஐயர் இன்னும் கம்பீரமாக.

அலசித் தீர்க்கப்பட்டதைத் தீர்மானமாகத் தொகுத்தார் தலைவர்:-

"... அப்ப, வாற அடுத்த பத்தாந் தேதி தேரு. வாற அடுத்த மாசச் சம்பளத்த ஆறாந் தேதிவாக்கில போடச் சொல்லி நிருவாகத்தக் கேக்கிறோம். கோயில் நிதியாத் தலைக்கி அஞ்சி ரூவா செக் றோல்லயே புடிக்கிறதா ஆளுகளுக்கு அறிவிக்கிறோம். தோட்ட நிருவாகமும் பத்தாயிரத்துக்குக் கொறயாத ஒரு தொகயக் குடுக்கணும்னு எழுத்து மூலமா விண்ணப்பிக்கிறோம். இந்தப் பகுதியில உள்ள சகல தோட்டங்களுக்கும் போய் சகல ஸ்ட்டாஃப் மாருங்ககிட்டயும் கட மண்டியிலயும் நன்கொடை வசூலிக்க சம்பள டைம்ல நாம பத்துப் பேரு கௌம்புறோம். மத்தப்படிக்கிக் கோயில் நிதியில உள்ளதோட தன்னக் கட்டணும். ஐயரும் மெம்பர்மார்களும் சம்மதந்தானே?"

"சம்மதம்."

***

"மீதி ஏழெட்டாயிரத்துக்கு என்னா பண்ணப் போறோம்," என்றாள் நாகூர் உம்மா பாரமாக.

"ஏதாச்சும் பண்ணித்தானே ஆகணும்!" என்றவாறே தலையணையிற் பாரத்தை மென்மைப்படுத்தினார் மீராஸாஹிப். "யா அல்லாஹ், நாயனே!..."

"யாருக்கிட்டயாச்சுங் கைமாத்துக் கேக்கேலாதா?..."

"நாகூரும்மாஅ! இது வரைக்கும் நடக்காத ஒண்ண நடத்தச் சொல்றீங்க! பிரச்சினைக்கெல்லாம் மூல காரணமே நம்மக்கிட்ட இரிக்கிறத மீறிப் போறது தான்!... தொரைக்கிட்டர்ந்து மேட்டு லயத்து நயினார்கிட்ட வரைக்குங் கேக்கலாந்தான். யாரு எனக்கு இல்லேன்னு சொல்லப் போறாங்க? கண்டிப்பாக் கெடைக்கும். ரவூஃப் ஃபாய்கூட ஊட்டுக்கு வந்தே குடுத்திட்டுப் போவாரு - வட்டி இல்லாம! ஆனா அதோட மீராஸாஹிப் மவுத்து! இந்தக் கைமாத்து வேல இல்லாததாலதான் நான் மீராஸாஹிபு! இல்லேன்னா நம்ம காஸீன் புள்ள மாதிரி பொணந்தான்!... தொரமாருக பேச்சுக்கும் மீறி ஏன் இந்தத் தோட்டத்து ஆளுக என்ட பேச்சுக்கு இவ்வளவு மதிப்பும் மரியாதயுங் குடுக்கிறாக?... அதுக்கு இந்தக் கைம்மாத்தும் ஒரு காரணம்! அல்லாஹ் நமக்குக் குடுத்திரிக்கிற யோக்கியத இது! அடுத்த நிமிசம் என்னா நடக்கப் போகுதுன்னு தெரியாத ஒரு அவஸ்த்தைக்காக நாம இதக் கெடுத்துக் கிடக் கூடாது, நாகூர்ம்மா!... ஐயரு அடிக்கடி சொல்லுவாரு - எது நடக்குதோ அது நல்லாவே நடக்குது!..."

"............."

"நாம செய்ய ஒரு வழி இரிக்கி... ரெண்டுரெண்டரப் பவுண் நகய விப்போம்!..."

"... ஒரு பவுண் இப்ப நாலாய்ரத்திச் சொச்சமா?..."

"அது அவுங்க விக்கிற வெல. நாம கொண்டு போனம்னா வெள்ளீம்பான்; அரக்கும்பான் பொடீம்பான்!... ரெண்டர, மூணுதாங் கணக்கு!..."

"ஆமா! அப்பிடி ஏதாச்சுஞ் செய்ய வேண்டியதுதான்! புள்ளயோட ஹாலுந்தாந் தள்ளிப் போச்சே!..."

"நிஸாரோட நானுங் காலைல மாத்தளைக்கிப் போய்ட்டு வாறேன்..."

"வாப்பா!... வாப்பா!" என்று கதவை இடித்தான் நிஸார்.

"என்னா, நிஸார்!" என்று அரக்கப் பரக்கக் கதவைத் திறந்தார் மீராஸாஹிப்."

"நியூஸக் கேளுங்க!"

கேட்டார்கள். குவைட் ச(த்)தாம் ஹுஸைனாற் பிடிபட்டுவிட்டது.

கற்பனைகள் சிதற நிஸார் முதுகாற் சுவரைத் தேய்த்தவாறே கீழே வழுக்கி வந்து இடிந்துபோனான்.

இரட்டைத் தோல்வியில் நிமிர்ந்து நின்றார் மீராஸாஹிப்.

***

மறுநாட் காலை; ஏழு மணி. பெரட்டுக்குப் போய்விட்டு வந்து சாப்பிட்டு

முடித்துக் கொண்டிருந்தார் மீராஸாஹிப்.

ஸுஃபஹ் தொழுதபிறகும் வழக்கத்துக்கு மாறாகத் திண்ணையில் புரண்டு கிடந்தான் நிஸார். பேகம் அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள் - பாதைக்கு பஸ்ஸுக்காக ஓடுவதற்கு. தாயும் புறப்பட்டுக் கொண்டிருந்தாள் - பக்கத்து மலைக் கொழுந்தெடுப்புக்கு நேரத்துக்கு ஓடிப்போய்ச் சேர.

"ஸலாமலைக்கும், மீராஸா, நாநா!" என்று திண்ணைக்குட் பாய்ந்தார் ஃபுரோக்கர் நாநா.

"வலைக்குமுஸ்ஸலாம்!" என்று வரவேற்ற மீராஸாஹிப், உள்ளிருந்த நாற்காலியை வெளியில் வைத்தார். அதற்குள் நிஸார் எழுந்து ஸலாம் சொல்லி விட்டு வெளியே போனான். "இரிங்க, நாநா! என்னா, ஒரு பக்கம் விடிய முந்தி?..."

"அய்தானே செல்றை, பாந்தர பஸ்ல வராட்டிபோனா ஒங்கள புடிக்கேலுமொ? சின்ன தொர மாய்ரிக்கில்லியா!... நேத்து நீங்க வந்த பொறொவ், நான் இந்த கால் வர்த்தமும் பாக்காமைக்கி மாப்புள ஊட்டுக்கு போனனல்லியா! பெய்த்திட்டு ஒர் புடி புடிச்சன் பார்ங்க, எல்லாருமே சரண்டர்! இல்லேன்னா என்ட பேரில்லியா அசடாவ்றை!..."

"..............."

"நான் ஒர் கார்யத்தில கைவெச்சென்டா, அய் முடியறவரகாட்டியும் படுக்கவும் மாட்டன்; தின்டவும் மாட்டன்! மாப்ளயோட மாமன்டய ஒர் புடி புடிச்சன் பார்ங்க, நைசா ஆஆஆ சரண்டரா வீட்டார்!... அவராவே எறங்கி வந்திட்டார்!. கல்யாண செலோவ் அவுங்களோட! நீங்க நக நட்டுவள் போட்டாலும் சரி, இல்லேன்டாலும் சரி! சீதனம்... மூச்! அவுங்களுக்கு வேண்டியது புள்ள! எப்பிடி நம்பட வேல?!..."

மீராஸாஹிபின் முகம் கனத்திருந்தது.

பேகம் குசினியிலிருந்து, "வாப்பா!" என்றாள். மீராஸாஹிப் எழுந்துபோய்த் தேநீரைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தார். தேநீரையும் பேகத்தின் கை வண்ணத்தையும்பாடிப் பாடித் தீர்த்து முடித்தார் ஃபுரோக்கர் நாநா.

வெற்றுக் கோப்பையைப் பெற்று உள்ளே கொடுத்துவிட்டு வந்த குடும்பத் தலைவர் பேசினார்.

"ஃபுரோக்கர் நாநா! இது கல்யாணம்; ஃபிஸினஸ் இல்ல! மொதல்ல ஒண்ணுமே வாணாம்னு சொன்னாங்க. அப்பறம் லிஸ்ட் போட்ட மாதிரிக் கேட்டாங்க! இப்ப இன்னொருக்கா வாணாம்னு சொல்றாங்க! ஒத்த, ரெட்ட புடிக்கிறவுங்க முஸ்லிம்களா இருப்பாங்கன்டு எதிர்பார்த்து ஒரு பூவக் கசக்கக் குடுப்பானா ஒரு தகப்பன்?... மனவர்த்தம் கூடாது, ஃபுரோக்கர்நாநா! அவுங்களுக்கு வேற எடம் பார்ங்க! அல்லாஹ் நாடாத எதயுமே நாஞ் செய்றதில்ல!."

## காலதீர்த்தாபிமானி பட்டம் வழங்கி கௌரவிப்பு



கலாசார கலை அலுவல்கள் அமைச்சு தேசிய ரீதியில் சங்கீத, நடன நாட்டிய இலக்கிய, சித்திரம் ஆகிய கலை இலக்கியம் சார்ந்த நிகழ்வுகள் ஐப்பசி 18,19,29 ஆகிய தினங்களில் மத்துகம கன்னங்கரா மத்திய கல்லூரியில் நடந்தன. கவிதை, கட்டுரை, சிறுகதை, விமர்சன ஆய்வுகளிலும், பாடசாலைநூல் ஆலோசனைசபையிலும், பாடசலை நூல் எழுதுவதிலும், இலக்கிய ரீதியில் பதின்மூன்று நூல்கள் எழுதியும், பட்டங்கள் ஆறு பெற்றும் சாதனை படைத்த கவிஞர் ஏ.இக்பால் அவர்களுக்கு காலதீர்த்தாபிமானி எனும் பட்டமும் பத்தாயிரம் ரூபாய் பணமும், சன்மானமும் கௌரவ அமைச்சர் திரு. ரத்னாயக்கா அவர்களால் வழங்கப்பட்டது.



2013 ஜூலை 19ஆம் திகதி இரவு யாழ்ப்பாணம் செல்வதற்கு 16ஆம் திகதியே இரண்டு பஸ் டிக்கட்டுகளை எனக்கும், என் நண்பர் லெனின் மதிவானம் அவர்களுக்கும் பதிவு செய்து கொண்டேன். உலகின் பல நாடுகளுக்கு பயணித்துள்ள நான் சில நாடுகளுக்கு பலமுறை பயணித்துள்ளேன் என்றாலும், அப்போதெல்லாம் இல்லாத பரபரப்பும் ஒரு தவிப்பும் இப்போது எனக்குள் எழுந்து கொண்டேயிருந்தது. நான் யாழ்ப்பாணம் செல்லும் பிரதான நோக்கம். அங்கு 20, 21ஆம் திகதிகளில் நடக்கும் 41ஆவது இலக்கிய சந்திப்பில் உரையாற்றுவது. ஆரம்பத்தில் ஓர் ஆசிரியனாக பணியாற்றியதாலும் தற்போது முகாமைத்துவ உசாத் துணைவனாக பணி செய்வதாலும் கட்டுரை சமர்ப்பிப்பது, உரையாற்றுவது போன்ற விடயங்கள் பதற்றத்தைத் தருவதில்லை. இருந்தும் இந்தப் பயணத்தின் பரபரப்புக்கான காரணம் வேறாக இருந்தது.

1973ஆம் ஆண்டில் இலங்கையில் பஞ்சம் தலைவிரித்தாடிய போது, வறுமை தாங்காது அரசாங்கம் குடும்பத்துக்கு அரைக்கொத்து அரிசி கொடுத்த செப்டெம்பர் 29ஆம் திகதி நுவரெலியா மாவட்டம், வட்டகொடை நகருக்கு அருகேயுள்ள மடகொம்பரை எனும் தோட்டத்தில் "புதுக்காடு" எனும் பிரிவில் தோட்டத் தொழிலாளர் லயன் குடியிருப்பில் நான்காவது பிள்ளையாக (முதலாவது ஆண் பிள்ளை சந்திரசேகரன் ஒரு வயதுக்குள்ளேயே இறந்து விட்டாராம்) பிறந்தவன் நான். மற்றைய இருவரும் மூத்த சகோதரிகள்.

–மல்லியப்புசந்தி திலகர்

# யாழ்ப்பாணத்தில் "மடகொம்பரை" 41வது இலக்கிய சந்திப்புக்கான பயணத்தை முன்னிறுத்திய ஒரு நினைவுப்பதிவு

என் பிறப்பிற்கு இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பே என் தந்தையின் அப்பா "தாத்தா" குடும்பத்துடன் வன்னியின் கிளிநொச்சி-வட்டக்கச்சி பிரதேசத்திற்கு குடிபெயர்ந்துள்ளார். மலையகத்தில் தேயிலைத் தோட்டத்தில் தொழிலாளிகளாக இருந்த குடும்பத்தை, காலம் வன்னியில் விவசாயப் பண்ணைகளில் தொழிலாளிகளாக்கியிருக்கிறது. இடம்பெயர்ந்த குடும்பமென்பது, எனது மூன்று அத்தைமார்களையும் என் சிறிய தந்தையையும் உள்ளடக்கியது. எங்கள் குடும்பமும் ஓர் அத்தையும் இரண்டு பெரியப்பாமாரும் மலையகத்தின் மடகொம்பரையில் தொடர்ந்து வாழ்ந்தனர். பின்னாளில் மூத்த பெரியப்பாவும் குடும்பத்தோடு வன்னியில் குடியேறிவிட்டார். எஞ்சியிருந்த நாங்கள் அவ்வப்போது வன்னிக்குச் சென்று வந்தோம். அப்படி முதல் தடவையாக ஐந்து வயதில் (1978) சிறிய தந்தையுடன் சென்று வந்த ஞாபகம் இன்னும் பசுமையாக நினைவிருக்கிறது. என் தாத்தாவையும், ஆச்சியையும் (மலையகத்தின் அப்பாயி –ஆச்சி யானது வன்னித் தொடர்பாக இருக்கலாம்) முதன்முதலாக பார்த்தது அப்போதுதான்.

1979ஆம் ஆண்டு மடகொம்பரை (வடக்கிமலை) தோட்டப் பாடசாலையில் மண் தரையில் அமர்ந்து, "ஆனா" எழுதும் முன்னரே எங்கள் தோட்டத்திற்கு உள் நுழையும் பாதையோரத்தில் இருக்கும் பி.டபிள்யூ.டி குவாட்டர்ஸில் வாழ்ந்த சிங்களக் குடும்பத்தாருடன் இருந்த தொடர்புகள் காரணமாக "அயன்ன" எழுதியிருந்தேன். அதற்கு முன்பு எனக்கே வயது தெரியாத நாளில் அடுத்த வீட்டு அந்தி நேர "நைட் ஸ்கூலில்" ஐயா மேகராஜா (என் உறவு வழி சிறிய தந்தை தற்பொது தமிழகம் குன்னூரில் வாழ்கிறார்) அவர்களினால் என்மீது "அரிச்சுவடி" (அ முதல் இசட் வரை)

எழுதப்பட்டிருந்தது. எனவேதான் அந்தத் தொழிலாளி சித்தப்பா மேகராஜாவையே என் "குருநாதர்" என்று நான் எப்போதும் சொல்வதுண்டு. "மல்லியப்பு சந்தி"யில் இந்த குருநாதர் பற்றிய எனது பதிவுகளும் (மீண்டும் குழந்தையாகிறேன் பக்-96) என்னைப் பற்றிய அவரது பதிவுகளும் (குருவிடமிருந்து பக்-VII) உள்ளடங்கியுள்ளன.

1977இல் ஆட்சி மாறினாலும் எங்கள் பட்டினி மாறவில்லை. காலையில் ஒரு "விசுகோத்து". பகலுக்கு "சவசவக்காய்" (மலையகத்தில் பிரபலமான காய் வகை) அவியல், பொருளாதாரம் இடமளித்தால் இரவுக்கு கொஞ்சம் சோறு என நாட்கள் நகர்ந்த காலம் அது. வறுமை எங்களை விரட்ட, வறுமையை விரட்ட அப்பாவுக்குத் தெரிந்த அடுத்த ஒரே வழி தானும் வன்னிக்குச் செல்வது தான்.

அப்போதும் இருந்த இன வன்முறைகளைப் பார்த்து "இனி இந்த நாட்டில் வாழ்வதென்றால் சிங்கள மொழிக் கல்விதான் ஒரே வழி" என்ற யாருடையதோ தூரநோக்கு சிந்தனையை உள்வாங்கிக் கொண்ட அப்பா, எங்கள் மூவரையும் வட்டகொடை சிங்கள வித்தியாலயத்தில் சேர்த்து விட்டார். ஒரு வருடமாக மடகொம்பரை தோட்டத்துப் பள்ளியில் "வேட்டி கட்டிய" யாழ்ப்பாண வாத்தியார் "கோபிநாத்" மாஸ்டர் (தவறு செய்தால் பின்பக்க தொடையில் நறுக்கென கிள்ளுவார். தற்போது பிரான்ஸில் வாழ்வதாக அறியக்கிடைக்கிறது.) அருமைநாயகம் மாஸ்டர் (மட்டக்களப்பு என நினைக்கிறேன்), பள்ளிக்கூட கங்காணி (அங்கேயுமா..!) "வத்தங்கி" தாத்தா ஆகியோரிடமும், "அ" எழுதிப் பழகிய "கள்ளுக்குச்சி-சிலேட்டிடமும்" நண்பர்கள் பலரிடமும் பாலர் வகுப்பிலேயே விடை பெறவேண்டியதாயிற்று. இப்போது மீண்டும் "அயன்ன" சொல்லிக்கொடுக்க "மெனிக்கே டீச்சர்", "அமரக்கோன் டீச்சர்", "சரத் சேர்", மற்றும் "விதான சேர்" என பல சிங்கள ஆசிரியர்கள். மடகொம்பரை மண்தரைப் பள்ளியின் மதியாபரணம், குணராஜாவுக்குப் பதிலாக வட்டகொடையில் நண்பர்களாக ரவீந்திர, நந்தசேன, இந்திக்க, ஜயசேன என எல்லாம் மாறிப்போனது.

அவ்வப்போது அப்பா அனுப்பும் மணியோடர் பசியை ஆற்றியது. கடிதங்கள் ஆறுதலையும் ஆர்வத்தையும் தந்தன. கடிதத்தில் நாட்டு நடப்புகளை சுவாரஸ்யமாகவும் "பெருமை"யாகவும் எழுதியிருப்பார். ஆனாலும் எங்கள் வீட்டில் வறுமை நீடித்தது. அம்மாவின் நாட்கூலி வறுமையைப் போக்க உதவியது. அப்பாவுக்கு மட்டுமல்ல, அம்மாவுக்கும் யாரோ தூரநோக்கு "ஐடியாவை" கொடுத்திருக்க வேண்டும். "சிங்களமே படித்துவிட்டால் நாளைக்கு பிள்ளைகளுக்கு தமிழ் தெரிய வேண்டாமா?". எனவே "சிங்கள பாடசாலை முடிந்ததும் அந்தியில் தமிழ் படிக்க" வென "ரியூஷன்"க்கு (Tuition) சேர்த்து விட்டார். அதனால் அந்தியானதும் "வட்ட கொடை ஸ்ரீ கிருஷ்ணா சமூக நலப் பாடசாலை"யில் ஆஜராகி விடுவோம். என் வாழ்வின் இன்னுமொரு வழிகாட்டி இந்தப் பள்ளியின் ஆசிரியர், நடத்துனர் சண்முகம் மாஸ்டர் அவர்கள். வட்டகொடை - சுப்பையா ராஜசேகரன் என சூரியகாந்தி பத்திரிகையில் எழுதி வருபவர். பாண் தந்து பசியைப் போக்கி, படிப்பு தந்து, வாழ்வையும் உயர்த்தியவர். இவரைப் பற்றிய ஒரு பதிவும் மல்லியப்பு சந்தியில் உண்டு.

1983ஆம் ஆண்டு ஜூலையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. தமிழர்கள் எரிந்து கொண்டிருந்த நாளில், நான் சிங்களப் பாடசாலையில் மூன்றாம் வகுப்பு படிக்கிறேன். என் நண்பன் "ரவீந்திர" ஏதோவொரு சண்டையில் என்னை "பறதெமளா" என திட்டுகிறான். அடுத்த கணம் என் கை ஓங்குகிறது. அவன் வாயில் ரத்தம் வழிய, கையில் கடவாய்ப்பல் ஒன்றை ஏந்தியவாறு அழுது கொண்டிருக்க, அதிபர் முன்னிலையில் விசாரணை. சிங்களத்தில் வாக்குமூலம் கொடுக்கிறேன். (இப்போதும் அப்படித்தான்). விதான "சேர்" வெறுப்புமிழ்ந்து பார்க்கிறார். சரத் "சேர்" கருணையோடு பார்க்கிறார். பாடசாலை நேரம் முடிய மணியும் அடித்தது. "நாளையும் விசாரணையும் தொடரும்" என அனுப்பி வைத்தார்கள். வரிசையில் சென்ற எங்கள் மூவரையும் சரத் "சேர்" ஓர் ஓரத்திற்கு அழைக்கிறார். அன்பாகப் பேசினார். "இனிமேல் இந்த பாடசாலைக்கு படிக்க வராதீர்கள். உங்கள் நன்மைக்குத்தான் சொல்லுகிறேன்" என்றார். சிங்கள கலாசாரத்தின்படி அவரை வணங்கி விடை பெறுகிறோம். "புதுசரணை" என ஆசிர்வதித்து அனுப்பினார். இன்றும் கூட வெள்ளைச்சட்டை, வெள்ளை நீளக்காற் சட்டை அணிந்து சுருள் முடி, கூர்மையான மூக்குடன் என் முன் புன்னகைத்து நிழலாடு கிறார் சரத் "சேர்". உள்ளத்திலும் தோற்றத் திலும் உயர்ந்த மனிதர் சரத் "சேர்".

அப்பாவினது "தூரநோக்கு" நொடிப்

பொழுதில் உடைந்துவிட, அம்மாவின் "தூர நோக்கு" கைகொடுக்கிறது. எங்களை வட்ட கொடை தமிழ் வித்தியாலயத்துக்கு அழைத்துச் சென்ற சண்முகம் மாஸ்டர், அதிபர் சண்முக நாதனுக்கு எங்களை அறிமுகப்படுத்தி நடந்த வற்றை விளக்குகிறார். சற்று யோசித்த அதிபர் மூன்றாம் வகுப்பு தமிழ்ப்பாட புத்தகத்தைக் கொண்டுவரச் சொல்லி வாசிக்கச் சொன்னார். மரியாதையுடன் கால்கள் இரண்டையும் கிட்டவாக வைத்து நேராக நின்றவன் மூச்சு விடாமல் வாசித்துக்கொண்டு சென்றேன். என் முதுகில் தட்டிக்கொடுத்தவாறே புன்ன கைத்தார். "இங்கு (தமிழ்ப்பள்ளி) ஐந்தாம் வகுப்புக்காரன் இப்படி வாசிப்பானா என்பது எனக்குச் சந்தேகம்தான்" என சண்முகம் மாஸ்டரைப் பார்க்க, அவர் கடந்த மூன்று வருடம் அம்மாவின் வேண்டுகோளின் பேரில் தனது தனியார் பள்ளியின் மாலை வகுப்பு பற்றி விளக்கினார். நான் நன்றியோடு சண்முகம் மாஸ்டரைப் பார்த்தேன். "அப்பா வரையில்லை யாடா... தம்பி" என்றார் அதிபர். "அப்பா யாழ்ப்பாணத்தில் ரைஸ் மில்லில் வேலை செய்றார், நாங்கள் அம்மாவுடன் தான் இருக்கிறோம். எங்களுடன் சித்தப்பா வந்திருக்கிறார்" என அப்பாவின் தம்பி சித்தப்பா தர்மகுலராஜாவைக் காட்டினேன். யாழ்ப் பாணத்தில் எந்த ஊர் என அதிபர் விசாரிக்க, "கொக்குவில்" என விபரத்தைச் சொன்னார் சித்தப்பா. அப்பா "வன்னி"க்குப் போகவில்லை. அவர் போனதோ யாழ்ப்பாணத்திற்கு - அவர் அனுப்பும் கடிதங்களின் "என்விலப்பில்" "....." ரைஸ் மில் (அசி ஆலை) கொக்குவில். என அச்சடிக்கப்பட்டிருப்பதைக் கண்டு பூரிப் படைந்திருக்கிறேன்.

"அட... நான் இணுவில்காரனடா... ஏன் நீங்கள் இங்க கிடந்து மாயிறியள்... பேசாமல் அங்க போய் படியுங்கோடா... அது வரைக்கும் இங்கு அனுமதிக்கிறன். அப்பாவுக்கு கடிதம் எழுதி விஷயத்தைச் சொல்லுங்கோ" என உடனடியாக வட்ட கொடை தமிழ்ப்பள்ளியில் அனுமதித்த அதிபர், அடுத்த தூரநோக்கையும் எங்கள் தலையில் திணித்து விட்டார்.

சுமார் ஒரு மாதம் வட்டகொடை தமிழ்ப் பாடசாலையில் படித்திருப்பேன். எங்கள் உறவுகள் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா (தாயகம்) திரும்பும் போது தோட்டத்தில் வீடு வீடாகச் சென்று "பயணம்" சொல்லி வருவது போல் நாங்களும் பயணம் சொல்லிவிட்டு குடும்பமாய் வன்னிக்கு குடிபெயர்ந்தோம். அங்கு அக்காமாருடன் என்னையும் சேர்த்து கிளிநொச்சி சென்.திரேசா பள்ளியில் (ஐந்தாம் வகுப்பு வரை அப்போது அங்கு ஆண்பிள்ளைகளும் படிக்கலாம் - இப்போது எப்படியென்று தெரிய வில்லை) சேர்த்து விட்டார்கள். இதில் அப்பா வின் தூரநோக்கம் ஏதும் இருந்ததா அல்லது கொக்குவில் பக்கத்திலேயே அப்பா வாழ்ந்தும் "கொக்குவில் இந்து"வில் என்னைச் சேர்த்துக் கொள்ள முடியாத "ராசதந்திரம்" ஏதும் நிகழ்ந்ததா எனத் தெரியவில்லை. 41வது இலக்கிய சந்திப்பில் சாதியம் பற்றிய அமர்வில் ஆசிரிய ஆலோசகர் திரு.ஏ.சி.ஜோர்ஜ் அவர்கள் ஆற்றிய உரை, அப்பாவிடம் இது பற்றி விசாரித்துப் பார்க்க வேண்டும் என இப்போது எனக்குள் ஒரு உந்துதலைக் கொடுத்துள்ளது.

கிளிநொச்சி, கரடிப்போக்கு, சென்.திரேசா பள்ளி நாட்கள் எனக்குள் பல மனத்தாக்கங்களைத் தந்தன. மலையகத் தோட்டத்தில் வாழும்போது அப்பாவை மட்டும் பிரிந்திருந்த நான் இப்போது அம்மாவையும் பிரிந்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எங்களை வட்டக்கச்சி அத்தை வீட்டில் நிறுத்தி அங்கிருந்து பாடசாலைக்குப் போகுமாறு சொல்லிவிட்டு, அம்மாவும் அப்பாவும் யாழ்ப்பாண வேலைச் சூழலில் அமைந்த வீட்டில் தங்கிவிட்டார்கள். இடையிடையே யாழ்ப்பாண வீட்டிற்கு போய் வருவோம். அப்போதெல்லாம் கிளிநொச்சி யாழ்ப்பாணம் பஸ்ஸில் "சித்திரச்செவ்வானாம் சிரிக்கக் கண்டேன்... முத்தான முத்தம்மா" - ஜெயச்சந்திரன் பாடலும், கண்ணே... கலை மானே.... ஜேசுதாஸ் பாடலும் ஒலித்துக் கொண்டிருக்கும். வானொலியில் கே.எஸ். ராஜா வெள்ளித்திரை விருந்து வைத்துக் கொண்டி ருப்பார். சித்தப்பாவுடன் போய் சாந்தியில் "மாடிவீட்டு ஏழை", வின்சரில் "அன்பே வா", மனோகராவில் "மீண்டும் கோகிலா" ராஜாவில் "மூன்றாம் பிறை", ராணியில் "டிக்...டிக்...டிக்" பார்த்ததாகச் சின்னதாய் நினைவு இருக்கிறது.

அரிசி ஆலையின் நெல் காய விடுவதற்கான பெரிய சீமெந்துத் தளத்தின் ஓரத்தில் எங்களுக்கு சிறியதாய் ஒரு வீடு வழங்கப்பட்டிருந்தது. அந்தத் தளத்தில் எப்படி வேண்டுமானாலும் சைக்கிள் ஓடிப் பழகலாம். அவ்வளவு பெரியது. வலதுபக்கம்

உள்நுழையும் ஒழுங்கையை மதில் மறைத் திருக்கும். வீட்டுக்குப் பின்னால் புளியமரம். கூரைக்கு ஏறிவிட்டால் புளியம்பழம் தின்று தீர்க்கலாம். வீட்டின் இடது பக்க ஓரத்தில் முருங்கை மரம். காயாகவும், கீரையாகவும் பறித்துவந்து "அம்மா" கைப்பட சமைத்த உணவு யாழ்ப்பாண வீட்டின் மறக்க முடியாத அனுபவங் கள். லீவு முடிந்து திரும்பவும் கிளிநொச்சிக்குப் போய் பள்ளிக்குப் புறப்படுகையில் கண்களில் கண்ணீர் முட்டும் பாடசாலைக்குப் போக தயக்கமாக இருக்கும். மலையகத்தில் சிங்களப் பள்ளிக்குப் போகும்போது கூட இப்படித் தயங்கியது இல்லை. நான் சிங்களப் பாட சாலையில் இருந்து வந்தவன். எனக்கு வகுப் பறையின் "டெக்னிக்கல் டேர்ம்ஸ்" எல்லாம் தமிழில் வராது. ஆனால் தமிழ் பேசுவேன், வாசிப்பேன், படிப்பேன். உதாரணமாக "அழிறப்பர்" என அங்குள்ள மாணவர்கள் சொல்ல, எனக்கு "ம(க்)கனே" என்றுதான் வாயில் வரும். இரண்டுக்கும் அழிப்பான் என்று தான் பொருள். ஆனால் முன்னையது தமிழ் பின்னையது சிங்களம் என்பதுதான் பிரச்சினை.

நான் தமிழன். ஆனால் என்னை எல்லோரும் "சிங்களவனாகவே" பார்ப்பதாக உணருவேன். வகுப்பறையில் நான் கடைசி பெஞ்சில் அழுகை முட்ட உட்கார்ந்திருப்பேன். ஒருவன் மாத்திரம் எனக்கு நண்பன். நான் வாழ்க்கையில் மீண்டும் சந்திக்க மாட்டேனா என இன்றுவரை ஏங்கும் நண்பன் "நேசகுமார்". அவன் கண்டி தெல்தெனியா பக்கத்தில் இருந்து "வன்செயலில் அடிபட்டு" வந்திருந்தவன். அவன் தமிழ்ப் பாடசாலையில் இருந்து வந்ததால் அவனுக்கு இந்தத் தமிழ் "டெக்னிக்கல் டேர்ம்ஸ்" எல்லாம் தெரிந் திருந்தது. அவனோடு இருக்கும்போது மட்டும் மனதுக்கு இலேசாக இருப்பதாக உணர்வேன். ஒருவாறு ஆண்டிறுதி பரீட்சை வந்தது. அதிக புள்ளி பெற்று முதலாமிடத்துக்கு வந்து விட்டேன். அடுத்த வகுப்பில் முதல் வரிசையில் இடம் கிடைத்தது எப்படியென்று தெரிய வில்லை. இப்போது "அழிறப்பர்" மட்டுமல்ல "வெளிக்கிட்டு", "சைக்கிள் உழக்கி", "பேந்து" என்றெல்லாம் பேசவும் தொடங்கி விட்டேன். அந்த நாளிலேயே அங்கு வாழ்ந்த மச்சான் செந்தூரனுடன் சேர்ந்து போய் "ஈஸ்வரா" தியேட்டரில் ரஜினியின் "ஆறில் இருந்து அறுபது வரை" பார்த்ததாகவும் ஞாபகம்.

இப்படி ஓடிக்கொண்டிருந்த காலத் தின் ஒரு நாள் பெரும் மழையினால் இரணை மடுக்குளம் உடைந்து பெருக்கெடுத்து ஓட, வட்டக்கச்சிக்கும் கிளிநொச்சிக்கும் இடையே யான பாதையின் "பன்னங்கண்டி" பாலங்கள் காணாமல் போயின. காலையில் பாட சாலைக்கு போய் விட்டோம் பின்னேரம் வீடு திரும்ப முடியவில்லை. ஊர் மக்களின் பகீரதப் பிரயத்தனத்தில் கட்டிய கட்டுமரத்தில் உயிரைக் கையில் பிடித்தபடி வீடு போய்ச் சேர்ந்தோம். பாடசாலை செல்வது அடிக்கடி தடைபட்டது. அப்பா மடகொம்பரை தோட்டத் துக்குப் போனவர் சுகவீனமடைந்ததால் மீண்டும் வடக்கு திரும்புவதில் சிக்கல் வந்தது. அம்மாவும் கிளிநொச்சி வந்து சேர அத்தை வீட்டாரினால் சுமையைத் தாங்க முடிய வில்லை. இப்போது எந்தத் தூரநோக்கும் இல்லாமல் மீண்டும் "மலையகம்" திரும்பி விட்டோம்.


மீண்டும் சண்முகம் மாஸ்டர், சண்முகநாதன் அதிபர், வட்டகொடை தமிழ் வித்தியாலயம். மூன்றாம் வகுப்பில் போனவன் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்கு வட்டகொடைக்கே திரும்ப வந்து நின்றேன். அந்தப் பரீட்சையில் சித்திபெற முடியாத அளவுக்கு "வீக்" ஆகியிருந்தேன். இப்போது என் பேச்சில் யாழ்ப்பாண வாசனை அடித்தது. பாக்யலக்ஷ்மி, கோமதி, முத்துலக்ஷ்மி, ஞானாம்பிகை, பவானி, இன்னும்...மணி என பெயர் முடியும் இன்னொரு ஆசிரியை மற்றும் "கொத்துரொட்டி" என பட்டப்பெயர் வைத்து நாங்கள் விளிக்கும் இரத்தினராஜா கணக்கு வாத்தி என பல யாழ்ப்பாண ஆசிரியர்கள் வட்டகொடைப் பள்ளியில் பணியாற்றினார்கள். பாக்யலக்ஷ்மி டீச்சர் என்னை வைத்து யாழ்ப்பாண பேச்சு வழக்கிலான நாடகம் ஒன்றை வட்டகொடையில் மேடை யேற்றினார்கள். அதில் எனக்கு "விதானையார்" பாத்திரம். அசலாக நடிப்பதாக பாராட்டுப் பெற்றேன்.

கொஞ்சநாள் செல்ல மலையகத் தமிழ் மீண்டும் என்னோடு ஒட்டிக்கொண்டது. ஆனால் வட்டகொடைப் பள்ளி ஒட்டவில்லை. பின்பு சித்தப்பா தர்மகுலராஜா அவர் முன்பு படித்த பூண்டுலோயா தமிழ் மகா வித்தி யாலயத்தில் என்னையும் சேர்த்து விட்டார். நான் பள்ளியில் சேர்கிறேன். அதிபர் நடராஜா பதவி உயர்வு பெற்று போகிறார். பின்னாளில் அவர் எனக்கு நெருக்கமான போது, எனக்கு "புரமோஷன்" கொடுத்தவன் என சிரிப்பார்.

அங்கும் குகேஸ்வரராஜா (வர்த்தகம்), இருதயநாதன் (தமிழ்), ராஜரட்ணம் (கணிதம்), முரளிதரன் (விஞ்ஞானம்), விக்கினேஸ்வரன் (வகுப்பாசிரியர்) என யாழ்ப்பாண ஆசிரியர்கள் இருந்தனர். ஆசிரியர்.ஜி.முரளிதரன் நல்ல தொரு கலைஞர். பேராசிரியர் மௌனகுருவின் (தகவலின்படி) "மழை" நாடகத்தைத் தழுவி "விடியலைத்தேடும் விழிகள்" எனும் நாடகத்தை என்னைப் பிரதானமாகக் கொண்டு இயக்கி யிருந்தார். தமிழ்மொழித் தினப்போட்டிகளில் தேசிய மட்டம் வரை வந்த நாடகம் அது. தேசிய மட்டப் போட்டியில் கலந்துகொள்ள வந்து கொண்டிருந்த போது கொழும்பு - கண்டி வீதியில் நிட்டம்புவைப் பக்கமான வழியில் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தி னவுக்கு வைத்த குண்டில் பதற்றமடைந்து திரும்பிவிட்டோம். பின்னாளில் பி.பி.தேவராஜ் இந்து கலாசார அமைச்சராக தலைமை வகித்து நடாத்திய தேசிய சாகித்திய விழாவில் அந்த நாடகம் அரங்கேற்றப்பட்டு சிறந்த நடிகராகவும் (பாடசாலை நாட்களில்) தெரிவு செய்யப் பட்டிருந்தேன்.

1989ஆம் ஆண்டு ஜே.வி.பி கலவரம். இலங்கைப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பு வதற்காக அந்நிய முதலீடுகளை அழிப்பதாகச் சொல்லி தேயிலைத் தொழிற்சாலைகளை தீயிட்டு கொளுத்திய காலம். ஜே.வி.பி. மலையகத் தொழிலாளர்களை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் எச்சங்கள் என உச்சரித் திருந்தமையும் நினைவுக்கு வருகிறது. மட கொம்பரையில் இருந்து பூண்டுலோயா பள்ளிக்குச் செல்லும் போது, இடையில் வரும் மடகும்புர காட்டுப்பகுதியில் பலர் கழுத்தில் டயர் மாட்டப்பட்டு எரியுண்டு கிடப்பதை பல தடவை பார்த்திருக்கிறேன். காலையில் பாட சாலை செல்லும்போது எங்கள் மட கொம்பரைத் தோட்டத்துரை (முகாமையாளர்) தர்மராஜா எனும் தமிழர், ஜே.வி.பி.யினரால் தலையில் சுடப்பட்டு வீதியோரத்தில் கிடந்ததை ஊருக்கு ஓடி தகவல் சொன்னதே நான்தான். அவரது கல்லறை இன்னும் ஊர் முகப்பில் சுட்டுக்கிடத்தப்பட்ட இடத்தில் அடையாளமாக உள்ளது. அதற்கு ஒரு கிலோ மீட்டருக்கு அப்பால் மக்கள் கவிமணி சி.வி வேலுப்பிள்ளை அவர்களின் கல்லறை அதே வீதியோரத்தில் உள்ளது. தெற்கில் ஜே.வி.பி பிரச்சினையை உச்சமாகியிருந்த நிலையில் வடக்கில் இந்திய ராணுவத்தை வெளியேற்றிய நிலையில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சி நடைபெற்று கொண்டிருந்தது. பேச்சு வார்த்தைக்கு என கொழும்புக்கு வந்து போய்க் கொண்டிருந்தார்கள் புலிகள். வன்னியே பாதுகாப்பானது போல் உணர்வு மீண்டும் ஏற்பட்டது.

1990ஆம் ஆண்டு க.பொ.த சா/த பரீட்சை எழுதிவிட்டு மீண்டும் வன்னிக்கு உயர்தரம் படிக்கவென கிளம்பியாயிற்று. இப்போது நான் மட்டும். இலங்கையில் 13ஆவது சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டு பல மாற்றங்கள் நடந்து இந்தியப் படைகளும் வெளியேறியிருந்த காலம் அது. இப்போது நான் சென்று சேர்ந்த இடம் விஸ்வமடு. அங்கு ஓர் அத்தை குடும்பமும், பெரியப்பாவும் இருந் தார்கள். அத்தை வீட்டில் தங்கியிருந்து முரசு மோட்டையில் அல்லது கண்டாவளையில் உயர்தரம் படிக்கலாம் என எண்ணியிருந்தேன். விஸ்வமடுவில் எங்களுக்கு



காணியும் இருந்தது. விடுமுறையில் மாமாவின் விவசாயத்துக்கு உதவிக் கொண்டிருந்தேன். அவ்வப்போது துவக்குகளுடன் நடந்த செல்லும் இயக்கப் போராளிகளைக் கண்டிருக்கிறேன்.

ஒரு நாள் காணிக்கு சைக்கிளில் போய்க்கொண்டிருந்த போது ஒழுங்கை வழியில் அகப்பட்ட முச்சந்தி ஒன்றில் எந்தப் பக்கமும் போக முடியாதவாறு துப்பாக்கித் தாங்கிய மூன்று சைக்கிள்களால் முடக்கப் பட்டேன். எனக்கு உதறல் எடுத்தது. "என்ன பெயர்? எங்கு வந்திருக்கிறாய்? எதற்காக வந்திருக்கிறாய்? ஈ.பியுடன் தொடர்பு உண்டா?" இப்படி ஏகப்பட்ட கேள்விகள். உச்சி வெயிலில், முச்சந்தியில் நின்று பதில் சொல்லிக்கொண்டிருந்தேன். ஏற்கனவே இவர்கள் வீதியில் உலாவுவதைக்

கண்டுள்ள தனால் அவர்கள் புலிகளென ஊகிக்க முடிந்தது. அவர்கள் விசாரணை முடிந்து விட்டதாக நினைத்த சில நேரங்களின் பின்னர், "சரி போகலாம்" என வழிவிட்டார்கள். சைக்கிளை உழக்கினேன்: பயத்தோடும், பதற்றத்தோடும் காணிக்குப் போனேன். பின்னர் வீட்டுக்குப் போனேன். மாமாவிடம் விடயத்தைச் சொன்னேன். "அப்படியா?" என நிதானமாகக் கேட்ட மாமா, "வெளிக்கிடு ஒரு இடத்துக்குப் போகலாம்" என உத்தர விட்டவராக அவசரமாய் வெளியே புறப்பட்டார். மலையகத் தொழிற் சங்கத் தலைவர் ஏ.அஸீஸ் அவர்கள் காலமான செய்தி வானொலியில் ஒலித்துக் கொண்டிருந்தது.

வெளியே சென்று வந்த மாமா ஆயத்த மாய் இருந்த என்னை அவரது சைக்கிளில் ஏற்றினார். வேகமாக மிதிக்கத் தொடங்கினார். நான் படிக்க நினைத்தாக எண்ணிய கண்டா வளை, முரசு மோட்டைப் பள்ளிக் கூடங்கள் எனது சைக்கிள் பயணத்தில் கடந்து போகின்றன. எங்கே போகிறோம் என தெரியவில்லை. என்னைப் பற்றிய சரியான தகவல்களைப் பதிவு செய்ய "பெரிய இடத்துக்கு" மாமா அழைத்துச் செல்கிறார் என்ற கற்பனையோடு "சைக்கிள் பாரில்" உட்கார்ந்து நானும் சப்போர்ட் மிதி கொடுக் கிறேன். அவர் ஒன்றும் பேசுவதாயில்லை. "பெரியதுகள் போய்விடு முன் நாம் போய் சேர்ந்து விடவேண்டும்" என்ற நினைப்பில் மாமா சைக்கிள் மிதிப்பதாகவே எனக்குப் பட்டது. பரந்தன் ரயில்வே நிலையத்துக்கு முன் வந்து இறங்கிய பின்னர் தான் பேசினார்.

"உனக்கு யாருடனும் தொடர்பில்லை என அவர்களுக்கு தெளிவாக தெரிந்து விட்டால் உனக்குப் பிரச்சினையில்லை. ஆனால் உங்கள் குடும்பத்துக்கு அதுவே பிரச்சினையாகி விடும். நீ வீட்டுக்கு ஒத்தையாள். எனக்கு தெரிந்த ஒரே வழி, உன்னை ஊருக்கு அனுப்புவதுதான்" என்றார். அப்போதுதான் அவர் போய்விடும் என அவசரப்பட்டது "யாழ்தேவி"க்காக என்பது புரிந்தது எனக்கு. முன்னர் படித்த சென்.திரேசா பாடசாலையை ரயிலில் இருந்தவாறே பார்த்துக் கொண்டு பொல்காவலை வழியாக வட்டகொடை வந்து சேர்ந்தேன். வந்து சேர்ந்து ஒரு மாதத்தில் இரண்டு பொலிஸ் நிலையங்கள் மடகொம்பரை வீட்டை சுற்றி வளைத்தது தனிக்கதை. ஆனால் அன்று என்னைப் பொல்காவலையில் இறக்கி விட்டுப்போன "யாழ்தேவி" இன்றுவரை மீண்டும் யாழ்ப்பாணம் போகவில்லை என்பது தான் தற்போதைய கதை. வவுனியா, தாண்டிக் குளம், என படிப்படியாக இப்போதுதான் கிளிநொச்சிப் போக எத்தணித்துக் கொண்டி ருக்கிறது. ஆனால் அந்த யாழ்தேவியின் மீள்பயணத்தை முந்திக்கொண்டு நான் இன்று பஸ்ஸில் யாழ்ப்பாணம் போகிறேன் என்பதால் தான் எனக்குள் இத்தனைப் பதற்றம், பரபரப்பு.

மாமா கூட எத்தனை "தூர நோக்குடன்" செயற்பட்டிருக்கிறார். மாமா சொன்னதைக் கேட்டு அன்று வந்தவன் இன்று இருபத்து மூன்று வருடங்களுகுப் பின் வன்னியைக் கடந்து 27 வருடங்களுக்குப் பின் யாழ்ப்பாணத்துக்குப் போகிறேன். இந்த கால இடை வெளியில் வன்னியில் பெரியப்பா மகன் தவராஜா அண்ணன் தற்கொலை செய்து கொண்டிருந்தான். என்னைப் படம் பார்க்கக் கூட்டிப்போன அத்தை மகன் திருச்செந்தூரன் "நித்தி" யாகப் புதைக்கப்பட்டிருந்தான். அத்தை மகள்- மச்சாள் சாந்தினி "பூங்குயி லாக" விதைக்கப்பட்டிருந்தாள். இவர்கள் எல்லாம் மடகொம்பரை மண்ணில் பிறந்து கைக்குழந்தையாக வன்னிக்கு தூக்கிச் செல்லப்பட்டவர்கள் என்பதை யாரறிவார்?. "ரெயிலராக" தொழில் செய்த பெரியப்பா மெய்யர் (தங்கையா ரெயிலர்) இறுதிகட்டப் போரில் மக்களை வெளியேறுமாறு கோரப் பட்டபோது தனது தையல் மெஷின் மேல் பாகத்தை மட்டும் தூக்கிக்கொண்டே ஓடிவந்து, அதையும் தூக்க சக்தியில்லாமல் போட்டுவிட்டு வந்த துக்கத்திலேயே நோய்வாய்ப்பட்டுக் கிடந்தார். "அருணாசலம்" முள்வேலியில் இருந்து அவரை மீட்டெடுத்து வைத்தியம் பார்த்தும் வெற்றியளிக்காமல் இறந்துபோக அவர் பிறந்த மடகொம்பரை மண்ணிலேயே மீண்டும் புதைத்தோமே... இதையெல்லாம் என் மனதில் சுமந்தபடி எப்படி பதற்றமின்றி பயணப்படுவது?

நண்பர் லெனினுடன் உரையாடிக் கொண்டே பயணம் தொடர்ந்தது. இடையில் அவர் உறங்கிவிட்டாலும் எனக்குள் இருந்த தவிப்பு உறக்கத்தை ஏற்க மறுத்தது. சுவடு களைப் பார்த்தவாறே பயணித்தேன். இப்போதைக்கு வன்னிக்குள் இறங்குவதில்லை என்ற முடிவோடு யாழ்ப்பாணத்திற்கு. இடை யிடையே பஸ் ஓட்டுனரும் "மரண" பயத்தைத்

தரத் தவறவில்லை. சில இடங்களில் அவர் மீது கோபப்பட்டாலும் "புதிதாக" திரும்பிப் போகும் எனக்குள் சில கட்டுப்பாடுகளை உருவாக்கிக் கொண்டேன். பஸ்ஸில் ஊடகவியலாளர்கள் தேவகௌரி, துஷ்யந்தினி மற்றும் கேஷாயினி உடன் பயணித்தாலும் அதிகம் உரையாடக் கிடைக்கவில்லை. அதற்குப் போதுமான நேரடி யான அறிமுகமும் அப்போது இருக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் இறங்கி நேரடியாக "இலக்கியச் சந்திப்பு" நடக்கும் இடத்திற்குச் சென்றது முதல் அடுத்த நாள் சந்திப்பு முடியும் வரை அங்கிருந்து எங்கும் அசையவில்லை. இரண்டாவது நாள் காலையில் முதல் அமர்வில் நான் "மலையகக் கவிதை இலக்கிய செல் நெறியும்- மலையக தேசியமும்" எனும் தலைப்பிலும் மாலையில் இறுதி அமர்வில் "மலையக தேசியம்- ஒரு பதிகை" எனும் தலைப்பில் நண்பர் லெனின் மதிவானமும் உரையாற்றினோம். இரண்டாம் நாள் இரவே புறப்படும் எங்கள் திட்டம் தோல்வியடையுமாப் போல் தெரிய மேலதிக ஒரு நாளைக்குமாக பயணத்தை ஒத்திவைத்தோம். இரண்டாம் நாள் இரவு தங்குவதற்காக இடம் மாறி வந்தோம். நட்போடு ஆரம்பித்த நண்பர்கள் அசுரா, தேவதாஸ் அன்போடு அரவணைத்துக் கொண்டார்கள். தங்குமிடம் போகும் முன் ராகவன் - நிர்மலா வீட்டுக்குச் சென்றோம். மேசை மீது ஏறியமர்ந்த தேவதாஸ் ஈ.பி.ஆர்.எல்.எப்பின் மலைநாட்டுப் பாடலைப் பாட, நிர்மலாவும், சுமதியும் திருமதி. மீனாட்சியம்மாள் நடேசய்யர் பாடலைப் பாட கச்சேரியே ஆரம்பித்து விட்டது. கோவை நந்தன், அசுரா, ராகவன், லெனின் ஆகியோர் கைதட்டி உற்சாகமூட்ட பலரும் அதிகம் கேட்டிராத மலையகக் "கானா" மன்னன் வட்ட கொடை கபாலி செல்லனின் (அவர் இறந்து அப்போது ஒரு மாதம் கூட ஆகியிருக்க வில்லை) தோட்டப்புற பாடல்களை நான் பாடினேன்.

"நாடு... எந்த நாடு...
நம்பி வாழ... சொந்த நாடு...
அந்தரத்தில் வாழச் சொல்லி
அனுப்பியிருக்கான் சிட்டிசன் கார்டு",
"ஏய்க்கிறான் ஆளு ஏய்க்கிறான்..
எங்கள ஏமாளி என்று சொல்லி
ஏய்க்கிறான்..."

போன்ற துள்ளிசைப் பாடல்கள் நிர்மலா உள்ளிட்ட நண்பர்களை ஆட்டமே போடவைத்தன. பழகுவதற்கு இனிமையான வராக ஒரு தாய்மையின் ஸ்தானத்தில் இருந்து என்னை வாழ்த்தினார் நிர்மலா. இலக்கிய சந்திப்பில் உள்ளடங்காது இரவில் இயல்பாக எழுந்த இசை அரங்கு மலையகப் பாடல்களை மாத்திரமே கொண்டிருந்தமை எதேச்சையாக நடந்த ஆச்சரியம். இரவு உணவை முடித்துக் கொண்டு இரவு தங்குவதற்கு இன்னுமொரு வீட்டுக்குச் சென்றோம். அங்கே, காகம் - பதிப்பக நண்பர்கள் இத்ரிஸ், இம்தாத், நவாஸ் சௌபி, இம்ரான் மற்றும் ஸ்டாலின் ஞானம், விஜி, கவியுவன், தம்பிகள் ஜேசு, திலீபன் ஆகியோருடன் கலகலப்பான கதையாடல் களுடன் இரவு கழிந்தது. நண்பர் இத்ரிஸ் மத்தியில் நாற்காலி போட்டு அமர்ந்திருந்து வழி நடத்த நாங்கள் வட்டமாக பாயில் அமர்ந்து விவாதிக்க இலக்கியச் சந்திப்பின் இன்னு மொரு அமர்வானது அந்த இரவு.

மூன்றாம் நாள் காலை. இருபத்து மூன்று வருடங்களுக்குப் பிறகு கப்பியிழுத்து கிணற்று நீர்க் குளியல். சில்லென்று இருந்தது காலையுணர்வு. நண்பர்களோடு காலை யுணவு. யாழ்ப்பாணத்தைச் சுற்றிப்பார்க்கப் போவதாக நானும் லெனினும் கிளம்பினோம். நண்பர் லெனினிடம் என் திட்டத்தைச் சொன்னேன். "ஒன்றும் பிரச்சினை இல்லை. நீங்கள் எங்கு போக வேண்டுமோ அங்கு போவோம்" என ஒத்துழைத்தார். காங்கேசன் துறை பஸ்ஸில் ஏறி "தாவடியில் இறக்கிவிடுங்க தம்பி" எனச் சொன்னேன். சொன்னபடி செய்தான் கண்டக்டர் தம்பி. 27 வருடமாக என் மனக் காட்சி யில் இருந்த நினைவுகளை வைத்துக் கொண்டும், பாதையோரத்தில் இருந்த கராஜில் "அந்த அரிசி ஆலையை" விசாரித்துக் கொண்டும் அந்த ஒழுங்கைக்குள் நடக்கிறோம். உச்சி வெயில் வேறு. அந்த ஆலையின் "கேட்"டை அடைந்ததும் ஒழுங்கை முடிந்து விடும். அந்த எல்லைக்குள் போனதும் எனக்குள் ஒரு தவிப்பு. லெனின் என் உணர்வுகளைப் புரிந்துகொண்டவராகத் தெரிந்தார்.

நான் சைக்கிளோடிய தளம் ஆங்காங்கே காட்டுச் செடி மண்டிக்கிடக்க, இங்கேதானே வீடு இருந்தது என நெருங்கிப் பார்த்தேன். வீடு இருந்த அடையாளங்களாக அத்திவாரம் கொஞ்சம் தெரிந்தது. முட்டிய கண்ணீரை வெளியே வரவிடாமல் பார்த்துக் கொண்டேன். ஆலைக்குச் சென்று விசாரித்தால் "அவர்கள் எங்களுக்கு விற்று

கணகாலம் ஆச்சுது" என்று சொன்னார்கள். நாங்கள் வாழ்ந்த வீட்டு பிரதேசம் தளமும் கூறு போட்டு விற்கப்பட்டிருந்தது. ஆசையாய் நான் குளிக்கும், "தண்ணீர் தொட்டி எங்கே?" எனக் கேட்டேன்.. "அதோ..." என திசை காட்டினார் புதியவர். படம் எடுத்துக்கொள்ளலாமா என்றேன். முதலாளியைக் கேட்டுச் சொல்வ தாகச் சொன்னார். வேண்டாமென நாங்களே தவிர்த்துவிட்டு, வீடும் தளமும் இருந்த அடை யாளத்தோடு நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டேன். அந்த நிமிடங்களில் பழைய நாட்களின் அத்தனை நினைவுகளையும் தவிர வேறொன்றும் மனதில் எழவில்லை.

1984 ஆக இருக்கலாம். 10-11 வயதுப் பையனாக ஓடித் திரியும் நான். விடுமுறையில் வந்து அம்மாவுடன் நிற்பதென்றால் தனிச் சந்தோஷம். தோட்டத்தில் வாளி கொண்டு போய் பீலிக்கரையில் தண்ணீர் பிடிப்பது மாதிரி, அரிசி ஆலையில் இயந்திரத்தில் அரிசி கொட்டும் போது, அதனை வாளியில் பிடிப்பதில் பெரும் ஆனந்தம் எனக்கு. அப்படி பிடித்து வரும் சூடான அரிசியைக் கொண்டு சோறாக்கிச் சாப்பிட்ட காலம் அது. அடிக்கடி கடைக்கு ஓடுவதில் சின்ன சந்தோஷம்.

ஒரு நாள் கடைக்குப் போன என்னிடமும் கூட்டமாய் சைக்கிளில் போன அண்ணாமார்கள் சில துண்டுப்பிரசுரங்களை கொடுத்து விட்டுச் சென்றிருந்தார்கள். அது என்ன ஏதென்று தெரியாமல் கையில் வைத்துக் கொண்டு மிளகாய்த்தூள் வாங்குவதற்கு சந்தியில் இருந்த கிரைண்டிங் மில்லில் நின்றிருந்தேன். பட...பட... வென ஒரே சத்தம். சனம் அலறியடித்துக் கொண்டு ஓட ஆரம்பித்தது. வீதியை எட்டிப் பார்த்தேன். துண்டுப் பிரசுரம் விநியோகித்தவர்களைத் தேடி ஆமி வெறியாட்டம் ஆடிவருவதாகக் கூறி "ஓடடா தம்பி வீட்டுக்கு" என்று என்னை விரட்டினார் கடையுரிமையாளர் வீரப்பா தாத்தா. வீதியைத் தாண்டும் போது மாடு ஒன்று சூடுபட்டு சுருண்டு விழுவதைக் கண்ணுள் வாங்கியவாறே ஒழுங்கைக்குள் ஓட்டமெடுத்தேன். வளவு "கேட்டை" இறுக்கி தாழிட்டுப் பூட்டி விட்டு, மூச்சு வாங்க அம்மா விடம் ஓடி நடந்ததைச் சொன்னேன். உள்ளதைச் சுருட்டிக் கொண்டு அம்மாவும் நானும் வெளியே வந்தோம். அப்பா சற்றே உள்ளே அமைந்த ஆலையில் வேலை. ஆலை பக்கத்தில் உள்ள முதலாளி வீட்டில் இருந்து அவரது அம்மா வெளியே வந்தார். நாங்கள் கலவரப்படுவதை அவதானித்தார். நான் அவரிடம் நடந்ததை சொல்லிக் கொண்டி ருக்கும் போது நான் இறுகப் பூட்டிய கேட்டை கூட்டமாக வந்த ஒரு குடும்பம் பதற்றத்தோடு தட்டியது.

"ஆமி... சுட்டுக் கொண்டு.. வாரான்... எங்களை காப்பாத்துங்கோ...கேட்டைத் திறவுங்கோ..." என அலறியது. கணவன், மனைவி, பிள்ளைகள் என ஒரு ஐந்தாறு பேர் இருக்கும். அரிசி ஆலையை வந்தடையும் ஒழுங்கையின் ஒரு பக்கத்தில் அமைந்துள்ள குடிசைகளில் வாழும் குடும்பங்களில் ஒன்று என நான் அடையாளம் கண்டவனாக கேட்டைத் திறக்க ஓடினேன். "தம்பி... திற வாதையோடா...திறவாதையோடா..." என என்னைத் தடுத்தார் முதலாளி(யின்) அம்மா.

வந்தவர்கள் துடிக்கிறார்கள். அழு கிறார்கள். கெஞ்சுகிறார்கள். ஆனால் முதலாளி- அம்மாவோ கடிந்து கொள்கிறார், என்னை அதட்டுகிறார். எனக்குக் காரணம் புரியவில்லை. சூடுபட்டு சுருண்டுவிழுந்த மாட்டைக் கண்ணால் பார்த்து வெருண்டு போயிருந்த எனக்கு முதலாளி அம்மாவின் அதட்டல் இன்னும் பயத்தைக் கொடுத்தது. அம்மா என்னைக்கிட்டவாக இழுத்து அணைத்துக் கொள்கிறார். நான் கேட்டைத் திறப்பதிலேயே குறியாயிருந்தேன். சூட்டுச் சத்தம் அண்மித்து கேட்கத் தொடங்கியது...

ஓடிவந்த குடும்பத்தின் ஒரு மனிதர், மேல் சட்டையில்லாது சாரத்தை தொடை வரை மடித்துக்கட்டி இடுப்பில் சின்னக் கத்தியும் சொருகியிருந்தார். கறுத்த உயர்ந்த அந்த மனிதர் கேட்மீது ஏறி உள்ளே பாய்ந்தார். அவரது முறுக்கேறிய பலம் கொண்ட கை இழுத்த ஓர் இழுவைக்கே பூட்டு பிளந்தது. கேட் திறந்தது. இப்போது அதிக எண்ணிக்கை யானோர் நாங்கள் நின்றிருந்த ஆலை வளவுக்குள் நுழைந்தனர். அவர்கள் கையில் அகப்பை, கத்தி, சமையல் சாமான்களும், சிறுசுகள் கையில் உருட்டி விளையாடிய சைக்கிள் டயர்களுமாகக் கூட்டமாக உள்ளே வந்தார்கள். நின்றது நிற்க ஓடிவந்திருக் கிறார்கள். ஆனால் இப்போது ஆமியின் சத்தம் குறைந்திருந்தது. இரண்டு மூன்று வளைவுகள் கொண்ட அந்த ஒழுங்கையில் ஆமி இரண்டாவது வளைவைத் தாண்டி உள்ளே வரவில்லை. வெறிச்சோடிக்கிடந்த வீடுகளைப் பார்த்துவிட்டு மீண்டும் வீதிக்கு சென்றிருக்க வேண்டும். ஆனால் உள்ளே வந்த குடும்பத்

தினர் ஆலையின் எல்லையெங்கும் பரந்தனர். முதலாளி அம்மா இரண்டு கையாலும் தலை யில் அடித்துக் கொண்டார்.

மலையகத் தோட்டங்களில் தொழிலாளர்கள் மத்தியில் "ராங்கிப்" பேசிக் கொள்வதால் சிறுவர்களும் சாதாரணமாகப் பேசுவார்கள். அம்மா என்னை அந்தச் சூழலில் இருந்து தவிர்த்தே வளர்த்து வந்தார். ஆனால் உள்ளே வந்த உயர்ந்த, கறுத்த மனிதர் முதலாளி அம்மாவை நெருங்கி... என்னடி சாதி... "........" சாதி... என இன்னோரன்ன மொழியில் திட்டித்தீர்த்தார். அவர் பேசிய ராங்கி சூழலில் இருந்து அம்மாவால் என்னைத் தவிர்க்க முடியவில்லை. தடுக்கவும் முடிய வில்லை. நானும் அந்த ராங்கியை அன்று விரும்பி ரசித்தவனாகவே இன்று உணர்கிறேன். ஆலையில் இருந்து வெளியே வந்த அப்பா முதல் அனைத்து வேலையாட்களும் நாங்களுமாக ஒரு நாடகம் மாதிரி அந்தக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது எனக்கு அதிகம் புரியாத அன்றைய நாளின் காட்சிகள் இலக்கிய சந்திப்பில் எழுத்தாளர் தெணியான், சீனியர் குணசிங்கம், அகல்யா, தேவதாஸ், ரெங்கன் தேவராஜன், ஏ.ஸி.ஜோர்ஜ் போன்றோரின் உரைகளினூடும் அமர்வின் இணைப்பாளராகவிருந்த வேல்தஞ்சனின் படபடப்பில் இருந்தும் அதிகமாகவே புரிந்தது. சிங்களப் பாடசாலையின் "சரத் சேர்" இப்போதும் என் கண்ணுக்குள் நிழலாடிச் செல்கிறார்.

நினைவுகளில் மீண்டவனாக நானும் நண்பர் லெனின் மதிவானமும் திரும்பவும் கே.கே.எஸ். வீதி நோக்கி நடந்தோம். யாழ்.நூலகம், நல்லூர் கோயில் இரண்டுக்கும் சென்றோம். உள்ளே போகக் கிடைக்க வில்லை. பௌர்ணமி நாளில் யாழ்.நூலகம் மூடியிருந்தது. நல்லூர் பூஜை நேர முடிவால் பூட்டியிருந்தது. ஆனால் இலங்கையில் பௌர்ணமி நாளிலும் தங்களது திறமையை பையில் சுமந்தபடி வந்த தேவதாஸ், அசுரா, கோவை நந்தனுடன் ராகவன்-நிர்மலா, சுமதி சிவமோகன், வாசுகி ஆகியோரின் புதிய வீட்டைச் சென்றடைந்தோம். முதல் நாள் இரவு கச்சேரி நடாத்திய பழைய வீடு அவர் களது சகோதரி "ராஜினி திராணகம" நினைவ கமாக பராமரிக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. வாசலில் அமர்ந்து கலகலப்பாக இருந்துவிட்டு முதல்நாள் தங்கியிருந்த வீட்டுக்கு வந்தோம். இரண்டு நாளைக்கு மாத்திரம் ஆடைகள் கொண்டுபோயிருந்த நாங்கள் மூன்றாம் நாள் பயணத் திரும்புதலின் போது நண்பன் அசுரா தனது பிரான்ஸ் பயணப் பொதியில் இருந்து வெளியே இழுத்துத் தந்த புதிய ஷேர்ட்டுகளை அணிந்து கொண்டோம். யாழ்ப்பாணத்துடன் ஒரு புதிய உறவு ஏற்பட்டி ருப்பதாய் உணர்ந்தேன். பஸ் ஏறும் வரை கூடவே வந்து வழியனுப்பிய நண்பர்கள் அசுரா, தேவதாஸ் ஆகியோருடன் உணர்வுகலந்து விடை பெற்றுக் கொண்டு, ஒடியல், கருவாடு, பருத்தித்துறை தட்டைவடை, இடியப்பத் தட்டு, மோர்மிளகாய், பனங்கட்டி என ஒரு குட்டிச் "ஷொப்பிங்" ஒன்றையும் முடித்துக் கொண்டு கொழும்பு பஸ்ஸில் ஏறிவிட்டோம்.

அவ்வப்போது சட்டைப் பைக்குள் இருந்து கொண்டு நண்பன் அசுரா பகிடி விட்டுக்கொண்டிருப்பது போன்ற உணர்வு அடிக்கடி வந்துபோனது. அடுத்த நாள் காலை ஆறுமணிக்கு வீடு வந்து சேர்ந்ததும் அம்மா கேட்ட முதல் கேள்வி:

"நம்ம இருந்த யாழ்ப்பாண வீடு எப்படிப்பா இருக்கு...?"

●

## மிக நெருக்கமாக நகரும் எறும்புகள்

அதற்கே உரிய பாணியில்
அது நகர்கிறது
அதன் சுமையை விட
அதிகளவான சுமையை சுமந்தபடி
கொஞ்சம் இல்லை முழுமையாக
எங்கள் சமூகத்தின் சாயல்
புரிகிறது

எறும்புகளும் நாங்களும்
ஒரே விதமாய்
மற்றவர்களால் நசுக்கப்படுகின்றோம்
ஆனால்
நாங்கள் கடி எறும்பு அல்ல
மிக நெருக்கமாக நகரும்
எறும்புகளும் எங்கள் தோழிகள்
அதிகாலையிலேயே சுமைகள்
சுமந்தபடி
யாருக்காகவோ நகர்கின்றன

நானும் எறும்பாகப் பார்க்கிறேன்
நகர்கிறேன்
ஆனால் நசுக்கப்பட மாட்டேன்
கடி எறும்பாக கடிவாளமிட்டு
விடியலைத் தேடுகிறேன்

எஸ். திலகவதி

மொழிவரதன்

# ஆணிவேர்களும் பக்க வேர்களும்



பேராதனை பல்கலைக்கழகம் சேர் ஐவர் ஜெனிங்சின் அழகான கற்பனையில் உருவான அருமையான வளாகம். அதிக மழையுமில்லை. அதிக குளிருமில்லை. வளமான மண்ணைக் கொண்ட பூமிப்பிரதேசம். தலவா புற்கள் நேர்த்தியாக வளர்ந்தோங்கி நிற்கும் பகுதி. இங்கு அதிக சனநெரிசலும் இல்லை அதிக பெரிய நகரமாயுமில்லை. பல ஏக்கர் நிலப் பரப்பில் பரந்து விரிந்து கிடக்கும் இப் பல்கலைக்கழகத்திற்கு இணையாக வேறெந்த பல்கலைக்கழகமும் இலங்கையில் இயற்கையான சூழலில் அமையப் பெற வில்லை. மிகச்சரியான இடத்தில், மிகச் சரியான திட்டமிடல்களுடன் ஆரம்பமான இப்பல்கலைக்கழகம் சென்றோர் ஒருவகை யில் அதிஷ்டசாலிகளே. மிகவும் ரம்மியமான மகாவலி நதிக்கரையின் ஓரத்தில் வளாகம் அமைந்துள்ளது. அந்த வளாகத்தினூடாக நதி செல்கின்றது. நதியின் இருமருங்கிலும் வளர்ந்தோங்கி நிற்கும் மூங்கில் மரங்கள் இயற்கையோடு இணைந்து பிரமிப்பையே ஊட்டுகின்றன.

இந்த நதியின் ஓரத்திலுள்ள உள்ளக விளையாட்டரங்கு உள்ளக விளையாட்டு களுக்கு உயிரூட்டுகின்றது. பள்ளிக்காலம் முதல் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் வீரர் வீராங்கனைகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம். இவர்கள் பட்டப்படிப்பைத் தொடர உள்நுழையும் வேளையில் அவர்களை இவ்வரங்கம் அன்புடன் வரவேற்கின்றது.

மாலை 4.00 மணிக்கு மேல் ஆண். பெண் இருபாலர்களில் ஆர்வமுள்ளோர் எப்படியும் இங்கே வந்து விடுவர். எமது கூட்டத்தில் எம்மோடு கலைப்பிரிவில் இருந்த நண்பர் விஸ்வராஜா மிகவும் ஆர்வமுடன் இதிலீடு படுவார். மேலும் இராஜேந்திரன். விவசாயபீட பாலா இப்படிச் சிலர். இதே போல சகோதர மொழி நண்பர்களும் பலர் இருந்தனர்.

சராசரி எம்மைப்போன்றவர் உடலை விட எப்படியோ அவர்கள் "ஸ்மாட்டாகத்தான்" இருந்தார்கள். இவர்களது உடல்வாகு, நெஞ்சுப்பகுதி கைகால்களின் பலமான நிலை, நடை இப்படி பலவற்றைக் கூறலாம்.

பிரதான வீதியிலிருந்து கலஹா வீதிக்குள் நுழைந்தால் அருணாசலம்விடுதி, ஆர்ட்ஸ் தியேட்டர், மார்க்கஸ், ஹில்டா ஒபேசேகர, சங்கமித்த, இராமநாதன், ஜேம்ஸ்பீரீஸ் என்பனவற்றினூடாக செல்லும் கலஹா வீதி.

இந்த வீதிக்கு இரு மருங்கிலும் வரிசையாக வளர்ந்தோங்கி நிற்கும் அழகிய பூ மரங்கள் வண்ணப்பூக்களை அள்ளிசொரியும் மரங்கள், என்றுமே மறக்க முடியாத மஞ்சள் பூக்கள். கந்தான மலைகளும் ஆங்கே வளர்ந்தோங்கி காற்றுக்கு நடனமாடும் பத்தனா பூச்செடிகளும், வானில் பறந்தோடி மகிழும் பறவைகளும் மேகங்கள் மூடும் இனிமையான பொழுதுகளும் வாலிபத்தின்

இளம் நரம்புகளில் குதூகலத்தைத்தான் ஏற்படுத்தும்.

பட்டுப்பூச்சியாய் மினுமினுக்கும் நில வண்டுகளாய் சாலை எங்கும் சரசரக்கும் ஒலி வலயங்களுடன் இளம்பூ சிட்டுகளின் கூட்டம்.

ஸ்ரீலங்கா என்னும் இவ்வழகிய தீபகற்பத்தின் பல்வேறு திசைகளிலிருந்தும் வண்ணவண்ணமாய் பறந்து சிவனொளிபாத மலையை நோக்கிச் செல்லும் வண்ணத்துப் பூச்சிகளைப்போல, எங்கெங்கோ இருந்து வந்துலாவும் இளம் பெண்களின் வண்ண மயமான கூட்டம். யாழ் மொழியும், கிழக்கு மொழியும், மலையக மொழியும் ஆங்காங்கே ஒலிக்கின்றது. பல்வேறு பிரதேசங்களில் இருந்து வந்த இஸ்லாமிய சகோதரர்களின் தமிழும் ஆங்காங்கே கலக்காமல் இல்லை.

இதே போன்றே இந்தச் சிங்கள சகோதரர்களின் பேச்சு வழக்குமாகும். மலைநாட்டுப் பிரதேச சிங்கள மக்களின் பரம்பரையில் இருந்து வந்தவர்கள், கரை நாட்டில் இருந்து வந்தவர்கள் இன்னும் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து வந்தவர்கள் எனப்பல தரப்பினர் சிங்கள நண்பர்களிடையே உலாவினர். அவர் களுக்கிடையிலும் வித்தியாசமான சொற்கள் பயன்படுத்தப்பட்டமையை அவதானிக்கலாம்.

"தொப்பிலா ஒக்கோம அவசட்ட மெதனட்ட என்ட ஒன" (நீ எல்லாம் மாலையில் இந்த இடத்திற்கு வருதல் வேண்டும்)

என்று ஒரு நாள் ஒருவன் கூறிய போது "தொப்பிலா" என்ற சொல் புதிதாக இருந்தது.

சிங்களம், தமிழ், முஸ்லிம், பறங்கியர் மேலும் வெளிநாட்டிலிருந்து வந்துள்ளோர் எனப்பலவகை இனத்தவர்களும் ஒன்று சேரும் ஓரிடமாக பல்கலைக்கழகம் மிளிர்வதைக் காணலாம்.

பல்வேறு மட்டங்களிலிருந்து மாணவர்கள் இங்கு பிரவேசம் செய்திருந் தாலும் பல்கலைகழகத்தைப் பொறுத்தவரை அவர்கள் மாணவர்களே. இக்கால அனுப வங்கள் அவரவர் வாழ்வின் பக்கங்களில் பசுமையாக பதியப்படுகின்றது. அந்தப் பக்கங் களை மீளவும் மீட்டிப் பார்க்கும் பொழுது நினைவு அலைகள் மேகங்களாய் உள்ளத் துள்ளிருந்து வெளிக்கிளம்புகின்றன.

புரட்சி, போராட்டம், சிவப்பு சட்டைகள், கோஷங்கள் எப்படியும் பல்கலைக்கழக மாணவர்களின் மனதில் நிழலாடாமல் இராது. ஒரு எதிர்ப்புணர்வுடனான எதிர்ப்பு அலைகள் இங்கே எழாமல் இருக்காது. சித்தாந்த விளக்கங்கள், மறுப்புக்கள் எப்படியும் இல்லாமல் இல்லை.

மாணவர் சங்க தேர்தல்கள் அவைகளுள் சில. மிகவும் சோகம் படிந்த வரலாற்று ஏடுகளை வளாகம் கொண்டுள்ளமை உண்மையாகும். அவ்வாறான அக்காலங் களில் பலர் இறந்தனர். பலர் காணாமல் போயினர். சிங்கள மாணவ, மாணவியர் இக்காலங்களில் குறிவைக்கப்பட்டனர். இக்கொடூர காலகட்டங்களைத் தொடர்ந்து... *1974-1977* காலங்கள் எங்கள் காலங்களாக மலர்ந்தன.

இரத்தக்கறைகள் காய்ந்த வண்ண மிருந்த காலம் எதுசரி எதுபிழை என்பது பற்றிக் கூட கூறமுடியாத ஒரு சூழ்நிலை. எங்கள் காலங்கள் புயல் முடிந்த அமைதி தோன்றியது போன்ற ஒரு காலமாகும். பூநகரி ஆசி ஆறுமுகம், சாவகச்சேரி உருத்திர கோடீஸ்வரன், கோப்பாய் சசி கிருஷ்ண மூர்த்தி, கார்த்திகேசன், பத்மகாந்தன், கருணாகரன், திருமலை நவம், மெய்ய நாதன், லங்கநாதன், தியாகராஜா, கல்முனை முஸாதீக், வவுனியா மகேந்திரன், கல்முனை ரபீக், தர்மலிங்கம், ஹெமாத்தகம ஹாசீம் அகத், ஆயிஷா, அம்பிகா, அருந்ததி, அருணா, திருக்கோணமலை பவுத்திரா நவரட்ணராஜா, கொழும்பு காளியப்பா பிள்ளை பவானி, கறுப்பு சரஸ்வதி, வெள்ளை சரஸ்வதி, மாத்தளை விஜயலட்சுமி, வெள்ளை சுப்பிரமணியம், கறுப்பு சுப்பிரமணியம் இப்படி எத்தனை பேர்.

இந்த உள்ளூர் கூட்டத்தை தவிர வெளி நாட்டுக்கு கூட்டமும் இருந்தது. இந்தியா விலிருந்து ஆய்வு ஒன்றுக்காக வந்திருந்த Mr. "கேனா"(இப்படி தான் இந்தப் பெயர் இருத்தல் வேண்டும்) அவருடன் எமது சீனியர் "ஆறு" உடன் சென்று கதைப்பது வழக்கம். ஆங்கிலத்தில் இவ்வுரையாடல் நிச்சயம் இருக்கும். ஏனெனில் Mr. "கேனா" வுக்கு தமிழ் தெரியாது என்றே எண்ணு கின்றேன். "ஆறு" அவர்கள் கடுமையான வாசிகசாலை படிப்பக்கு பின்னர் ஒரு Relife ஆக அவரிடம் கதைப்பதுண்டு எனலாம்.

இவ்வுரையாடல் சீரியஸ் ஆனதாக இராது. அதே வேளை அவரைக் கிண்டலடிப்பதாக வும் அமையாது. ஆனால் சுவாரஸ்யமான தாகவே அமையும். குறிப்பாக இந்தியாவில் பேச்சு வழக்கில் எவ்வாறு ஆங்கில மொழியை பயன்படுத்துகிறார்கள் என்பதுவே அது.

"வீ ஸ்டார்டு அவர் வேர்க்கு எட் நைனோ குளக்கு. எனட்டு வி fபினிஸ் அவர் வேர்க்கு எட்டு fபோ குளக்கு..."

என்று Mr.கேனா பேசும் போது இலங்கையர் எமக்கு வியப்பாக இருக்கும். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் ஆங்கிலத்தை எவ்வாறு உச்சரிக்கிறார்கள் என்பதை அறியலாம். மேலும் சில ஆபிரிக்க நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர் ஞாபகத்தில் இல்லை. அவர்களுள் சிலர் மிக நன்றாகவே ஆங்கிலத்தைக் கதைத்தார்கள்.

வெளிநாட்டவர்கள் மாத்திரமல்லாது உள்நாட்டிலே பல்வேறு பிரதேசங்களில் இருந்து வந்திருந்த இஸ்லாமிய நண்பர்களும் கூட தமது பிரதேச வழக்குச் சொற்களையும், பேசும் தொனியையும் வெளிப்படுத்தினர். உதாரணமாக கல்முனையில் இருந்து வந்திருந்த இரண்டு நண்பர்கள் இரண்டு விதமாக உரையாடினர்.

கல்முனையில் வெவ்வேறு குறிச்சிகளில் இருந்து(பிரிவுகளில் இருந்து) வந்தவர்கள் இவர்கள் என்று பின்னர் அறிந்தோம். ஓர் இஸ்லாமிய சகோதரர் சற்றுத் தெளிவாகவே தமிழ் மொழியைப் பேசும் போது அதே வேளை மற்றவர் சொற்களை சற்று ராகமாக இழுத்துப் பேசுவது தெரிந்தது.

"ஒங்களுக்கென்ன ரூமிலிருந்து படிப்பீங்க எனக்கு... ரூமுள இரு..ந்து படி..க்..க.. ஏலாது" என்பார் ஒருவர்.

"எங்க அவுக அவுக வரல்லையா...?"

என்று காத்தான்குடி நண்பர்கள் கதைக்கும் போது எங்களுக்கு எங்கள் மலையக நண்பர்கள் சிலரின் பேச்சு வழக்கு ஞாபகத்திற்கு வரும். இப்படி எத்தனை எத்தனை பசுமையான நினைவுகள். அவைகள் கால வெள்ளத்தால் அள்ளுண்டு போயின... என்றாலும் ஒரு சில எனது நெஞ்சலைகளில் வந்து போகின்றன. ஆசி ஆறுமுகம், பத்மகாந்தன், கோடீஸ்வரன் ஆகியோர் முதலாம் வருடத்திலேயே என்னுடன் நெருங்கிய நண்பர்களானார்கள்.

லெக்சரர் ரூம், லைபிரரி, ஊஸ்கெண்டீன் போன்ற எல்லா இடங்களிலும் இருப்போம். கதைப்போம். இவர்களுக்கிடையே சில பல ஒற்றுமைகள் இருந்தன. ஒன்று பெரிய குடிகாரர்கள் இல்லை, முரட்டுத்தனமும் இல்லை, பெம்பிளையளுக்கு "சல்" அடிக்கும் கூட்டத்தில் அவர்கள் அதிகம் இருப்ப தில்லை. அவர்கள் மண் ஒன்று. அதுதான் சாவகச்சேரி. மற்றது அவர்களது பாடசாலை. இந்த அணியிலிருந்து சற்று வேறுபட்டவர் சசி கிருஷ்ணமூர்த்தி. எல்லோராலும் "சசி" என்று அன்பாய் அழைக்கப்படும் அவர் கோப்பாய் தெற்கைச் சார்ந்தவர்.


முதலாம் வருட அக்பர் விடுதியில் இக்கூட்டமெல்லாம் இருந்தது. ஒரே மூச்சில் அடுத்தடுத்து அறைகளை அது ஆக்கிர மித்துக் கொண்டிருந்த வேளை வந்து பார்த்த சீனியரில் ஒருவன் சொன்னான்

"இது சரிப்பட்டு வராது ஒரே ஊர், ஒரே ஸ்கூல் இப்படியெல்லாம் இங்கேயும் அடுத்தடுத்த அறைகளை எடுத்து வாழ முடியாது. இங்கே கலந்திருக்கனும்..."

இப்படி அவன் கூச்சலிட்டான்.

பின்னர் வேறு சில சீனியர்கள் வந்து கதைத்தார்கள். பிரச்சினை தீர்ந்தது.

"மச்சான் அடுத்த வருஷம் நாம ரண்டு பேரும் ஒண்ணா இருப்போம்" என்றான் . பத்மகாந்தன். அவன் மட்டுமா ஆறுமுகம், கோடீஸ்வரன் இப்படிப்பலர் கூறினர். இரண்டாம் வருடம் ஜேம்ஸ் பீரிஸ் மண்டபத்தில் கோடீஸ், ஆறு, நான் மூவரும் ஒரேயறையில் தங்கினோம். அது இனிமையான காலம் சுகானுபவம். பூநகரியில் இருந்து வந்திருந்தான் ஆறுமுகம் வளமான காடுகள் இருந்த பிரதேசம் அது. அவனது அலுமாரிக்குள் வறுத்து ஏதோ செய்த இறைச்சிகள், பழங்கள், யாழ் மண்ணுக்கே யுரிய அந்த "மா" இப்படி பல இருக்கும். வேண்டிய நேரம் எடுத்துச் சாப்பிடுமாறு ஆறுமுகம் தாராளமாகக் கூறுவான். எனக்கு அவனது வேண்டுகோள் மிகவும் பிடித் திருந்தது. அதுமட்டுமல்ல நிறைய பணமும் அவனது பெட்டியில் இருக்கும். வெளியில் செல்லும் வேளையில் எல்லாம் "பணம் தேவை எனில் எடுத்துக்கோ" என்பான். இப்படி எத்தனை மகிழ்ச்சியான தருணங்கள். யாழில்



இருந்து பெட்டி பெட்டியாக வரும் பலகாரங் களுக்குகுறைவில்லை. ஒரு முறை சாவ கச்சேரி சுப்பிரமணியம் அக்பர் மேல்மாடியில் இருந்தவேளை என்னைத் தனியாக அன்புடன் அழைத்துச் சென்றான்.

"ஓ எவ்வளவு பலகாரங்கள்?" அன்புடன் என்னை உபசரித்தார்கள். இப்படி எத்தனை எத்தனை சம்பவங்கள். என்னை அன்புடனும் நேசத்துடனும் அவர்கள் பார்த்துக் கொண்டார்கள். ஒரு முறை யாழ்ப்பாண கறுத்தக் கொழும்பான் மாம்பழம் பெரிய பெட்டியில் வந்து இறங்கியது. உடனே ஆறுமுகம், கோடீஸ் இருவரும் என்னை அழைத்துச் சென்று சாப்பிடச் சொன்னார்கள். கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. அனைவரும் அமைதியாக உள்ளே பதுங்கினோம். இப்படி சீனியர், ஜீனியர் நண்பர்கள் எனது "Batch" மட்டுமா... இல்லையே இன்னும் எத்தனையோ பேர்... எல்லாம் என்ன ஆனார்கள்?

காலம் கடகடவென்றே ஓடியது.

உறவுகள் பிரிவுகள் வாழ்வின் நியதி போல நடந்தேறின. பாடநெறிகள் முடிவுற தத்தம் வீடு நோக்கிச் செல்லுங் காலமும் அரும்பியது.

நீண்ட பல கனவுகளை சுமந்து வளாகம் வந்த கூட்டத்தின் அந்தக் கனவுகள் நிறைவேறினவா...?

பல்கலைக்கழகம் வெறும் கனவுத் தொழிற்சாலைகளா...? அடுத்து வீடு சென்று என்ன செய்வது? அதுவும் கலைப்பரிவில் பட்டம் பயின்றவர்கள் நிலை என்ன...? என்ற வினாக்களோடு பலர் புறப்பட்டனர்.

பெட்டி படுக்கைகளோடு பாரிய கூட்டம் "சரசவிய" புகையிரதநிலையத்திலும், கண்டி நோக்கிச் செல்லும் பஸ் வண்டிகளின் தரிப்பிடங்களிலும் நின்றது. "சல்" அடிக்கும் புரட்சி பேசும் சசி, விஸ்வநாதராஜா, கருணாகரன் எல்லோரும் கிராமம் நோக்கி புறப்பட்டனர்.

பதுளை அத்தநாயக்க, கேரத் ஜயதிலக, ஜின்னா எனும் ஜினதாஸ, சீலா, நிர்மலா, காலிஸ்ரீபால இப்படி எத்தனை சிங்கள நண்பர்கள். எல்லோரும் பிரிந்து சென்றனர். காலமுட்கள் நகர எத்தனை கோர நிகழ்வுகள்.

அடுத்தடுத்து இலங்கையில் நிகழ்ந்து இன மோதல்கள் வன்செயல்கள் தொடர்ந்து எத்தனை கோர நிகழ்வுகள்? வார்த்தை களுக்குள் கற்பனைக்கள் அடங்காத சம்பவங்கள் எத்தனை. கொடிய யுத்த அரக்கன் இருபகுதியிலம் எனது நண்பர்களை ஈர்த்து எடுத்துக் கொண்டான் .அவனது வலிய கரங்களிலிருந்து தப்பியோர் சிலரே. யுத்த அரக்கன் அவனது கூரிய கரங்களால் மக்களைக் கீறி இரத்த வாடையை முகர்ந்து மகிழ்ந்தான்.

யுத்தத்தை யார் செய்தாலும் யுத்தந்தானே..? யுத்தத்திற்கு மனிதாபிமானம் உண்டா..? பரிவு, கருணை, அன்பு உண்டா..? யுத்த ராட்சதனின் அகன்ற வாயிலிருந்து புறப்பட்ட கொல்லும் கொடூர நெருப்புக்கள்

வேட்டுக்களாக விரைவு கொண்டு மக்களை கொன்று அழித்தன.

விசு,சசி கிருஸ்ணமூர்த்தி இப்படிப் பலர் அதில் அள்ளுண்டு போயினர். எல்லாம் எனது யாழ் நண்பர்கள். பனைவளத் திணைக் களத்தில் பணியாற்றிய சசி யாழ் சென்று மீண்டும் யாழிலிருந்து விமானம் ஏறியவர் கொழும்பு வந்து சேரவில்லை. பத்திரிகை களை புரட்டிய போது அவரது பெயரும் இருந்தது.

விசு போராட்ட காலத்தில் மரணமானார். ஆசி ஆறுமுகம் கனடா சென்றுவிட்டார். கோடீஸ்வரன், வெள்ளை சரஸ்வதி, எங்கரசு இப்படி பலர் புலம் பெயர்ந்தனர்.

களுதாவளை சுந்தரலிங்கம் இறந்து போனார். ஆனால் இது இயற்கை மரணம்.

திருகோணமலை சரவணபவான் ஜேர்மனி சென்றார். பனுவல் பல இயற்றிட ஜேர்மனி மொழி அங்கு அவருக்கு உதவியது. ஜேர்மனி கற்று தேர்ச்சி பெற்றார் என்றாலும் வடகிழக்கின் வாழ்வியல் வற்றியது. அந்த முப்பது ஆண்டுகள் இரத்தக்கறை படிந்த வரலாறாக வரலாற்று ஏடுகளை நனைத்தது. புதிய உறவுகள், கலாசாரங்கள் புதிய வாரிசுகளின் விளைவாய் விளைந்தன.

பூத்து மலர்ந்த மலர்கள் புதுமையாகத் தான் இருந்தன. அவைகள் புதிய மணம் வீசின. நோர்வே சென்ற சரஸ்வதி “லப்டொப்பிலும்” செல்லிலும் “நொஷ்க்” கதைத்தாள்.

சரஸ்வதியின் தயார் படுத்த படுக்கையாக கிடந்த போதிலும் “அவள் வரவில்லை.” பத்து லட்சம் விமான டிக்கெட் என வர மறுத்திட்டாள். இதே போன்றே கார்த்திகா, விதுஷா போன்றோரும் வரவே இல்லை. எப்படியாகினும் பழைய வாழ்வு அவர்களை விட்டுவிடவில்லை.

உலகெங்கும் பிரிந்த உறவுகள் புதிய தொழில்நுட்பத்தில் மூழ்கினர். நேரில் வந்து கதைப்பதைத் தவிர்த்தனர். பிறந்த தேசத்து மண்ணும், புகுந்த வீட்டு மண்ணும் கலந்து புலம்பெயர் கூட்டத்தை மசாலாவாக்கியது எனலாம். பிறந்த மண் பாசத்தையும் புகுந்த மண் பணத்தையும் காட்டியது. அந்தப்பள்ளி நினைவுகள் பல்கலைக்கழக சம்பவங்கள் இந்த ஸ்ரீலங்காவில் வேர் ஊன்றிய விளைநிலத்துடன் வாசனை மண்வாசனை இப்படிப்பல... எத்தனை ...எத்தனை டொலருக்கு அவர்கள் ஏங்கினாலும் ஆத் மார்த்த ரீதியில் எங்கோ ஒரு மூலையில் அந்த வேர் இருக்கத்தான் செய்தது.

முப்பது வருடங்கள்... இந்தக்காலம் ஏழாலை சுந்தரலிங்கத்தாரையும், சாவகச்சேரி ஆறுமுகத்தாரையும் புதிய அலைகளில் சிக்கவைத்தது.

கற்கண்டு பாலும், பனங்கிழங்கும் பச்சடியும் அரிசியும், ஒடியலும் கிழங்கும் பனங்கள்ளும், வன்னி வாழைப்பழமும் கீரிமீனும், நண்டும் கனவாகின.

புதிய வாரிசுகள் ஒஸ்லோவில் உன்னத இறைச்சியுடன் உண்டனர் “பிஸ்ஸா”.

ஆறுமுகத்தார் யாழ் மண்ணின் பனம் பணியாரம் பற்றிப் பேச அவரது பேத்தியோ “பிஸ்ஸா” பற்றி நொஷ்கில் பீத்தினாள். ஆறுமுகத்தாரை நொஸ்க்கில் கடிந்து கொண்டாள். அவள் என்ன சென்னாள் என்பது புரியா விட்டாலும் நிச்சயம் அவள் திட்டுகின்றாள் என்பது மட்டும் தெளிவாக அவருக்குப் புரிந்தது.


அவுஸ்திரேலியாவில் குடியேறிய அமிர்தலிங்கத்தின் மகன் மிக நன்றாகவே ஆங்கிலம் பேசினான். அமிர்தலிங்கம் அங்கு குடியேறிய போது அவருக்கு இந்த மொழிப் பிரச்சினை இருக்கவே செய்தது. இப்படியே பலர் அவுஸ்திரேலியா ஆங்கிலத்தை கற்றுக்கொண்டார்கள். அவர்களது சந்ததி தமிழை மறந்தனர். விருப்பத்திற்குரிய ஒரு மொழியாக தமிழைப் பயின்று வருகின்றனர். காலம்தான் எப்படி ஓடுகின்றது.

மலர்கள் மலர்கின்றன மடிகின்றன. பின்னர் மீண்டும் புதிய மொட்டுக்கள் புதிய மலர்கள்... இப்படியே தான் மனித வாழ்வின் சுழற்சியும் தொடர்ந்த வண்ணமுள்ளது.

“என்ர மகன் தமிழ் பேச மாட்டான்”

என்று அமரித்தலிங்கம் கூறும் அதே வேளை தமிழை அவருக்கு கற்பிக்க அவரைப் போன்றோர் செய்யும் பிரயத்தனங்களையும் கூறுவார். தமிழும் தமிழிலக்கியத்தையும் சர்வதேசததிற்கு எடுத்துச் சென்றோர் ஆங்கிலம் நொஸ்க், ஹீப்ரூ, ஜேர்மன் மொழி போன்றவைகள் ஊடாக தமிழை வளர்ப்பார்களா...?

புழக்கத்தில் இல்லாத மொழிகள் வாழ்ந்ததாக சரிதம் உள்ளதா...? காலம் ஓடிக் கொண்டிருக்கின்றது.



மலரன்பன்

**தொண்ணூறு சதவீதமான மலையக ஆசிரியர்களும், விரிவுரையாளர்களும் வாசிப்பதேயில்லை... நாளைய இளம் சமுதாயத்தை நினைக்கையில் பயமாக இருக்கிறது...**

**நேர்கண்டவர் – சுதர்மமகாராஜன்**

**இன்றைய ஈழத்து மலையக சிறுகதை எழுத்தாளர்களில் முக்கியமானவர். பல முக்கிய மலையக எழுத்தாளர்களை உருவாக்கிய மாத்தளை மண்ணின் மைந்தர். சிறுகதை, குறுநாவல், மெல்லிசைப்பாடல், மொழிபெயர்ப்பு என இவரது இலக்கிய வெளி நீண்ட பயணத்தை கொண்டது. ஒரு காலத்தில் இலக்கியத்தாலும், இலக்கியவாதிகளாலும் களை கட்டியிருந்த மாத்தளையூரின் இன்றைய சோபையிழந்த வெறுமை வெளியில் தனித்து அமர்ந்தபடி தன் கடந்தகால அனுபவங்களை அசை போடுகிறார்.**

**1) உண்மையில் மாத்தளை இலக்கிய ஊருக்கு என்னவாயிற்று?**

வேதனையாகத்தான் இருக்கிறது பல இலக்கியவாதிகளை உருவாக்கிய ஊர். என் சமகாலத்து படைப்பாளிகளில் சிலர் புலம் பெயர்ந்து விட்டார்கள். இருக்கும் சிலரில் பல பேர் ஓய்ந்து விட்டார்கள். என்போன்ற ஓரிருவர் மட்டும் ஏதோ எழுதிக் கொண்டிருக்கின்றோம். அதுவும் எப்பவாவது. நமக்கு பின் யாரும் இல்லாத நிலை.

இன்றும் மாத்தளையில் தமிழ், முஸ்லிம் மக்கள் புத்தக வெளியீட்டு விழாக்களுக்கு வருகிறார்கள். பத்தாயிரம், ஐயாயிரம் பணம் கொடுத்து முதல் பிரதிகளை வாங்குகிறார்கள். ஆனால் தன் பணபலத்தை காட்டுவதிலுள்ள ஆர்வம் வாசிப்பில் இருப்பதில்லை. தன்னையும், தம் பிள்ளைகளையும் தொலைக்காட்சி, எப்.எம் ஊடகங்களுக்கு காவு கொடுத்து காலத்தை தின்று கொண்டிருக் கிறார்கள்.

வாசிப்பு இல்லாத போது எப்படி புதிய படைப்பாளிகள் உருவாகுவார்கள்.

**2) உங்களுடைய ஆரம்பகால மாத்தளையூர் பற்றிச் சொல்லுங்கள்?**

நான் பிறந்தது மாத்தளை வடக்கில் இருந்த தாமரை வள்ளித் தோட்டத்தில். இத்தோட்டத்திற்கருகாமையில் தான் நாலாந்தா கணவாய் இருக்கிறது. அக்காலத்தில் 1820களில் இக்கணவாயினூடாகத் தான் எமது முன்னோர்கள் தலை மன்னாரிலிருந்து மலையகத்துக்கு பயணித்து இருக்கிறார்கள்.

இலங்கையிலேயே முதலாவது 2000 ஏக்கர் கொண்ட பெரிய தேயிலை, ரப்பர் கலந்த கருங்காலி தோட்டம், ராஜா தோட்டங்கள் இங்கு தான் இருந்தன.

அக்காலத்தில் எங்கள் தாத்தா ஒரு கங்காணி. பாட்டி தோட்டத்தில் வேலை செய்த தொழிலாளி. தாத்தா அப்பாவை நன்றாக படிக்க வைத்திருக்கிறார். அக்காலத்து 5ம் ஆண்டுப் படிப்பு.

அதனால் வெள்ளைக்கார தொர அப்பாவைக் கூப்பிட்டு தோட்டத்துக் கணக்குபுள்ள வேலை கொடுக்க, எனது பிறப்பு, வளர்ப்பெல்லாம் லயத்துக்கு பக்கத்திலுள்ள பங்களாவில் நடந்தது.

ஆனால் என் சிறுவயது நண்பர்களெல்லாம் லயத்தி லுள்ளவர்களாக இருந்தபடியால். என் அதிகமான பொழுதுகள் லயங்களிலேயே கழிந்தன.

3) ஆரம்ப கல்வியை தோட்டத்து பாடசாலையில் தான் கற்றீர்களா?

ஆமாம், அப்போது தோட்டத்து பாட சாலைகளில் அதிகமாக யாழ்ப்பாண ஆசிரி யர்கள் தான் கற்பித்தார்கள். அக்காலத்தில் தோட்டத்து பாடசாலைகளில் கற்பிப்பது, கல்வியியற் கல்லூரிகளுக்கு செல்வதற்கான தகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதால், பலர் அதனை பயன்படுத்திக் கொண்டார்கள்.

யாழ்ப்பாண கதிரமலை சுந்தரமூர்த்தி வாத்தியார் என் ஆரம்ப கல்வியை பனை யோலையில் ஆரம்பித்து வைத்தது ஞாபகம் வருகிறது. அதே போன்று S.A.பூபால ராயர் என்ற இந்திய மாஸ்ரர் அவர் ஒரு நாடக அசிரியர், அருமையான ஓவியரும் கூட. ஆங்கில ஆசிரியராக இருந்தார்.

மூன்றாம் வகுப்பிலிருந்து டபுல் ப்ரோமஷன் கிடைத்து, 5ம் ஆண்டிற்கு சென்ற பின் தோட்டத்து பாடசாலைக்கு விடை கொடுத்து, மாத்தளை நகரிலுள்ள அமெரிக்க மிஷன் தமிழ் சிங்கள கலவன் பாடசாலையான Christ collegeக்கு செல்கிறேன். அங்கு பல மலையாள, யாழ்ப்பாண ஆசிரியர்களின் கற்பித்தல் முறை என்னை சிறுக சிறுக கலையின் பால் உள்ளீர்க்கிறது.

முக்கியமாக 8ம் ஆண்டில் பண்டிதர் முருகேசு அவர்கள் நளவெண்பாவைக் கற்பித்த விதம், என்னை முழுமையாக இலக்கியம் மீது மோகம் கொள்ள வைக்கிறது. கூடவே பாடும் என் திறமை கண்டு ராமலிங்கம் மாஸ்டரும், பிற ஆசிரியர்கள் கொடுத்த ஊக்குவிப்பும்.

மாத்தளை ஹொக்கி விளையாட்டுக்கு பேர்போன ஊர். அக்காலத்தில் ஹொக்கியும், தமிழுமே என்னை வளர்த்தன.

S.S.C பரீட்சையின் பின் கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் கால் உடைந்து கிட்டத் தட்ட இரண்டு வருடங்கள் வீட்டில், படுத்த படுக்கையாக இருக்கையில் வாசிப்பில் காலத்தை கழிக்கிறேன். வேறு வழியுமில்லை. நண்பர்கள், அதிகமான நல்ல புத்தகங்களை கொண்டு வந்து கொடுத்தார்கள். அந்த தொடர்ச்சியான வாசிப்பு, சிறுக சிறுக என்னை செதுக்கத் தொடங்கியது.

4) முதலாவது கதை...

64/65களில் என நினைக்கிறேன். தோட்டக்காரி திரைப்படக்குழுவினர் வெளியிட்ட "கலைக்குரல்" சஞ்சிகையில் "ஏமாற சென்னது நானோ" என்ற என் முதல் கதை பிரசுரமாகிறது. அதன் பின் எம்.டி.குணசேன வெளியிட்ட "ராதப" சஞ்சிகையில் "என்னைப் போல் ஒருவன்", "நெஞ்சத்தில் ஆடுகிறாள்" என்பன பிரசுரமாயின.

அதே போன்று வீரகேசரி வெளியிட்ட "ஜோதி" பத்திரிகையில் "காதலிக்க ஒரு கன்னி" என்றொரு கதை வந்தது.

இவையெல்லாம் குமுதம் பாணி கதைகள் பின்னால் அவை என்னை முகம் சுளிக்க வைத்து, கசக்கி வீசப்பட்ட கதைகள்.

அதற்கு பின் செய்திப் பத்திரிகை நடத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டி யில் என்னுடைய "சடங்கு" என்ற சிறுகதை முதல் பரிசு கிடைத்து பலரது பாராட்டையும் பெற்றது. அதே காலத்தில் தமிழமுது சஞ்சிகை யில் "கறிவேப்பிலைகள்" கதை சிறப்புச் சிறு கதையாக வந்து பாராட்டுக்களைப் பெற்றது.

5) அப்படி பாராட்டி ஊக்குவித்தவர்களில் குறிப்பிட்டு கூறக் கூடியவர்கள் யார்?

அப்போது நான் தெளிவத்தை ஜோசப்பின் தீவிர வாசகராக இருந்தேன். அவரை சந்திக்கும் நோக்கில், ஹட்டனில் நடந்த வீரகேசரி நடத்திய சிறுகதை போட்டியின் பரிசளிப்பு விழாவுக்கு செல்கிறேன்.

தெளிவத்தையை சந்தித்த உற்சாகத் தில் அவருடன் உரையாடிக் கொண்டிருக்கை யில் பக்கத்தில் ஒருவர் அமைதியாக என்னை பார்த்தபடியே இருக்கிறார். அவர் தான் N.S.M.ராமையா, தெளிவத்தை அவரை அறி முகப்படுத்துகிறார். அன்றிலிருந்து N.S.M. ராமையா கொடுத்த ஊக்குவிப்பும் உற்சாகமும் என் எழுத்தின் திசையை மாற்றியது.

சாதாரண கற்பனைக் கதைகளை எழுதிக் கொண்டிருந்த என்னை மலையக மண்ணின் யதார்த்தத்தை கதைகளில் கொண்டு வரும்படி N.S.M.ராமையா தூண் டினார். அவர் கொடுத்த உற்சாகத்தில் எழுதிய "பார்வதி" எனும் கதை தினபதியில் தினம் ஒரு சிறுகதை திட்டத்தில் பிரசுரமாகி என்னை பெரிய அளவில் அடையாளப் படுத்தியது.

அதே காலத்தில் "கோடிச்சேலை" என்னும் கதைக்கு வீரகேசரி சிறுகதை போட்டியில் இரண்டாவது பரிசு கிடைத்தது.

N.S.M.ராமையா தவிர தெளிவத்தை ஜோசப், பன்னீர் செல்வம், வண்ணச்சிறகு சிவானந்தன், அந்தனிஜீவா, எஸ்.பொ,

தெணியான் போன்றவர்கள் கடிதங்கள் மூலமாக உற்சாகமூட்டுவார்கள்.

முக்கியமாக தெணியான், மற்றவர்கள் பாராட்டுகளை மட்டுமே தெரிவிக்கையில் அவர் விமர்சன ரீதியாக கருத்துக்களை தெரிவிப்பார்.

**6) அக்காலத்தில் சிறுகதைகள் தவிர வேறு துறைகளில் ஈடுபடவில்லையா?**

இடையிலே சி.க.முத்து, சிவானந்தன், இளங்கீரன் மற்றும் சில சிங்கள தோழர்களுட னான நெருங்கிய தொடர்பு என்னை மார்க்சிய சிந்தனைகள் பால் ஈர்ப்பு கொள்ள வைத்தது.

திக்கொலவ் ஒஸ்திரவெஸ்கியின் "வீரம் விளைந்து" குறுநாவல் என்னை மிகவும் பாதித்த படைப்புகளில் முன் நிற்கிறது. அதன் பின் தொடர்ச்சியாக என் படைப்புகளில் மார்க்சிய சிந்தனைகள் வெளிப் பட்டாலும், அதன் அழகியலை மட்டுமே பயன் படுத்தினேனே ஒழிய பிரசாரம் செய்ய முற்பட்ட தில்லை.

அத்தருணத்தில் இரா.சிவலிங்கத்தின் மலையக இளைஞர் முன்னணி நடத்திய குறுநாவல் போட்டிக்கு "சில தனிமரங்களும் பெரு நெருப்பும்" எனும் குறுநாவலை எழுதுகின்றேன். முதல் பரிசு கிடைத்தது.

அக்குறுநாவலுக்கான விமர்சன கூட்டத்தை மாத்தளையில், மாத்தளை சோமு ஏற்பாடு செய்திருந்தார். அக்கூட்டத்தில் பெ.முத்துலிங்கம், அ.யேசுராசா ஆகியோர் பங்குபற்றி காத்திரமாக அக்குறுநாவல் பற்றி கருத்துரையாற்றினார்கள்.

**7) அக்குறுநாவல் நூலாக்கப்பட்டதா?**

இல்லை. துரதிஷ்டவசமாக அக்குறு நாவலை புத்தகமாக்க சந்தர்ப்பம் வாய்க்க வில்லை. அதன் மூலப்பிரதி கூட கைசவமில்லை. அது 83ல் அக்னிக்கு புஸ்பமாகி விட்டது.

பின்னாளில் செய்தி இதழுக்கு "தொடு வானம் நோக்கி", "உள்ளத்தில் ஓராயிரம்" என இரண்டு குறுநாவல்கள் எழுதினேன். இவையும் புத்தகமாக வராதது துரதிஷ்டமே. பத்மநாப ஐயர் கூட என் சிறுகதை தொகுப்பொன்றை போட முயற்சி செய்தார். நாட்டின் யுத்த சூழ்நிலையால் அது கைவிடப் பட்டது.

**8) பத்மநாப ஐயர் மாத்தளையில் வாழ்ந்த காலத்தில் உங்களிருவருக்கும் உறவு எப்படியிருந்தது?**

பத்மநாபஜயர், திருச்செந்தூரன் இருவரும் மாத்தளையில் வாழ்ந்த காலம் எனக்கு அது ஒரு பொற்காலம். பத்மநாப ஐயர் மாத்தளையில் தொழில் புரிந்த காலத்தில் என்னுடன் நெருங்கிப் பழகினார். அவரூடாகத் தான் பல இந்திய சிறுசஞ்சிகைகளை வாசிக்கக் கிடைத்தது. தவிர சிறந்த உலகத் திரைப்படங் களை புரொஜக்டரில் போட்டுக் காண்பிப்பார்.

அவர் வீட்டில் வைத்துத்தான் இந்திய எழுத்தாளர் அசோக மித்திரனைச் சந்தித்து உரையாடினேன். பத்மநாப ஐயர் சிறந்த மனிதர். அவருடனான உறவு என் படைப்புத் திறனை கூர்மைப்படுத்தியது.

**9) முதலாவது தொகுப்பு எப்போது வெளிவந்தது?**

எனது தொகுப்பு வருவதற்கு முன், மாத்தளை சோமு தொகுத்த "தோட்டக் காட்டினிலே" மூன்று பேருடைய(மா.சோமு, மலரன்பன், பெ.வடிவேலன்) சிறுகதைகளை கொண்ட தொகுப்பு பேராசிரியர் கைலாசபதி யின் முன்னுரையுடன் வெளிவந்தது. தற்போது மாகாணசபை உறுப்பினராக இருக்கும் "சிவஞானம் அவர்கள் 1989 இல் எனது முதல் தொகுப்பான "கோடிச்சேலையை" கொண்டு வந்தார். அது சாகித்திய மண்டல விருதினை பெற்றது. எனக்கு இன்னும் ஞாபகமிருக்கிறது. முதல் தொகுப்பு வெளியீட்டு விழாவுக்காக ஒரு மலர் ஒன்றை தயாரித்தோம். மாத்தளை சோமு கடை கடையாக ஏறி விற்று உதவினார்.

இரண்டாவது தொகுப்பு "பிள்ளையார் சுழி". கொடகே வெளியீடாக வந்தது. இடையே மத்தியமாகாண சாகித்திய விழாவுக்கான 15 மலையக எழுத்தாளர்களின் சிறுகதைகளை கொண்ட "மலை இலக்கியம்" தொகுப்பை தொகுத்திருக்கிறேன்.

**10) உங்களுடைய சிறுகதைகள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு தொகுப்பாக வந்திருக்கிறன, அதைப் பற்றி...**


1989 இல் என்னுடைய "தார்மீகம்" எனும் கதை இப்னு அஸூமத்தால் மொழி பெயர்க்கப்பட்டு, விவரண சஞ்சிகையில் பிரசுர மானது. அதுதான் சிங்களவாசகரிடையேயும், இலக்கியவாதிகளிடமும் என்னை அறிமுகப் படுத்திய முதல் கதை.

1990 இல் தமிழ் சிறுகதைகளின் சிங்கள மொழிபெயர்ப்பு தொகுப்பான "காளி முத்துக்கே புரவசிபாவய"(காளி முத்துவின் பிரஜாவுரிமை) யில் எனது உறவுகள் முதல் கதையாக பிரசுரமாகியிருந்தது.

இந்த உறவுகள் சிறுகதை பற்றி ஒரு கதை இருக்கிறது. அந்நாட்களில் நான்

கொழும்புக்கு அடிக்கடி செல்வதுண்டு. அப்போதெல்லாம் எழுத்தாளர் சட்டநாதனை சந்தித்து உரையாடும் வாய்ப்புக் கிட்டும். அவர் கொடுத்த உற்சாகத்தில் தான் "அஞ்சலி" இதழுக்கு உறவுகள் கதையை எழுதினேன். அக்கதை பின்னரில் மாத்தளை கார்த்திகேசு வால் "காலங்கள் அழிவதில்லை" என்ற பெயரில் நாடகமாக்கி மேடையேற்றப்பட்டது. அந்நாடகம் அவருக்கு மிகுந்த புகழை ஈட்டிக் கொடுத்தது.

சிங்களத்தில் வெளிவந்த எனது கதைகள் சிங்கள இலக்கியவாதிகளிடையே வரவேற்பைப் பெற்றன. பியதாச வெலிகன்னே, கபிலகுமார காலிங்க, மஹானெவ, தொலைக் காட்சி, மேடைநாடக இயக்குநர் கமல் பி. அலஹாகோன் ஆகியோர் நண்பர்களாயினர். பின், எனது பிள்ளையார் சுழி தொகுப்பை இருவர் மொழி பெயர்த்தார்கள். ஒருவர் டி.எம்.ரணவீர, மற்றையவர் உபாலி லீலாரத்ன. ஆனால் உபாலி லீலாரத்னவின் மொழிபெயர்ப்பே புத்தகமாக வந்தது. தற்போது டி.எம்.ரணவீர என் கோடிச் சேலை"யை மொழிபெயர்த்துக் கொண்டிருக் கிறார். அதில் சில கதைகள் லக்பிம சிங்கள பத்திரிகையில் அண்மையில் பிரசுரமானது. மாத்தளையில் வாழும் சிறந்த வாசகரும், மொழி பெயர்ப்பாளருமான பண்ணாமத்துக் கவிராயர் அவர்கள் எனது 12 சிறுகதைகளை தேர்ந் தெடுத்து ஆங்கிலத்தில், மொழிபெயர்த்து "Gensis" என்ற பெயரில் அண்மையில் புத்தகமாக வெளிவந்திருக்கிறது.




**11) நீங்களும் ஒரு மொழி பெயர்ப்பாளராக இருக்கிறீர்கள் அதுபற்றி...**

1970 களில் அந்தனிஜீவாவிடமிருந்து ஒரு கடிதம் வருகிறது. தான் "கலசம்" என்றொரு சஞ்சிகை ஆரம்பிக்க இருப்பதாகவும், அதற்கு ஒரு சிறுகதையை உடனடியாக அனுப்பி வைக்கு மாறும் எழுதியிருந்தார். அப்போது உடனடியாக அனுப்ப கைவசம் சிறுகதை ஒன்றும் இல்லாத தால், சிங்கள சிறுகதை எழுத்தாளர் ஜி.பி.சேனா நாயக்கவின் "பலி கெனிம" எனும் கதையை என் மனைவியின் பெயரில் அனுப்பி வைத்தேன். கலசம் வெளிவராத தால், அக்கதை பின்நாளில் மல்லிகையில் வெளிவந்தது. அதன் பின், தெனகம சிறிவர்த்னவின் "அமைச்சரின் முகம்" ஜீவநதியிலும், ரத்னதாச வெதகேயின் சியாத்து வின் பலாமரம் வானவில்லிலும் பிரசுரமாயின. தற்போது பியதாச வெலிகன்னகே எழுதிய "அவன் ஒரு அபூர்வ சிறுவன்" எனும் நாவலை மொழிபெயர்த்து முடித்திருக்கிறேன்.

**12) சிங்கள படைப்புக்களின் வாசகனான உங்களுக்கு இன்றைய நவீன சிங்கள இலக்கியச் சூழல் ஆரோக்கிய மாக இருக்கிறதா?**

நிச்சயமாக, மார்ட்டின் விக்ரமசிங்க, மடவல ரத்னாயக்க, பியதாச வெலிகன்னகே, எரவுல நந்திமித்ர, குணதாச அமரசேகர, கே.ஜயதிலக, குணதாச விதான, ஜயதிலக கம்மல்லவீர, சய்மன் நவத்தேகம, எரிக் இலய்யாரச்சி போன்ற சிங்களபடைப்பாளி களின் படைப்புகள் என்னை சிங்கள வாசிப்பின் பக்கம் ஈர்ப்பை ஏற்படுத்தின.

இன்றைய நிலையில், சிங்கள நவீன இலக்கியத்தை விட நாம் 20 வருடங்கள் பின் தள்ளியே இருக்கிறோம். பரந்த விசாலமான வாசிப்பு பரப்பிலிருந்து வெளிவரும் சிங்கள நவீன படைப்பாளிகளின் படைப்புகள் உச்ச வாசிப்பனுபத்தை தரும் நேர்மையான படைப்புகளாக இருக்கின்றன. இன்றைய தமிழ் படைப்பாளிகளில் ஒரு சிலரை தவிர அநேக மானோர் தயாரிப்புகளையே கொடுக்கிறார்கள்.

**13) அப்போது தமிழ் படைப்பாளிகள் யாருமே உங்களை ஆகர்ஷிக்கவில்லையா?**

மலையகத்தைப் பொறுத்தவரை தெளிவத்தை ஜோசப் என்னை மிகவும் பாதித்த படைப்பாளி. என் சமகால படைப்பாளிகளின் ஆரம்ப படைப்புகளில் தெளிவத்தையின் பாதிப்பு தவிர்க்க முடியாதது. பின்னாளில் அவரவர் பாணி மாறுபட்டாலும் தெளிவத்தை யின் தாக்கம் தவிர்க்க முடியாததாக இருந்தது.

"மழைக்காக மட்டுமே" பள்ளிக்கூடம் ஒதுங்கினேன், அப்போது கூட பள்ளியை பார்க்காது மழையையே பார்த்துக் கொண்டி ருந்து விட்டேன்" என்று கூறிய கரிசல் இலக்கிய வாதி கி.ராஜநாராயணனை புதுச்சேரி காம ராஜர் பல்கலைக்கழகம் வருகை தரு பேராசிரிய ராக பயன்படுத்தி கௌரவித்தது. ஆனால், எங்கள் மலையக உயர்கல்வி கூடங்கள் தெளி வத்தை ஜோசப், ஆய்வாளர் சாரல்நாடன்

போன்றோரை பயன்படுத்திக் கொள்ளாது, பராக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறது. கிட்டதட்ட 70%மான விரிவுரையாளர்களும் வாசிப்பதேயில்லை. நாளைய இளம் சமுதாயத்தை நினைத்துப் பார்க்கையில் பயமாக இருக்கிறது.

**14) இலங்கையின் மெல்லிசைப்பாடலாசிரியர்களில் நீங்கள் முக்கியமானவர். அது எப்படி சாத்தியமாயிற்று?**

சிறு வயதில் நான் ஒரு இனிய பாடகனாக பலராலும் பாராட்டுக்களை பெற்றவன். ஆனால் காலம் அந்த பாடகனை வாழ்க்கையோட்ட போராட்ட வெளியின், இடையிலேயே அழித்து விட்டது; ஆனால் பாடல்கள் மீதிருந்த மோகம் பின்னாளில் என்னை பாடலெழுத வைத்தது. M.S.செல்வராஜாவின் வீட்டு மாடியில் அமர்ந்த வண்ணம், அவர் மெட்டுக்கு நான் எழுதிய அந்த அனுபவம், அது வாழ்வின் ஆனந்தமான தருணங்கள். M.S.செல்வராஜா மாஸ்டர் இசையமைத்து, நான் எழுதி N.ரகுநாதன் பாடிய "மூங்கிலின் நாதமும், தென்றலின் கீதமும் உன் புகழ் பாடுதம்மா" என்ற பாடல் மிகப் பிரபல்யமடைந்தது. N.ரகுநாதன், முத்தழகு, கலாவதி, M.N.ராஜா, ஜெயதேவி, நிரோஷா விராஜினி, ராணி ஜோசப், T.S.முருகேசு, அக்னி சிவகுமார், S.சிவகுமார், நிலக்ஷி, கிருஸ்ணகுமார் என பலர் என் பாடல்களை பாடியுள்ளார்கள்.

இலங்கையில் முதன்முதலாக வெளிவந்த மெல்லிசைபாடல் தொகுப்பு என்னுடைய "மகாவலியே மகாநதியே" தொகுப் பாகும். அதற்கு கலாநிதி துரை.மனோகரன் அருமையானதொரு முன்னுரையை வழங்கி யிருந்தார். அது தவிர 2008 இல் வெளி வந்த "ஆதர மினா" என்ற சிங்கள திரைப்படத்தில் "சலங்கை நாதம்" என்று தொடங்கும் ஒரு பாடலை எழுதியிருக்கிறேன்.

**14) மலையகத்தின் இலக்கிய அமைப்புகள் எந்த வகையில் மலையக இலக்கிய வளர்ச்சிக்கு துணை நின்றன என கருதகிறீர்கள்?**

தனி மனிதனாக செயற்படுவதை விட ஒரு குழுவாக இணைந்து செயற்படுவதன் தாக்கமும், விளைவும் அதிகம். அந்த வகையில் ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை அமைப்பு ரீதியான இலக்கிய செயற்பாடுகள் ஏதோ அடுத்தகட்ட வளர்ச்சிக்கு துணை நிற்கின்றன. மாத்தளையூரின் ஆரம்பகால இலக்கிய புத்துணர்ச்சிக்கு கூட அமைப்பு ரீதியான செயற்பாடும் ஒரு காரணம். இதைப்பற்றி கூறும் போது மாத்தளையில் நடந்த ஒரு முக்கியமான ஒரு நிகழ்வு ஞாபகத்திற்கு வருகிறது.

சி.க.முத்து, வேலாயுதம் ஆகியோர் நடத்திய தமிழ் இளைஞர் மன்றத்தில் அங்கத்தினராக இருந்தேன். அப்போது அந்த மன்றம் மாத்தளையில் பாரதி நூற்றாண்டு விழா ஒன்றை ஏற்பாடு செய்தது. விழாவுக்கு தமிழகத்திலிருந்து பாரதியின் பேத்தி விஜயபாரதி, கு.அழகிரிசாமி, பெ.சுந்தரமூர்த்தி ஆகியோரும் எழுத்தாளர் எஸ்.பொவும் கலந்து கொண்டார்கள்.

அன்று நடந்த கவியரங்கிற்கு விஜய பாரதி தலைமை தாங்கினார். கவிஞர்களான இளங்கீரன், மலைதம்பி, பொன்.பூபாலன் ஆகியோர் கவிபாடி சிறப்பித்தனர். கு. அழகிரி சாமியுடனான சந்திப்பு மிகவும் அற்புதமானது. அவர் கொடுத்த அறிவுரைகள் என் படைப்பாக்கத் திறனை செம்மைப்படுத்தின.

இப்படி அமைப்பு ரீதியாக இயங்கியதால் தான் பலரை சந்தித்து அனுபங்களை பகிரக்கூடியதாக இருக்கிறது.

ஆரம்ப காலத்தில் மலையக எழுத்தாளர் மன்றம் மிக துடிப்புடன் செயற்பட்டது. வீரகேசரியுடன் இணைந்து பல சிறுகதை போட்டியை நடாத்தி இளம் படைப்பாளிகளை ஊக்குவித்தது. இன்று பிரபல்யமாகி இருக்கும் பல மலையக எழுத்தாளர்கள் அப்போட்டிகளினூடாக வந்தவர்களே. கண்டியில் நதி இலக்கிய வட்டம் சிறப்பாக இயங்கிய காலமொன்றிருந்தது. மலையக கலை இலக்கிய பேரவை, நல்ல செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. மாத்தளை இலக்கிய வட்டம் இன்று வருடத்திற்கு ஒருமுறை ஒரு பக்தி நூலை வெளியிடுவதோடு திருப்தியடைகிறது.

ஆங்காங்கே பல அமைப்புகள் இயங்கி வருவது நம்பிக்கையளிக்கிறது. அண்மையில் கூட கண்டி தமிழ் சங்கம் மூத்த படைப்பாளிகளை கௌரவித்தது. அண்மைக்காலமாக மிகநம்பிக்கை தரக்கூடிய விதத்தில் பெருவிரல் கலை இலக்கிய இயக்கம் தன் செயற்பாடுகளை செய்து வருவதை காண்கிறேன்.

**15) நீங்கள் சாகித்திய மண்டல விருது உட்பட பல விருதுகளை பெற்றவர் என்ற வகையில் விருதுகள் என்பது ஒரு படைப்பாளிக்கு முழுமையான அங்கீகாரமா?**

நிச்சயமாக இல்லை. விருதுகள் பெறாத மிகச்சிறந்த படைப்பாளிகளும், படைப்புகளும் இருக்கின்றார்கள். விருதுகள் தரம் சாய்ந்து இன்று ஒரு நம்பிக்கையற்ற நிலைமையே இருக் கிறது. மத்தியமாகாண

சாகித்ய விழாக்களின், விருதுகள் ஏதோ கடமைக்காகவே கொடுக்கப்படுகின்றன. யுத்த காலங்களில்கூட வடகிழக்கு சாகித்ய விருது களுடன் கூடவே பணப்பரிசும் கொடுத்து படைப் பாளிகளை ஊக்குவிக்கிறார்கள். ஆனால் மலையக சாகித்ய விருதுகளோ…?

ஒரு காலத்தில் விருதுகளுக்கு ஒரு தரம் இருந்தது. இன்று அந்த தரம் இழந்து போனதால் இளம் படைப்பாளிகள் அதைப்பற்றி சிந்திக்காமல் இருப்பது நல்லது.

**16) மலையகத்தின் அரசியல், இலக்கியத்தில் பன்முகத்தன்மையோடு பேசப்பட்டிருக்கிறது?**

மலையகத்தைச் சார்ந்த படைப்புகளில் பெரும்பாலான படைப்புகள் தொழிலாளி களையும் அவர்களது வாழ்க்கை நெருக்கடி களையும் பற்றித்தான் பேசுகிறது. அதற்குள் மலையகத்தின் ஸ்த்ரமற்ற சுயநல அரசியலும் கலந்திருக்கிறது. ஆனால் முழுமையாக வெளிப்படவில்லை என்றுதான் செல்வேன்.

மு.சிவலிங்கம் போன்ற சில எழுத் தாளார்கள் தன்னுடைய படைப்புகளில் தொழிற் சங்க, அரசியல் தலைவர்களின் செயற்பாடு களின் மறு பக்கத்தை மிக கடுமையாகவும், எள்ளலாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இன்றைய மலையக அரசியலின் அவலம் இலக்கியத்தில் பதிவு பண்ண வேண்டியது கட்டாயமாகிறது.

**17) இன்றைய மலையக இலக்கியம் நம்பிக்கை யளிக்கிறதா?**

நிச்சயமாக, கவிதைத் துறை மிகவும் நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது. யடியாந் தோட்டை கருணாகரன், வே.தினகரன், சு.இ.தவச்செல்வன், சண்முகம் சிவகுமார், மு.கீர்த்தியன், பபியான், லுணுகலை ஸ்ரீ, பெரியசாமி, விக்னேஷ்வரன், நேரு கருணா கரன், கிஷோக்குமார், நட்ராஜ் என ஒரு இளம் பட்டாளாமே நம்பிக்கையளிக்கும் விதத்தில் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

சிறுகதையை பொறுத்தவரை அது இன்னும் நிறைய வளர வேண்டியிருக்கிறது. ஒரு சிலர் நம்பிக்கையூட்டுபவர்களாக இருக்க றார்கள். அதில் பிரமிளா செல்வராஜா, பதுளை சேனாதிராஜா, மல்லிகைச் சந்தி திலகர், கமலதாசன், பாலரஞ்சனி சர்மா, நல்லையா சந்திரசேகர் ஆகியோர் வளரக்கூடியவர்கள்.

விமர்சனத்துறை தேங்கி நிற்கிறது. ஆனால் இத்துறையில் இருப்பவர்கள் முக்கிய மாக லெனின் மதிவானம், ஜோதிகுமார், சாந்திகுமார், பெ.முத்துலிங்கம் போன்றவர் கள் மலையகத்தையும், மலையக இலக்கி யத்தையும் நன்கு தெரிந்தவர்கள் என்பதால் அது சார்ந்து கடுமையாக இயங்கலாம்.

இன்று முன்னுரைகளை மட்டுமே வாசித்து விமர்சிக்கும் போக்கு மாபெரும் துரோகமும், வேதனைக்குரியதுமாகும். இத்துறையில் புதியவர்களை இனம் கண்டு கொள்ள முடியாதிருக்கிறது. அவர்கள் இன்னும் ஆழமாக வாசிக்க வேண்டும்.

நாவல்களை பொறுத்தவரை மூத்தவர்கள் ஒரு சிலர்தான் எழுதுகிறார்கள். புதியவர்கள் யாரும் இல்லாத ஒரு நிலையே இருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.

**17) மலையக நாவல்களில் உங்களை ஆட்காண்ட நாவலாக எதனை கருதுகிறீர்கள்?**


தூரத்துப் பச்சை முதல் அம்மாயி கல்லு வரை நாவல்களை எடுத்தக் கொண்டால், கோகிலம் சுப்பையாவின் தூரத்துப் பச்சை. புலோலியூர் சதாசிவத்தின் மூட்டத்தினுள்ளே, தி.ஞானசேகரனின் குருதிமலை, பெனடிக்பாலனின் சொந்தக் காரன், அல் அசுமத்தின் அறவடைக் கனவுகள் என்பனகுறிப்பிடத்தக்க நாவல்காளகும். அக்காலத்தில் பெனடிக்பாலனின் செந்தக் காரனை திவிர மார்க்சியவாதிகாளால் (தொழில்) சங்க இலக்கியமென பரிகசிக்கப் பட்டது. பெனடிக்பாலன் கண்டியில் வாழ்ந்த காலங்கிளல் என்னுடைய "அக்னி குஞ்சு" சிறுகதையை வாசித்து விட்டு ரொலைபேசியில் தொடர்பு கொண்டு பாராட்டினார். அதன் பின் இறதிவரை என்னோடு தொடர்பிலிருந்தார். மிக அற்புதமான மனிதர்.

**18)இறுதியாக எதிர்கால திட்டங்களென்ன?**

பியதாச வெலிகன்னகேயின் சிங்கள நாவலான "அவன் ஒரு அபூர்வ சிறுவன்" என் மொழி பெயர்ப்பில் வரவிருக்கிறது. எனது கோடிச் சேலை சிறுகதை தொகுப்பு சிங்களத் தில் வரவிருக்கிறது

தற்போது ரப்பர், தேயிலை தோட்டங் களை களமாக கொண்ட ஒரு நாவல் எழுதிக் கொண்டிருக்கிறேன். ஐந்து அத்தியாயங்கள் முடித்துவிட்டேன். இனி….

# மலையக இலக்கியத்துக்கு ஒரு புதிய வரவு




தம்முடைய எழுத்து வன்மையால் கவிதைகளையும், கட்டுரைகளையும், நெடுங்கதைகளையும் எழுதிக் குவிப்பதற்கு, தேசிய பத்திரிகையின் ஆதரவு பெற்றவர்கள் என்றும் சலிப்ப தில்லை என்பதை கவி அ.சிதம்பரநாதப்பாவலர்(1909 – 1953) நமக்கு உணர்த்தி உள்ளார்.

உதிரி கவிதைகளை எழுதி வந்த இவர் 2.10.1947ல் தினகரன் நாளிதழில் புதன் கிழமை தோறும் "ஸ்ரீமத் சம்புத்தாயணம்" என்ற குறுங்காவியத்தை எழுதி பின்னர் அதை நூலாக்கி தந்தார். புத்தரின் வாழ்க்கையை கவிதை வடிவில் தந்திருக்கும் முயற்சி இது.

மலையக எழுத்தை புதிய ஒரு வடிவில் தர எடுத்த முயற்சிகளை நவஜீவன் என்ற பத்திரிகை முன்னெடுத்த போது சிதம்பரநாத பாவலர் தன் பங்குக்கு 16-11-1952 ல் ஜானகியின் துணிவு என்ற மகுடத்தில் தொடர் நாவலை எழுதி வரலானார். இலங்கையில் வாடும் இந்தியர் கவிதை மடல் என்ற தலைப்பில் பத்திரிகைகளில் வெளிவந்த தன்னுடைய பல கவிதைகளைத் தொகுத்து 1948 இல் கொண்டு வந்தார். இவரது எழுத்துக்கள் இவ்விதம் 1947, 1948க்குப் பின்னர் நூலாக எதுவுமே வரவில்லை. அவரது வழியைப் பின்பற்றி பின்னர் வந்த மலையகமும் அதே பாதையில் செல்லத் தொடங்கியிருப்பதை மலையக எழுத்தாளர்களும் பின்பற்றியிருப்பதை, இந்தப் பிரதேசத்தில் எழுந்த இலக்கியமுடங்கலுக்கு காரணமாகக் கொள்ளலாம்.

1962 சங்கு பத்திரிகையில் வெளிவந்த நாவல்கள், 1964 இல் செய்திப் பத்திரிகையில் வெளிவந்த ராஜூவின் நாவல், மாத்தளை வடிவேலன், தெளிவத்தை ஜோசப், மாத்தளை ரோகிணி, சி.இராமச்சந்திரன் முதலானோரின் நாவல்கள், இப்படியே பத்திரிகைத் தொடர் ஆகவே போய் விட்டன. முதுபெரும் எழுத்தாளர் சி.வி.வேலுப்பிள்ளையின் எழுத்துக்களும் இந்த துர்ப்பாக்கியத்துக்கு ஆளாகியது.

இந்தப் பின்னணியில் தான் மலையகத்தில் வெளிவந்த அறுவடைக் கனவுகள் நாவல் முக்கியத்துவமுடையதாகின்றது. இது முதலில் 1984 ம் ஆண்டு தினகரன் நாளேட்டில் தொடர் கதையாக வெளிவந்தது. மலைநாட்டுத் தேயிலைத் தோட்டங்களில் 1970களில் இடம்பெற்ற சம்பவங்களைத் தொகுத்து நாவலாக்கி இருக்கிறார் இதன் ஆசிரியர். அல்அசோமட் தன் ஆரம்பத் தொழிலாக தோட்டத்து சுபர்வைசர் வேலையில் சேர்ந்தார். பொகவந்தலாவைத் தோட்டமொன்றில், வெள்ளைக்காரத்துரையின் கீழ் ஐந்தாண்டுகள் வேலை பார்த்தவர். ஆங்கில புலமையும், தமிழ்ப்புலமையும் மிகுந்த இவருக்கு தொடர்ந்து தோட்டத்தில் தொழில் செய்யும் வாய்ப்பு இல்லாது போனாலும், கிடைத்த காலத்தில் பெற்ற தன் அனுபவங்களை பெய்து நாவலை

கொண்டு சென்றிருக்கிறார்.

முதலில் நாவலை எழுதுவதற்கே சில காலம் பிடித்திருக்கிறது; பின்னர் அதைப் பத்திரிகையில் வெளியிட்டு வைத்துள்ளார். தற்போது தானே அதை நூலாக்கி நமக்கு வாசிக்கக் கொடுத்திருக்கிறார்.

நூல் மொத்தமாக நாற்பத்தொரு அத்தியாயங் களில் எழுதப்பட்டுள்ளது; முன்னூற்று நாற்பத்தெட்டு பக்கங்களில், ஒவ்வொரு பக்கத்திலும் அவரது அனுபவச் செழுமை வெளிப்பட, வெள்ளைக் காரனின் பழக்க வழக்கங்கள், தமிழைப் பேசுகிற பாங்கு, ஆங்கிலம் கற்றவர்களைத் தமிழில் பேச எதிர்பார்ப்பது என்று அழகாகவே சொல்லியிருக்கிறார்.

வைட் என்ற துரை போய் மேசன் என்ற ஆஸ்திரேலியகாரன் துரை வேலைக்கு வந்த பின்னர், தோட்ட நிர்வாகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள், கொழுந்தெடுக்கும் முறை யில் நேர்கிற புதுமுறை கொழுந்தெடுப்பு, அம்மாற்றத் துக்கு வளைந்து கொடுப்பவர் களுக்கும், அதை எதிர்த்து நிற்பவர்களும் என்று நடை முறைகளை ஒரு கதையாக சொல்லி இருக்கின்றார்.

இலங்கையில் 1960 வரை மலைநாட்டு தோட்டத் தொழிலாளிலாளரைப் பற்றி எழுத முயன்றவர்கள் நிக்ரோக்களைப் பற்றி அமெரிக்க இலக்கியத்தில் எழுதப்பட்டதற் கொப்பவே, தம் கற்பனைகளையும் கருத்தியல்களையும் பாத்திரங்களில் ஏற்றி, மண் தோயாத பாத்திரங்களை உண்டு பண்ணியிருக்கின்றனர். இது மாறத் தொடங்கியது மண் தோய வாழ்ந்த மலையக எழுத்தாளர்கள் எழுத தொடங்கிய பின்னர் தான். அதற்கு உதாரணமாக Counter Cullen யும்Arna Bontempsம் கூறுவதைப்போல மலையகத் தில் சி.வீ.வேலுப்பிள்ளையின் எழுத்துக்களை கூறலாம்.

எவ்வித தயக்கமு மின்றி அல்அசோமட் எழுத்துக்களை அறுவடைக் கனவுகளைக் கூறலாம். அமெரிக்க கறுப்பின எழுத்து களின் வெற்றியை அங்கு வெளியாகி இருக்கும் சுயசரிதை எழுத்துக்களை வைத்து கணிக்கலாம்.

இதுவும் சுயசரிதை எழுத்துதான். அதில் குறை காணவும் கூடுதலாக இது கற்பனை கலந்தது என்று ஒதுக்கவும் முடியாத அளவுக்கு மலையத்து சொல் வழக்கில் எழுதப்பட்டுள்ளது.

1970களில் இருந்த மலையகத்தை 1984 இல் பத்திரிகையில் எழுதி 2010 இல் நூலாகக் கொண்டு வந்திருக்கும் அல்அசோமட் பாராட்டுக்குரியவர். மலையக இலக்கியத்துக்கு கிடைத் திருக்கும் ஒரு புதிய ஆரோக்கியமான வரவு. •

## நீரின் மேல் எழுதுகிறான் நம் தலைவன்

டோடோ பறவைகளைப் போல்
அழிந்து கொண்டிருக்கிறது நமது இனம்

நீரின் மீது அமர்ந்து கொண்டு
எல்லோரது தலையெழுத்துக்களையும்
எழுதிக் கொண்டிருக்கிறான் நம் லைவன்
அவன் தேயிலை வடியைப் போல்
பிழிந்து கொண்டிருக்கிறான்
நமது உழைப்பின்
அந்தரங்கத்தையெல்லாம்


அவன் அறிவதில்லை
வெடித்து பிளந்துக் கிடக்கும் பாதங்களை
காப்பக் காய்த்த கரங்களை
புடைத்து முதிர்ந்து போன
பெண்களின் முகங்களை
வரண்டு! தட்டையான அவர்களின்
மார்புகளை
வேடிக்கை மேல் வேடிக்கையாக
சரிகிறது நம் வாழ்க்கை

எல்லாவற்றையும் அவதானிக்கும்
பகலாந்தையாய் போயினர் நம்
முன்னோர்கள்
பொய்களின் மேல் பொய்யாக
நிச்சயிக்கப்பட்டுக் கொண்டே போகும்
நம் வாழ்வு!
ஒரு கழுகுக் கூட்டமாய் அல்லது
ஒரு சிறுத்தைக் கூட்டமாய்
நாம் மாறாத வரை.

— சு.தவச்செல்வன்

சுதர்மமகாராஜன்

# கிழவி, குளவி, தலைவி



1. கிழவி

மாலை வெயில் மயங்கும் வேளை கபரகல தோட்டத்தின் மேமலை டிவிசனின் உச்சிக்கு வந்திருந்தாள் கதிராயி கிழவி.

மலையேறிய அசதி கால் முட்டுகள் இரண்டும் விண் விண்னென்று இழுத்துப் பிடித்தன. வலிக்கும் மூட்டுகளை கைகளால் பிசைந்தபடியே விழுந்து கிடந்த, மரக்கட்டை யில் உட்கார்ந்தாள். கால்களை விறைப்பாய் முன்நீட்டி சீலையை தொடை வரை உயர்த்திவிட்டு வலி கீழிறங்கி வடியும் படியாக கைகளால் நீவி நீவி நிலத்தில் விட்டாள்.

இடுப்பில் சொருகியிருந்த வெட்டுக்கத்தியின் புடி உருத்தவே, உருவியெடுத்து மரக்கட்டையில் கொத்தி நிறுத்தினாள்.

“என்னா அம்மாய்... காலு வலிக்குதா”

கேட்டபடியே அருகில் வந்த சரசாவை பார்த்தாள்.

“இப்பதாண்டி முடியல... முந்தியெல்லா... எத்தன காடுமல... ஏறுன காலு இது...”

பூரிப்பின் பெருமூச்சு சொத்தை பற்களிடையால் வெற்றிலை யெச்சாய் தெரித்தது. அந்த எச்சில் சாரலினூடே தன் சிறு வயதில் இந்த காட்டில் வேலை செய்யும் அப்பாத்தாவுக்கு தேத்தண்ணி கொண்டு வரும் காட்சி கானலாய் நெளிந் தாடியது.

அப்பத்தாவின் நினைவு, கண்களின் விளிம்புகளில் நீர்த்துளி எட்டிப் பார்த்தது. கனத்த நெஞ்சை தூக்கி விட்ட பெருமூச்சின் அதிர்வில் எட்டிய கண்ணீர் துளி சுருங்கிய கன்னத்தில் விழுந்து சற்று தேங்கி வலிந்திறங்கியது.

குந்தியிருந்த மரக் கட்டையை வாஞ்சையாய் தடவினாள். “எத்தனை வருஷம் பழசான மரம்...” தன் வம்சமே சரிந்து கிடப்பதை போன்று விழுந்து கிடக்கும் மரத்தின் தோற்றம் கலங்கிய கண்களில் மறைந்தாடியது.

“அம்மாயி... அழறியா...”

சரசாவுக்கு தெரியும். கொஞ்ச நாட்களாக அம்மாயின் அவஸ்தை உருவம் மாறி மங்கி வரும் தேயிலை மலைகளின் தோற்றம், அது ஏற்படுத்தும் உளைச்சல், அதனால் கிழவி படும் பாடு எல்லாம் அருகிலிருந்து பார்த்த படியே கிழவியை சரசா ஆறுதல் படுத்துவாள்.

“அம்மாயி... அழறியா...”

மீண்டும் கேட்ட படியே அருகில் சென்று பரிவாய் முதுகை தடவினாள்.

“அடியே... இந்த மரமெல்லாம்... அந்தக் காலத்துல... நம்ம பாட்டெ... பூட்டனுங்க வச்சது...”

என்ற சொல்லும்போதே, இந்த மரங்களினடியில் பாவாடையை மடியில் சுருட்டி குந்தியபடி அப்பத்தாவோடு ரொட்டி கடித்து தேத்தண்ணீர் குடித்த காட்சி மின்னி மறைந்தது.

“இன்னிக்கி... எவஎவனோ துண்டு போடுறானுங்க...”

உதடு குவித்து இருவிரல்களுக்கிடையால் பளிச்சென்று

வெற்றிலையெச்சை துப்பி, முந்தானை நுனியால் வாய் துடைத்தாள்.

இந்த வெற்றிலை போடும் பழக்கம் கூட அப்பத்தாவினால் வந்தது தான்.

அன்றிலிருந்து இன்றுவரை தன் வம்சத்தின் எதுவுமே மாறல, ஆனால் இடம் மட்டும் மாறுது, எல்லோரும் வாழ்ந்த இடம் பறிபோகப் போகுது.

பேத்தியின் கைகளைக் கெட்டியாய் பிடித்தபடி, கட்டையிலிருந்து எழும்பி நின்றாள். இங்கிருந்து பார்க்கையில் தூரத்தில் சின்ன தாய் தெரியும் தன் லயம் கூட அப்பத்தா வினால் கிடைத்தது தான்.

"அடியே கதிராய்... இந்த மலகாடுதான்... எங்க சொத்து... எங்களுக்கப்புறம் நீங்க... தாண்டி பாத்துக்கணும்..."

அன்று அப்பத்தா கூறிய வார்த்தைகள் மலைகளில் எதிரொலித்து காதுகளை அடைத்து நின்றது.

பற்றியகைகளை விடாமலேயே தன் பேத்தியை பார்த்தாள். தனக்கு பின் இனி இவர் களுக்கு சொந்தம். ஆனால் அது நடக்குமா?

நெஞ்சு பயம் தலையை கிறுகிறுத்தது. சரசாவை விட்டு மெதுவாய் கிழவி சரிந்து கிடக்கும் மரங்களை பார்த்தபடி நகர்ந்தாள்.

கூட வந்த ஏனைய பொம்பளைகள் துளிரோடு பிடுங்கி குவித்த தேயிலை செடி களை பொறுக்குவதில் மும்முரமாய் இருந் தார்கள். கிழவியை விட்டுவிட்டு சரசாவும் அவர்களுடன் இணைந்து இயங்கத் தொடங்கினாள்.

மரத்தில் கொத்திய வெட்டுக்கத்தியை பிடுங்கி, கையில் ஏந்தியவாறே மரவாதுகளை கழிக்கலாமென நடந்தாள் கிழவி.

தம் பரம்பரையின் தடங்களாய் நிற்கும் மரங்களின் மரணம் அவள் நெஞ்சை பிசைத்தது.

"மொதல்ல மரத்த வெட்டுவானுங்க..., பெறகு காணிய... பறிப்பானுங்க..."

ஊரு சொல்லும் கதைகள், கிழவிக்கு அப்பத்தா கொடுத்த நம்பிக்கைகளில் வெடிப்பு விழுவதாகப்பட்டது.

தேயிலை மலையும் சொந்தமில்ல, வாழும் லயமும் சொந்தமில்ல, இப்ப புல்லு காடும் சொந்தமில்லாம போகப் போகுது. கண்ணீரிலும் கனல் பீய்ச்சியது.

கோபத்தின் கொதி கைகளுக்குள் தாவ, கையை ஓங்கி வெட்டுக்கத்தியால் மரவாதை வெட்டத் தொடங்கினாள். அது பறிப்பவன் கையை வெட்டுவதாகவே இருந்தது.

**2. குளவி**

அந்த உயர்ந்த கருப்பந்தைல மரத்தின் உச்சியில், தடித்த இரு கிளைகளுக்கிடையில் ஒரு பெரிய குளவிக்கூடு.

சில்லென்ற மாலைக்காற்றின் உரசலில் கூட்டின் வெளிப்புறம் குளிரில் இருகி இருந்தாலும், உட்புறம் மிக உஷ்ணமாய் ஒரு கொதிப்பில் சலசலத்துக் கொண்டிருந்தது.

குளவிகளின் ராணி, கூட்டின் உச்சியில் அமர்ந்தபடி ஏனைய குளவிகளை சாந்தப் படுத்தியது. இருந்தும் சலசலப்பை நிறுத்த முடியவில்லை.

"அனைவரும்... சாந்தப்படுங்கள்... நாம் ஏதாவது... செய்வோம்..."

ராணியின் உரத்த குரல், குளவிகளின் இரைச்சலைச் சற்றுத் தணித்தது.

"மகாராணி... எப்படி பேசாமல் இருப் பது... இப்ப எத்தன... இடம் மாறியாச்சு..."

நன்கு தடித்த பலசாலியான குளவி யொன்று ராணியை கேள்வி கேட்டது.

"நமக்கு சொந்தமான மரத்தை யெல்லா... இந்த மனுஷனுங்க வெட்டி தள்ளறாங்க..."

இன்னொன்று கத்தி கூச்சலிட்டது.

"இவனுங்கல சும்மா விடக் கூடாது"

ஒன்று உயரப் பறந்து கோபத்தோடு கத்தி, இடம் மாறி அமர்ந்தது. அந்த இடம்மாறல் ஏனைய சிலதுகளையும் பின்பற்ற வைத்தது.

ராணியும் ஒரு முறை தன் இடத்திலிருந்து கீழிறங்கி சிறிய வட்டமடித்து மீண்டும் தன் இடத்தில் அமர்ந்தபடி கூறியது.

"உங்கள் கோபம்... நியாயமானது தான்... நாம் இதற்காக ஏதாவது செய்தாக வேண்டும்..."

சுற்றியும் பார்வையை உருட்டியது, சிறிய குளவிகள் பெரியவைகளின் பின்னாள் பதுங்கிய படி ராணியை உற்று நோக்கின. மிகக்குறுகிய காலத்தில் தன் இருப்பிடங் களை மூன்று முறை மாற்றியாயிற்று. நாலாவதாய் இந்த மரத்தில் கூடுகட்டிய ஒரு மாதத்திற்குள் அதற்கும் இடையுரு. பக்கத்திலிருந்த மூன்று மரங்களை வெட்டிக் சரித்தாயிற்று அடுத்ததாக இது.

ராணிக்கு எப்படி இவர்களை தேற்றுவ தென்ற புரியாது விழித்தது.

பலசாலியான குளவியொன்று ராணியின் முன் நின்றது. அதன் முன்நகர்வு கண்டு ஏனைய குளவிகள் நிசப்தமடைந்தன.

"மகாராணி... இதுக்கு ஒரே வழி... மனுஷங்கள தாக்குறது தான்..."

அதன் உறுதியான குரலை பெரும்பாலான குளவிகள் ஆமோதிப்பதாய் கூச்சலிட்டன.

ராணி, கண்கள் உருட்டி எல்லா குளவி களையும் ஒருமுறை பார்த்துவிட்டு, இளம் குளவியை பார்த்தது.

"மகாராணி... யோசிங்கா தீங்க... சரின்னு சொல்லுங்க... இதவிட்டா வேற வழியில்ல..."

ராணி யோசித்தது. முன் பெல்லாம் மனிதர்களின் இடை யூறு வந்தால் அமைதியாக இடம் பெயர்வது தான் வழக்கம். தொடர்ந்து அடிக்கடி இடையூறு வந்தால் என்ன செய்வது. இப்போ தெல்லாம் இளசுகள் துணிந்து எதிர்க்க தயாராகி விட்டார்கள் அவர்களிடமே விட்டு விடுவோம்.


ராணி கண்களை உருட்டி உற்சாகமாய் கைகளை உயர்த்தி "தாக்குவோம்" என்றது.

அனைத்து குளவிகளும் ஒருமித்த குரலில் "தாக்குவோம்" என கத்தியபடி உற்சாகத்துடன் கூட்டை விட்டு வெளியே வந்து வட்டமடித்து, மீண்டும் கூட்டினுள் நுழைந்து ராணி முன் அமர்ந்தன.

அப்போது அந்த சப்தம் கேட்டது. மரத்தினடியில் கத்தியால் ஓங்கிவெட்டும் சத்தம்.

அந்த சத்தத்தால் முதலில் குளவிகள் கிலி கொண்டு, பபின் மூர்க்கமாகி ராணியோடு கூட்டை விட்டு வெளியில் வந்தன. கூட்டாய் வட்டமடித்து கண்களை உருட்டி உருட்டி கீழே பார்த்தன.

அங்கே வெட்டி சரிந்த மரத்தின் கிளையை மூர்க்கமாய் ஓங்கி வெட்டும் ஒரு கிழவி.



**3.தலைவி**

இன்னும் பத்து நாட்கள். அதன் பின் சபை கலைகிறது. அத்தோடு தன் தலைமைத்துவ பதவியும் பறந்து விடும். நான்கு வருடங்களாக அனுபவித்த போக வாழ்க்கை, தலைவி என்ற கிரீடம், அனைத்தும் முடியப் போகிறது. தலையை சுற்றிய கண்ணுக்குப் புலப்படா ஒளிவட்டம் மறையப் போகிறது.

தன் அமைச்சின் மூன்றாம் மாடியில் அமைந்திருக்கும் பிரத்தியேக அறையின் யன்னலோரம் நின்றபடி பாதையை பார்த்தவாறே தன் தலைமைப் பதவியின் இறுதி நாட்களை எண்ணியபடி ஒரு வித கிலியுடன் விழித்துக் கொண்டிருந்தார் திருமதி.தவராஜா.

இனி இப்படியானதொரு வாழ்க்கை கிடைக்குமா? வீடு, வாகனம், மூன்று நேரச் சாப்பாடு, உடுக்கிறதுணி, மாலை, மரியாதை எல்லாமே மக்கள் பணத்தில் அனுபவிக்கும் வாழ்க்கை இனி எப்போதும் கிடைக்காது.

ஒரு தலைவியாய் அப்பதவி யின் மூலம் நான் என்ன செய்தேன்? என்ற கேள்வி சுழலுகையில் திருமதி.தவ ராஜாவுக்கு தலை சுற்றியது.

எவ்வளவோ செய்திருக் கலாம். ஆனால், நினைத்துப் பார்க்கையில் ஒன்றுமே செய்ய வில்லை தான். ஒன்றுமே செய்யக் கூடாது என்பதற் காகத்தானே தலைவர் தம்பி இப் பதவியை தனக்குக் கொடுத்தார் என்று நினைக்கையில் வெட்கம் குமட்டியது.

சங்கத்திற்காக தன் வாழ் நாள் முழுவதும் மாடாய் உழைத்து உயிர் விட்ட தன் அப்பாவுக்காக, அவருக்கு காட்டும் நன்றிக் கடனுக்காக தலைவர் தம்பி தலைமை பதவியை கொடுத் தாரா? அல்லது பொம்பள, இவள போட்டா எங்கள மீறி ஒன்றும் செய்யமாட்டா என்று கொடுத்தாரா?

எங்கிருந்தோ கோபம் சற்று எட்டிப் பார்த்தது. யன்னல் கம்பியைப் பற்றிய படி பாதையில் செல்லும் வாகனங்களை எண்ணினார். எண்ணிக்கை பிழைத்தது.

"மேடம்"

பின்னாலிருந்து கோடி னேட்டரின் குரல் உசுப்பியது. வியர்வையை முந்தானை நுனியால் ஒற்றியபடி திரும்பினார்.

"மேடம்... ஒன்பது மணிக்கு... பன்விலயில்... ஸ்கூல் ப்ரோக்றாம்,.. இப்பவே பத்து மணியாச்சு..."

ஏற்கனவே ஒப்புக்கொண்ட நிகழ்ச்சி. ஒன்பது மணிக்கே போயிருக்க வேண்டியது. திடீரென்று தலைவர் தம்பி வருவதாக கூறியிருக்கிறார். நிற்காவிட்டால் வயதுக்கு கூட மரியாதை கிடைக்காது.

பாவம் பாடசாலை பிள்ளைகள் பல தடவைகள் இப்படி பாடசாலை நிகழ்ச்சிகளில் ரெண்டு மூன்று மணித்தியாலங்கள் நேரம்

பிந்தி சென்று பிள்ளைகளை வெயிலில் காயவைத்த சம்பவங்கள் அநேகம்.

சில நிகழ்ச்சிகள் தலைவர் தம்பியின் அனுமதியில்லாமல் ஒப்புக்கொண்டதற்காக ரத்தமானதும் உண்டு.

ஒரு வகையில் பார்த்தால், தான் இப்பதவியில் இவ்வளவு காலமும் ஒரு பொம்மை யாகவே இருந்திருப்பாக திருமதி.தவ ராஜாவுக்கு விளங்கியது.

கடந்த நான்கு வருடங்களாக எந்தவொரு முடிவும், ஒரு சபை தலைவியாக சுயமாக எடுத்ததில்லை. தலைவர் தம்பி ஆமென்றால் ஆம், இல்லையென்றால் இல்லை!. இது என்ன மாதிரியான கேடு கெட்ட அரசியல்.

மீண்டுமொருமுறை கோடினேட்டர் அறை கதவை தட்டி விட்டு திறக்கும் ஓசை. நேரத்தைப் பார்த்தார். பத்தரை. இப்போதே புறப்பட்டாள். தான் பன்னிரெண்டுக்காவது நிகழ்ச்சியில் கலந்து கொள்ளலாம்.

தனக்காக வெயிலில் காய்ந்து மயங்கும் பாடசாலை பிள்ளைகளும், தன்னை திட்டித் தீர்க்கும் ஆசிரிய, பெற்றோர்களும் ஞாபகத் தில் வந்தார்கள். அதிபர் பிரச்சினையில்லை, அவர் தம் சங்கத்து ஆள்.

பிள்ளைகளை நினைக்கையில் திடீ ரென்று, உள்ளிருந்து ஒரு வேகம். இன்றைக் காவது சுயமாய் ஒரு முடிவெடுத்து செயற்படு வோமே என்ற தீர்மானம் கோபத்தோடு உதித்தது.

"பாலா... வாகனத்த எடுக்க சொல்லுங்க... புறப்படுவோம்..."

முதன் முறையாக சுயமாக ஆணை யிட்டதில் ஒரு கர்வம்.

"மேடம்... சார்வார்றாருன்னு சொன்னீங்க..."

"அவரு... வந்தா நிக்கட்டும்... அங்க புள்ளங்க ... பாவம்"

கோடினேட்டருக்கு அதிசயமாக இருந்தது.

சபையின் உயடி வண்டி வத்தேகமயை தாண்டி பன்வில பாதையில் வேகமாக போய்க்கொண்டிருந்தது.

முதன்முதலாக சுயமாக இயங்குவதன் பயம் நெஞ்சு துடித்தது. தலைவர் தம்பியின் கொக்கரிக்கும் முகம் பயமுறுத்தியது.

கூட போனா பதவிய பறிப்பான். அது இன்னும் பத்து நாள்ல முடியுது. மனம் ஆறுதலடைந்தது.

வேகமாக போன வாகனம், ஒரு மேடான திருப்பத்தில் திடீரேன்று ப்ரேக்கடித்து நின்றது.

ஐம்பதடி முன்னால் இருநூறு, முந்நூறு பேர் கொண்ட ஒரு கூட்டம் நடுவில் எதையோ வைத்துக் கொண்டு ஆர்பாட்டம்.

திருமதி தவராஜாவுக்குள் பயம் பதறியது. அமைதியான கூட்டத்தின் முன்னால் நின்றதுண்டு. ஆனால் ஆர்ப்பாட்ட மக்களை சந்தித்ததில்லை.

கூட வந்த காவலன் இறங்கிச் சென்றான். விசாரித்து, பதட்டத்தோடு திரும்பி வந்தான்.

"மேடம்... ஒரு கெழவிய கொளவி கொத்தி செத்துட்டாளாம்... அந்த பொணத்த வச்சி கிட்டு... சனங்க... ஆர்ப்பாட்டம் பண்றாங்க..."

"அதுக்கு... ஏ... ஆர்பாட்டம்..."

பதற்றத்தில் வார்த்தை வலு விழந்து வீழ்ந்தது.

"காடெல்லாம்... அழிச்சி... காணி பறி போகுதாம்... கொளவிங்க... தோட்டத்துக்கு வருதாம்..."

மக்கள் கூட்டம் வண்டியை நெருங்கியது.

அது அரச வாகனம், உள்ளிருப்பது அரச பிரதிநிதி என்று தெரிந்தவுடன் வண்டியை நெருக்கியது.

திருமதி.தவராஜாவுக்கு பயத்தில் எங்கோ ஈரம் கசிவதைப் போல் தோன்றியது. முகத்தில் வியர்வை வழிந்து கண் இருண்டது.

அப்போது பார்த்து போன் அடித்தது. ஏதோ பழக்கத்தில் காதில் வைத்து "ஹலோ..." கிசுகிசுப்பாய் வார்த்தை வெளியேறியது.

மறுமுனையில் கோபத்துடன் கொக்கரிக்கும் தலைவர் தம்பி,

"தம்பி...தம்பி...இங்க..." வாய் குழறியது.

"தம்பி... த...ம்...பி... இங்க... கெழவி...கொளவி..."

தலைவி வார்த்தை வறண்டு மயங்கி சரியத் தொடங்கினாள். இருளும் நினைவு களின் விளிம்புகளில் ஓடும் கிழவிகள், கொட்டும் குளவிகள். முதுகெழும்பற்ற தலை...கள். ●

**மலையகப்படைப்பாளி தெளிவத்தை**
**ஜோசப் விஷ்ணுபுரம் விருது**



இலங்கையின் மூத்த படைப்பாளியும் மலையக எழுத்தாளர் மன்றத்தின் தலைவருமான தெளிவத்தை ஜோசப் இந்த ஆண்டிற்கான தமிழகத்தின் விஷ்ணுபுரம் விருதினைப பெறுகிறார். அவரை ஜீவநதி வாழ்த்துகின்றது.

## எலும்பும் தோலுமான கவிதைகள்

சொற்கள்
சாப்பிடுவதில்லை
ஆனால் மிகவும் கொழுத்திருக்கிறது
தலைவனை போல

செழுமையை நோக்கி எழுந்த
போஞ்சி செடியின் வெண் பூவை ஒத்த
என் பாதைகள்
பெயர்த்தெறிந்து கிடக்கின்றது
கவிதைகள் மிகவேகமாக
என்னைக் கடக்கிறது
தலைவனின் வாகனத்தைப் போல

பிணம் உண்ணும்
போர்வைக்குள்
என் வாழ்வு சிக்கியிருக்கிறது
மீண்டும்
பாடலின் மென்மையான மேனி
பிரகாசம் பிசகி
உழைப்பவரின் சரித்திரத்தை
உச்சரிக்க திணறுகிறது

இப்படி அடங்கி ஒடுங்கி
கதற கதற வீங்கி கொடூரத்துள்
ஆழ்ந்திருக்கும் என் கவிதைகள்
எலும்பும் தோலுமாய் இருப்பது
ஏனென்று இப்போது புரிகிறதா?

## அரியணை

காலம் கசப்பாலும் துயராலும்
என்னை முற்றுகையிட்டு வளைத்துக்கொண்டது.

வரலாற்றின் விரிந்து
தொங்கும் வெளி
என் தலையெழுத்தின் சுவடுகளை
மிகப் பக்குவமாய் தொலைத்திருக்கிறது

அருவருப்பான அழுகிய மாம்பழத்தீவுள்
வளமான மலைகளிலிருந்து
மகிழ்ச்சி அகற்றப்பட்டது

நம்பிக்கைகளை எதிரி
அரிவாளால் அறுக்கிறான்

பகைவன் பெருத்துவிட்டான்
இனி அவனை தூக்கி எறிதல் கடினமே

ஆனாலும்
என் மலைகளின் மேல்
அவனை மிதித்து போடுவேன் ஓர்நாள்

அன்றப்போது
இறைவனுடைய விண்மீன்களுக்கு மேலான
இடத்தில்
என் அரியணை இருக்கும்

சண்முகம் சிவகுமாரின் 2 கவிதைகள்



## அதிகாரம் பற்றி அறியாத போது

மலையுச்சிகளிலும் மாநகர வாயில்களிலும்
மக்கள் கூடுமிடங்களிலும்
ராட்சத சிலைகளில் சாந்த சொரூபியாய்
வெண்ணிற சிலைகளில்
தியானிக்கிறான் புத்தன்

புத்தனின் பிரசன்னம் பற்றி
விவாதிக்க எவருக்குமிங்கு அதிகாரமில்லை.
தியானிக்க வற்புறுத்தியோரைத் தவிர.

ஏழைக்குழந்தையர்க்கான பாலைக் கொண்டு
அவன் உருவாக்கப்பட்டுள்ளதாய்
ரகசியமொன்று உலாவுகிறது.

தகுதிக்கு மீறிய
அதிகாரமும் அங்கீகாரமும் கொண்டு
இனமொன்றின் தனித்த குறியீடாக்கப்பட்ட
அவலத்தில்
தியானத்துள் சமநிலை இழந்து தடுமாறுவதாய்
மிக மெதுவாய் பேசிக்கொள்கிறார்கள்
தேசம்
சீடரின் கரங்களுக்குள் சுழல்கிறது.

அஹிம்சையின்
வெண்கொற்றக்குடைநிழல்
சுதந்திரத்தை பருகி சோம்பல் முறிக்கிறது.

தவிர்க்க முடியாத விமர்சனமொன்றை
கௌதமனின் பால்முகத்தில்
எழுதிச் செல்கிறது குறுக்கே பறந்த காகம்

கொதித்திருந்த முகம் குளிர்ந்த சுகம்
பிடிக்காதவரை சினமூட்டிய திருப்தியில்
தனக்குள் புன்னகைக்கிறான்
தியானத்திலிருந்த போதும் புத்தன்...

– வே.தினகரன்(பத்தனை)

-அந்தனிஜீவா

# கவிஞர் குறிஞ்சி தென்னவனின் வாழ்வும் - பணியும்


"ஒரு கவிஞன் மறைந்த 25 ஆண்டு களுக்குள், அவரைப்பற்றிய உண்மைகள் ஆக்கங்கள் வெளிவந்து விடவேண்டும் என்கிறார் பாவேந்தர் பாரதிதாசனின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கவிஞர் முருகையன்.

ஒரு கவிஞனின் வாழ்க்கை அவன் வாழ்ந்த ஆண்டுகளை கணக்கில் கொள்ளாமல் அவனுடைய படைப்புகளால் தான் எடைபோடப்படவேண்டும். அதை விட வேறு அளவுகோல்கள் இல்லை என்கிறார் மேல் நாட்டு விமர்சகர்.

எல்லோருக்கும் தெரிந்த உண்மை ஒன்றுண்டு. நல்ல கவிதை என்பது உங்களுடைய அம்மாவிற்கும், மனைவிக்கும், சகோதரிக்கும், குழந்தைகளுக்கும் படிக்கக் கூடியதாக இருக்கவேண்டும் என்கிறார் ஓர் அறிஞர். அவரது கூற்றுப்படி படிக்கக்கூடிய கவிதைகளை நம் காலத்தில் எழுதிய ஒரு கவிஞர் குறிஞ்சி தென்னவன். அவர் இப்பொழுது நம்மிடையே இல்லை. அவர் நம்மை விட்டு பிரிந்து பதினைந்து ஆண்டு களாகிவிட்டன. மலையகக் கவிஞர்களின் மலையக மக்கள் கவிமணி சி.வி.வேலுப் பிள்ளைக்கு பின்னர் ஆற்றலும் ஆளுமையும் மிக்க கவிஞராக குறிஞ்சி தென்னவன் இன்றும் பேசப்படுகின்றார்.

கவிஞர் குறிஞ்சி தென்னவன் நுவரெலியா லபுக்கலை தோட்ட மேற்பிரிவைக் வாழ்விடாமாக கொண்ட வி.எஸ்.வேலு என்ற இயற்பெரைக் கொண்ட கவிஞர். குறிஞ்சி தென்னவன் ஈழத்துப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் நூற்றுக்கணக்கான கவிதை எழுதியும் கவியரங்குகளில் கவிபாடியும் மலையகத்தின் முன்னணிக் கவிஞராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

அட்டன் நோர்வுட் சென் ஜோன்ஸ் தோட்டத்தில் 1934 ம் ஆண்டு மார்ச் மாதம் பன்னிரெண்டாம் திகதி முருகம்மாள் சுப்பையா




தம்பதியினர்க்கு மகனாகப் பிறந்தார். வறுமை யும் துயரமும் சூழ்ந்த நிலையில் பிறந்து. சிறு வயதில் இருந்தே வாழ்க்கையில் போராடியே வாழ்ந்தார். ஆரம்பக்கல்வியை கல்மதுரை தோட்டப் பாடசாலையில் தொடங்கி மூன்றாம் வகுப்புவரை கற்று பின் லபுக்கலை பாட சாலையில் ஐந்தாம் வகுப்புவரை கற்றார். இத்துடன் இவரின் பாடசாலைக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. படிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தும் வறுமையின் நிழல் தொடர்ந்ததால் படிப்பை தொடர முடியவில்லை.

கல்வியை தொடர முடியாமல் 1946 ம் ஆண்டு பெற்றோர் செய்த பணியை தொடர்ந்தார். பத்துவயதிலேயே தொழிலாளி யாக உழைக்கத் தொடங்கினார்.

இதனை கவிஞர் தனது அற்புதமான கவிதா வரிகளிலே பதிவு செய்துள்ளார்.

**"உழுதுண்டு வாழ வழியில்லை**
**தொழுதுண்டு பின் செல்லவும் - மனமில்லை**
**தோட்டத் தொழிலாளியானேன்.**

என்கிறார் கவிஞர்.

ஐந்தாம் வகுப்புவரை கல்வி கற்ற

கவியரசர் கண்ணதாசன் கண்டதை கற்று பண்டிதரானதைப்போல... கவிஞர் குறிஞ்சி தென்னவன் சிறுவயதிலேயே பாரதம், இராமாயணம் முதலியவற்றைப் படித்தார். தோட்டங்களில் படிக்கப்படும் அம்மானை, நளமகாராசன் கதை போன்றவற்றை படித்தார். கலைமகள், கல்கி, ஆனந்த விகடன் சஞ்சிகைகளை தேடிப் படித்தார். அது மாத்திரமின்றி தமிழகத்திலிருந்து வெளி வந்த திராவிட இயக்க பத்திரிகைகளை படித்தவர். பாவேந்தர் பாரதிதாசன் முதல் கவிஞர் கம்பதாசன், வாணிதாசன், முடிய ரசன் ஆகியவர்களின் கவிதைகளைப் படித் தார். பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகள் இவரை மிகவும் பாதித்தன. மலையக கவிஞர் களின் ஆரம்ப கால கவிதைகளை படித்தால் ஓர் உண்மை தெரியும் இவர்களின் கவிதைகளில் மகாகவி பாரதியை விட பாரதிதாசனின் தாக்கமே அதிகம்.

இளம் வயதிலிருந்தே வாசிப்பில் நாட்டம் கொண்ட குறிஞ்சி தென்னவன் மலையகமெங்கும் துண்டுப் பிரசுரங்களாக உலா வந்த வாய்மொழிப்பாடல்களை சேகரித்தார். தமிழகத்திலிருந்து வந்த திராவிட நாடு, முரசொலி, தென்றல் மன்றம் போன்ற பத்திரிகைகளில் வெளிவந்த கவிதைகளைப் படித்து மனதில் பதிய வைத்துக் கொண்டார்.

தோட்டத்தில் நடைபெற்ற இரவுப் பாடசாலைக்கு சென்று தமது கல்வியை விருத்தி செய்து கொண்டார். அத்துடன் பதினெண் சித்தர் பாடல்கள், நந்தனார் கீர்த்தனை, பஜனைப் பாடல்கள் என்பன வற்றைப் படித்து நூறுபாடல்கள் வரை பாடியுள்ளார். "மனதில் தோன்றுகின்ற எண்ணங்களின் பயிற்சியே கவிதையாக உரு வெடுத்தன" என்று ஒரு முறை குறிப்பிட்டார். இலக்கணம் தெரியாமல் உணர்வு பூர்வமாக எழுதும் இவரின் கவிதைகள் இலக்கண அர்த்தத்துடன் அமைந்து விடுகின்றன. மார்கழி மாதங்களில் தோட்டங்களில் பஜனை பாடுவது வழக்கம். அப்பஜனைக்குப் பக்தி பாடல்கள் எழுதியது மாத்திரமின்றி தாமே பாடியும் வந்தார் இதன் காரணமாக கவிதை இயற்றும் பக்குவத்தையும் பெற்றார்.

**"உள்ளத்துள்ளது கவிதை – இன்பம்**
**உருவெடுப்பது கவிதை**
**தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்டு**
**தெரிந்து வைப்பது கவிதை"**

என்றார் கவிமணி தேசியவிநாயகம்.

ஆம் கவிஞர் குறிஞ்சி தென்னவனின் உள்ளத்து உணர்வுகள் கவிதையாக பிரவாகமெடுத்தது.

ஈழத்து கவிதை வளர்ச்சியில் மலையகமும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்துள்ளது. அத்தகைய பங்களிப்பின் மிக முக்கிய பிரதிநிதிகளில் ஒருவர் தான் கவிஞர் குறிஞ்சி தென்னவன்.

மலையக இலக்கியத்துறை பற்றி சிறிது பின்னோக்கிப் பார்ப்போமானால் 1920களுக்கு பின்னரே மழைத்தூறல்கள் போல கவிதை முயற்சிகள் காவடிச் சிந்து களாக, வாய்மொழிப் பாடல்களாக சிறுசிறு துண்டுப் பிரசுரங்களாக அச்சிடப்பட்டு தோட்டம் தொழிலாளர்களிடையே பாடப் பட்டு பரப்பப்பட்டன. 1930 களில் மலையக ஆக்க இலக்கிய முன்னோடி தேசபக்தன் சோ.நடேசய்யருடன் மலையகத்தின் நவீன இலக்கிய முயற்சிகள் தொடங்குகின்றன. இதற்கு முன்னர் கோப்பி பயிர்ச் செய்கை காலத்தில் கவிதை படைத்த அருள்வாக்கி அப்துல்காதிர் புலவரை இங்கு குறிப்பிட்டுக் கூறலாம்.

1960களில் தோன்றிய சூத்திரப் பரம்பரையுடன் கவிஞர் குறிஞ்சி தென்னவனின் கவிதைப்பணி தொடர்கிறது. 1962 ம் ஆண்டு கவிஞர் 28ஆவது வயதில் திருமணம் செய்து கொண்டார். தனது உறவுமுறையான லெட்சுமி அம்மையாரை கரம் பிடித்து மண வாழ்வில், மணிமேகலை, தாமரைச் செல்வி, ஞானப்பிரியா என்ற மூன்று பெண் பிள்ளைகளையும் கார்த்திகை பாலன் என்ற மைந்தனையும் பெற்றெடுத்தார். தன் பிள்ளைகளுக்கு கவித்துவமான நல்ல தமிழ் பெயர்களைச் சூட்டினார்.

கவிஞர் குறிஞ்சி தென்னவனின் முதல் அச்சேறிய கவிதை 1957 ஆம் ஆண்ட "மாணவர் முரசு" என்ற சஞ்சிகையில் "வெல்க உரிமைப்போர்" என்ற தலைப்பில் வெளி வந்துள்ளது. அதன் பின்னர் பத்திரிகை, சஞ்சிகைகளில் இவரது கவிதைகள் வெளி வந்தன. 1967 ஆம் ஆண்டு தினபதி பத்திரிகையில் "தினபதி கவிதா மண்டலத்தில்" இவரது கவிதை இடம் பெற்று, மலையகக் கவிஞர் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டார்.

தோட்டத் தொழிலாளியாக வாழ்ந்த கவிஞர் குறிஞ்சி தென்னவன் தோட்டங் களில் நடக்கும் பஜனைகளில் பாடுவதற்காக பாடல் எழுதிக் கொடுத்தார். தோட்டங்களில்

மேடையேற்றப்பட்ட நாடகங்களுக்கு பாடல்கள் எழுதிக் கொடுத்தார்.

மலையகத்தில் வேறு எந்தக் கவிஞரும் பாடாத அளவிற்கு தொழிலாளர் களின் துன்ப துயரங்களை அவர்களில் ஒருவராக வாழ்ந்து எழுதியுள்ளார் கவிஞர். மலையகக் கவிதை என்றால் கவிஞர் குறிஞ்சி தென்னவன் தான் என்று நினைவுக்கு வரும்படி அவர் பெயர் பதித்துள்ளார். அதனால் தான் "மரபுக் கவிதைக்கு மலைநாட்டில் தென்னவன் ஒருவரே நினைவுக்கு வருகிறார்" என்று கலாநிதி க.அருணாசலம் குறிப்பிட்டுள்ளார்.

"தூங்கியது போதும்
துயிலெழுவாய் மலைமகனே!
விடிந்தது பொழுது
விழி திறந்தெழுவாய்"

என தனது கவிதை வரிகளின் மூலம் கவிஞர் மலையகத்தைத் தட்டியெழுப்பினார்.

"நமக்கு தொழில் கவிதை" என்றான் பாரதி. கவிதை புனைதலை பலர் தொழி லாக்கிக் கொண்டிருக்கலாம். ஆனால் எனக்கு கவிதை தொழிலல்ல எனது இரத்த நாளங் களில் ஓடும் உயிர்த்துடிப்பு தீமையை கண்டு கொதித்தெழும் உணர்வின் வடிகால் பொழுது போக்காக மனக்கிளர்ச்சிகளின் உந்துதலால் எழுதப்பட்டவையல்ல! மலைகள் அவைகளில் ஓய்வு கௌ்ளும் முகில்கள். அதன் மேனி யெங்கும் பட்டொளி வீசி பரிமளிக்கும் தேயிலைப் பசுமைகள் அம்மண்ணின் அடியில் புதைக்கப்பட்ட இம்மக்களின் அவலம். நிறைந்த வாழ்க்கைச் சரிதங்கள். இவை யாவும் எனது கவிதை களில் "கருக்கள்".

"இவர்கள் கொட்டிய கண்ணீரும் செந்நீரும் வேதனைக் குமுறல்களும் விட்டிடும் ஏக்கப் பெருமூச்சுகளும் எதிர்கால கனவு தரிசனங்களுக்காக நிகழ்கால வாழ்வின் சுகங்களை எவரெவர்களுக் காகவோ, அர்ப் பணித்து விட்டு வெறுமையை அரவணைத்து ஏங்கும் நெஞ்சங்களும் எனது கவிதையின் ஜீவத்துடிப்புகள்" என்று தன் குறிஞ்சி தென்னவன் கவிதைகள் நூலில் "ஒரு கனவு நனவாகிறது" என்ற தலைப்பில் கவிஞர் குறிஞ்சி தென்னவன் தனது என்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

கவிஞர் "குறிஞ்சி தென்னவனின் கவிதைகள்" எனற நூல் மலையக வெளியீட்டகத்தின் வெளியீடாக 1987 இல் ஜனவரியில் வெளிவந்தது. முதற்பதிப்பு 500 பிரதிகள் அச்சிடீப்பட்டு கவிஞருக்கு அன்பளிப் பாக வழங்கினோம். அது மூன்றே மாதத்தில் விற்கப்பட்டுவிட்டது. மீண்டும் 1987- மார்ச் மாதம் இரண்டாம் பதிப்பாக 500 பிரதிகள் அச்சிடப்பட்டது. இந்த நூல் வெளி வந்த பின்னரே கவிஞர் குறிஞ்சி தென்ன வனின் ஆற்றலையும் ஆளுமையையும் அனைவரும் புரிந்து கொண்டனர்.

1985 இல் மலையக கலை இலக்கியப் பேரவை தனது ஐந்து ஆண்டு நிறைவு விழாவை ஒரு முழுநாள் நிகழ்வாக இலக்கிய விழாவாக கண்டியில் நடத்திய பொழுது மலையக எழுத்துலகில் புகழ்பூத்த சிறுகதைச் சிற்பி என்.எஸ்.எம்.ராமையா, சாரல்நாடன், நயீமா ஏ. சித்திக், பண்ணா மத்துக் கவிராயர், "மலைமுரசு" க.ப.சிவம், ஆகியோருடன் குறிஞ்சி தென்னவனையும் கௌரவித்தது. இலக்கியவிழாவில் கவிஞரங்கிற்கு குறிஞ்சி தென்னவனே தலைமை வகித்தார். இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட பிரதேச அபிவிருத்தி அமைச்சர் செ.இராசதுரை அவர்கள் பேசும் பொழுது கவிஞர் குறிஞ்சி தென்னவனை "வாழும் பாரதி" என வாழ்த்தினார். அவரது அமைச்சு நடத்திய இலக்கிய விழாவில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் முன்னிலையில் "கவிச் சுடர்" எனப் பட்டம் வழங்கி கௌரவித்தார்.

கவிஞர் குறிஞ்சி தென்னவன் வாழும் பொழுதே சிறப்பாக கௌரவிக்கப் பட்டார். இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவ ராஜ் தனது அமைச்சின் மூலம் நடத்திய சாகித்திய விழாவில் "தமிழ்மணி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கலாசார அமைச்சு "கலாபூஷணம்" விருது வழங்கியது. மத்தியமாகாண கல்வி அமைச்சராக கௌரவ வி.புத்திரசிகா மணி இருந்த பொழுது விருதும் பொற்கிழியும் வழங்கி கௌரவித்தார்.

கவிஞர் குறிஞ்சி தென்ன வன் இலங்கையின் புகழ்பெற்ற கவிஞர் மஹா கவியைப்போல "குறும்பாக்கள்" எழுதுவதில் வல்லீவர். இவர் எழுதிய குறும்பாக் கள் கொழுந்து சஞ்சிகையிலும், சூரிய காந்தி என்ற வார இதழிலும் இடம்பெற்றது. மஹாகவிக்கு பின்னர் சிறப்பாக குறும்பாக்களை படைத்த வர் கவிஞர் குறிஞ்சி தென்னவன். கவிஞரின் குறும்பாக்களில் கற்பனை நயமும், உவமையும் நகைச்சுவை யும், கருத்துக்களை சொல்கின்ற வேகமும் அவருக்கே உரித்தான கைவரப் பெற்ற இலக்கியப்பாணியாக அமைந்துள்ளது.

அவரது குறும்பாக்களில் ஒன்று:

**"தொழிற்சங்கத்தலைவர் தண்டபாணி**
**தொழிலாளர் இவர்கள் ஒரு ஏணி**
**விழி சிவக்க முகம் சிவக்க**
**மேடைகளில் பேசிடுவார்**
**தலைவர் இவர் இன்று கங்காணி"**

ஒரு யதார்த்த உண்மையை வெகு துலாம்பரமாக கவிஞர் எடுத்து காட்டுகின்றார். இவர் 1998 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி அமரரானர்.

மலையக இலக்கிய உலகம் இரண்டு தனிமனிதர்களுக்கு கடமைப் பட்டிருக்கிறது. ஒருவர் மலையக மக்களைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதிய அகிலம் அறியச் செய்தவர் மக்கள் கவிமணி சி.வி.வேலுப் பிள்ளை. மற்றவர் தோட்டத்தொழி லாளர்களில் ஒருவ ராக வாழ்ந்து அந்த மக்களின் வாழ்வியலை பற்றி எழுதி புகழ்பூத்த கவிமணி கவிஞர் குறிஞ்சி தென்னவன். இந்த இருவரின் பெயர்கள் மலை முகடுகளும், தேயிலைக் காடுகளும் இருக்கும் வரை மறக்காது. ●

# உண்மை

உன் பேனையை சிலுவையில்
அறைந்துவிட்டார்களா?
என்னைத்தொட அது
வருவதில்லையே ஏன்? என்
மைப்புட்டியின் ஆதங்கம்!

அதற்கெங்கே
புரியப்போகின்றது
இந்த தேசத்தில்
ஊற்றெடுத்த இரத்த வெள்ளம்
என் போனாவின்
கருப்பையையும்
இரைப்பையையும்
இன்னுமொரு தலைமுறை
வரும்வரைக்கும்
நிரப்பியுள்ளதை!

**–சு.முரளிதரன்**

# விறகுகாட்டு

அந்த நாள்
கதைகள் என்று
என் அடுத்த வீட்டு தாத்தா
அடிக்கடி சொல்வார்...

கருப்பந்தேயிலை காடுகளுக்கு
காய்ந்த குச்சுகள் தேடிச்
செல்லும் காலங்களில்

பழுக்காத பிஞ்சு
பப்பாசியொன்றின்
தோல் சீவி

ஒரு பக்க முனையில்
மட்டும்
சிறுதுளை இட்டு

உப்புத்தூள்,உறைப்புதூள்
சிறுவெங்காயம் சில துண்டுகள்
சுவை கூட்ட
புளி கரைசல் கொஞ்சம்...

குடைந்த துளை வழியே
அத்தனையையும்
அதிலிட்டு..

விரல் தடிப்பான
விறகு குச்சால்
குத்து குத்தென
அதை குத்த
அதன் நெடியில்
நுனி நா
உதடு சுவைத்திடுமாம்...

உறைக்க உறைக்க
உமிழ் நீர் சுரக்க...
உண்டு மகிழ்வார்களாம்...

அன்று தொடங்கி
இன்று கடந்தும்
விறகுகாட்டு விருந்தாக
இந்த பப்பாசி படையல்..

அதோ
அங்கொரு சின்னவர் கூட்டம்
கயிறு சாக்கோடும்
பிஞ்சு பப்பாசியோடும்...

**கோ.கிசோகுமார்**



திண்ணனூரான்

# பொன்னுத்தாயி

அவள் பெயர்தான் பொன்னுத்தாயி. அவளின் பேச்சு, நடை, உடை எல்லாவற்றிலும் ஒரு வித திமிர் இருக்கும். சிங்கமலை தோட்டத்தின் கோவில் லயத்து முதல் காம்பராதான் பொன்னுத்தாயியின் பங்களா.

அந்த பங்களா பத்தடி நீளத்தையும், எட்டே அடி அகலத்தையும் கொண்ட ஒரு கம்பராவாகும். வெய்யிலே விழாத இந்த சின்னஞ் சிறு இருளடைத்த பங்களாவில் பொன்னுத்தாயி அவளின் கணவன் ராமு. இத்தம்பதியினரின் மூன்று வாரிசுகள். இவர்களுக்கு மத்தியில் பொன்னுத்தாயியின் வயது போன அம்மா. மொத்தமாக இந்த பங்களாவில் அரை டசின் மனித ஜீவன்கள் வாழ்கின்றனர்.

இந்த பங்களா காம்பராவின் முன்னால் ஒரு சின்னஞ்சிறு கொடாப்பு போன்றதொரு ஸ்தோப்பு. இந்த ஸ்தோப்பில் இரவுநேரத்தில் ஒரு கருப்பு பூனைக்குட்டியும், இரண்டு சேவல்களும் தஞ்சமடைந்து கொள்ளும். இரண்டு சேவல்களும் தோட்டத்து மாரிஅம்மன் கோவிலுக்கு பலி கொடுக்க நேர்ந்துவிட்ட சேவல்கள். ஸ்தோப்பில் காணப்படும் அடுப்பங்கரைக்குப் பக்கத்தில் ஒரு சூட்டுக் கல்லும், அம்மியும் பார்ப்பார், கேட்பார் இன்றி கிடக்கும். சுவரில் ஒரு பெரிய ஆணி காட்சி கொடுக்கும். அந்த ஆணியில் தான் பொன்னுத்தாயி வேலை முடிந்து வந்து தேயிலைக் கூடையை தொங்க விடுவாள்.

இது தான் இன்றைய மலையக மக்களின் வாழ்வியல் இலட்சணம். எவன் எவனொ எதை எதையோ சொல்லுகிறான், எழுதுகிறான். செய்தது ஒன்றும் இல்லை. எல்லாமே நொண்டிச் சமாதானம் தான்.

அன்று பௌர்ணமி தினம். தோட்டத்து மாரியம்மன் கோவிலின் மணி சத்தம் பொன்னுத்தாயியின் காம்பராவையே அதிர வைத்தது. அப்போது தான் புரோக்கர் செல்லையா அக்காம்பராவுக்குள் நுழைந்தான்.

"எல்லாம் சரியா புள்ள"

"எல்லாமே சரிதாங்க. வீட்டிக்காரரிடமும் சொல்லிட்டேன். எப்ப பொறப் படணும்."

"ரெடியா இரு. நாளைக்கு விடிய நாலு மணி பஸ் வண்டியில போவோம். கொழும்பு போயி மீதி வேலையைப் பார்த்துக்குவோம்"

செல்லையவின் வார்த்தைகள் பொன்னத்தாயின் காதில் விழுந்ததும் அவளின் முகத்தில் சந்தோஷ ரேகைகள் படர்ந்தன. அவளின் கைகால்கள் செயல்பட மறுத்தன. மனதிற்குள் பயம் தொத்திக் கொண்டாலும் அவளின் மனக்கதவு திறக்கப்பட்டு எங்கு எல்லாமோ சந்தோஷம் ஓடித்திரிந்தது. அவளின் மன எண்ணங்களை அவளால் அடக்கிக் கொள்ள இயலவில்லை.

"இது அக்கிறுமம் புடுச்ச தோட்டம். நானாவது எப்படியாவது போய் எங்கேயாவது சேர வேண்டியது தான். முடுமை எப்பத்தான் நம்மள விட்டு தொலையுமோ தெரியல்ல. நம்மளும் நாலு பேரு மாதிரி செந்தெழிப்பா இருந்தா தான் சாதிசனமும் நம்மள மதிக்கும். நறுவிசு இல்லாத வாழ்க்கையாய் போச்சு. நம்ப பொறக்கிறப்ப எடுத்துக்கிட்டு வந்த வரம் இப்படி யாச்சு. நம்ம தலைவிதி இப்படி மாறிப் போச்சே" பொன்னுத்தாயியின் அடிமனதிலிருந்து அவளின் தோட்ட வாழ்வியலின் பாதிப்பு வேகமாகப் பேசியது. மனதை தைரியப்படுத்திக் கொண்டாள்.

அன்று இரவு முழுவதும் தூக்கம் அவளை விட்டு விலகி வெகு தூரத்துக்குப் போய் நின்றது. அதிகாலை மூன்று மணியாகி விட்டது. ஸ்தோப்பில் அடைபட்டுக்கிடந்த சேவல்களும் கூவத் தொடங்கியது. லயத்துப் பீலியில் பொன்னுத்தாயி முகத்தை கழுவிக் கொண்டாள். எல்லோரிடமும் பயணம் சொல்லி விட்டு புரோக்கர் செல்லையாவும் பொன்னுத்தாயியும்

ரோட்டுக்கு வந்துசேர. சரியான நேரத்துக்கு இருட்டையும் கிழித்துக் கொண்டு பஸ்வண்டி வந்து சேர்ந்தது.

இப்போது பஸ் வண்டி முக்கி மொணகிக் கொண்டு அவிசாவளை நகரையும் தாண்டி விட்டது. சற்று நேர்தில் பளபளவென சூரியனின் வெளிச்சம் பஸ்வண்டிக்குள் விழ பொன்னுத் தாயியின் மனதில் புதுப்புது அர்த்தமில்லா எண்ணங்கள் அறுந்து, அறுந்து விழுந்தன.

"நல்லதும் கெட்டதும் தெரியாது. தெரி யாத ஊரு. மானம் மரியாதை போயிடுமோ தெரி யல்ல. இனியாவது நம்மள பிடுச்ச தரித்திரியம் போயிடும். இருக்கிறவன் சரியா இருந்தா செரக்கிறவனும் சரியா செரப்பான்" மீண்டும் பொன்னுத்தாயியின் மனம் அவளுக்குள் பேசியது.

இப்போது பஸ்வண்டியும் கொழும்பை வந்தடைந்தது. பஸ் வண்டியை விட்டு இருவரும் இறங்கினார்கள். கொழும்பு நகரின் வாகன நெரிசலைக் கண்டதும் பொன்னுத்தாயி உண்மை யிலேயே பயந்து அதிர்ந்து போய் விட்டாள். அங்கும் இங்கும் வாகனங்களும், மக்களும் அலைமோதுவதைக் கண்டதும் அவளுக்கு ஆச்சரியமும், அதிசயமாகவும் இருந்தது.

"இப்ப எங்க போகணும்" பொன்னுத் தாயிதான் முதலில் செல்லையாவிடம் பேச்சைக் கொடுத்தாள்.

"என் பின்னாடியே வா புள்ள" சிக்கன மாய் பதில் கொடுத்தான் செல்லையா.

மணி பிற்பகல் இரண்டு ஆகிவிட்டது. செல்லையாவின் மனதிற்குள் சந்தோஷம் கூத்தாடியது. அவள் கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்தான். இன்று இவளால் ரூபா பத்தாயிரம் கமிசன் கிடைக்கப் போகும் சந்தோஷத்தில் செல்லையா மதுபான கடைக்குச் சென்று ஒரு கால் போத்தலையும் வாங்கி இடுப்பில் சொருகிக் கொண்டான்.

"வா புள்ள அந்தா தெரியுது அந்த ஆஸ்பத்திரியில்ல மெடிக்கல் செக்கப் போட்டுக் கொள்வோம்"

ஆஸ்பத்திரியில் பொன்னுத்தாயியின் இரத்தம் சோதிக்கப்பட்டு ரிப்போர்ட் தரப் பட்டது. டொக்டர் சிறிய வார்த்தைகளை கேட்டதும் செல்லையாவின் கூத்தாடிய மனசு உடைந்து சிதறி சுக்கு நூறாகியது.

செல்லையாவும் பொன்னுத்தாயியும் மீண்டும் அட்டனை நோக்கிப் பயணித்தனர். இந்தச் சனியன் நம்ம வாயில்ல மண்ணைப் போட்டு விட்டுறிச்சே. நாயீ. சனியன். எவ்வளவு சிரமப்பட்டு விட்டேன். பத்தாயிரம் கமிசன் கிடைக்கும் என்ற ஆசையில் வட்டிக்கும் பணம் வாங்கி விட்டேனே. எருமைமாடு. இப்படி புலம்பத் தொடங்கிவிட்டான் செல்லையா.

இப்பொது இரவு 9 மணியாகி விட்டது. பஸ் வண்டி வட்டவளையைத் தாண்டி விட்டது.

"ஹக், ஹெக், ஹக்"

"ஏண்டி சனியனே இப்படி கொக்கு கொக்குன்னு இருமித் தொலைக்கிற"

இப்போது பொன்னுத்தாயிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. முகத்தை முறைப் பாய் வைத்துக் கொண்டாள். அவளால் இரும முடியவில்லை. வாயிக்குள் அடக்கி வைத்திருந்த சளியை பீச்சென காறித் துப்பினாள். பின்னர் அவளின் வாய் வழியாக சளியுடன் சிவப்புக் கலரில் இரத்தமும் இணைந்து வடிந்தது.

கொழும்பு டொக்டர் செல்லையவிடம் தெரிவித்த வார்த்தைகள் இப்போது பலித்து விட்டது. இப்போது செல்லையாவின் மனது திக்கென்று அதிர்ந்து போய் விட்டது. ச்...சீ... இவளைப் போய் காசுக்காக ஆசைப்பட்டு வாய்க்கு வந்தபடி திட்டிவிட்டேனே. அவனது மன செல்லாம் அதிரடியாக துக்கம் குடி கொண்டது. அவனின் கண்களில் கண்ணீர் வடிந்தது.

அவனது வாய் அவனை அறியா மலேயே பொன்னுத்தாயி என்றது. அவனது மனதில் படர்ந்திருந்த பண ஆசை அவனுக்குத் தெரியாமலேயே அழிந்து போயிற்று. இப்போது அவனது மனதில் பொன்னுத்தாயியின் சிவப்பு சளி பரவி இருந்தது.


இப்போது பொன்னுத்தாயியின் வெளி நாட்டு தொழில் ஆசையும் அழிந்தது. செல்லை யாவின் கொழும்பு வெளிநாட்டு தொழில் வழங்கும் நிறவனத்திற்கு ஆட்கள் பிடித்துத் தரும் புரோக்கர் தொழில் ஆசையும் அவனுக் குள்ளிருந்து மறைந்து போய் விட்டது.

இப்போது கல்லாய் சமைந்து போனான் செல்லையா. பஸ் வண்டி குலுங்கி குலுங்கி மல்லியப்பு சந்தியை வந்தடைந்தது. அப்போது பொன்னுத்தாயியை அவனின் மடியில் சாய்த்து வைத்துக் கொள்ள செல்லையா நினைத்தான். அதற்குள் பொன்னுத்தாயியின் கண்கள் எங்கேயோ செருகிக் கொள்ள செல்லையாவின் மடியில் சாய்ந்தாள் பொன்னுத்தாயி உயிரற்ற பிணமாக.

இன்று பொன்னுத்தாயி செல்லை யாவின் வீட்டில் நிரந்தரமாக தங்கியிருக்கிறாள். செல்லையாவின் மகள் பெயர் பொன்னுத் தாயியாம்.

ஆமாம்! செல்லையாவின் புரோக்கர் தொழிலையே இல்லாதொழித்து மலையக பெண்களை வெளிநாட்டு அடிமை தொழில் மோகத்திலிருந்து காப்பாற்ற தன் உயிரையே கொடுத்தவள் பொன்னுத்தாயி. அவள் எவர் வீட்டிலாவது தெய்வமாக வாழத்தானே வேண்டும். •

மு.சிவலிங்கம்



# புதிய தலைமுறை கவிஞர் சு.தவச்செல்வனின் "சிவப்பு டைனோசர்கள்"

கவிஞர் சுப்பிரமணியம் தவச்செல்வன் , மஸ்கெலியா, சென்ற் ஜோசப் தமிழ் மகா வித்தி யாலயத்தில் ஆசிரியராக தொழில் புரிகின்றவர். சிறுகதையாசிரியர், கவிஞர், திறனாய்வாளர் என்ற துறைகளில் இளைய நடையில் எழுத்துப் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

கடந்த ஜூன் 23 ம் திகதியிலும், ஜூலை 18 ம் திகதியிலும் இவரது கன்னிப் படைப்பான "சிவப்பு டைனோசர்கள்" என்ற கவிதை நூல் வெளியிடப்பட்டன..

பேராசிரியர் சி.சிவசேகரத்தின் அணிந் துரையுடன் இக் கவிதைப் படையல் வாசகர் களை நோக்கியுள்ளது.

இன்று மரபுக் கவிதைகள் வழக் கொழிந்து போய்விடாவிட்டாலும், அவை "மறைந்து வரும் துயரக் காலத்தில்" புதுக் கவிதைகள் மிகச் சிறப்போடும், மிகச் "சிரிப் போடும்" படைக்கப்பட்டு வருவதை நாம் அவதானிக்கின்றோம்.

அன்று பாரதியார் முதன் முதல் "இதுதான் வசன கவிதை" என்று சொல்லிவிட்ட ஒரே காரணத்துக்காக, இன்று எண்ணற்ற "வசனங்கள்" ஒன்றன் கீழ் ஒன்றாக வரிசைப் படுத்தி புதுக் கவிதையென பிரகடனப்படுத்தப் படுகின்றன..! அவற்றை ஏற்றுக் கொள்ளச் சொல்கின்றன.. இச் சீரழிவை முளையிலேயே கிள்ளி விடுவதற்காக அடுத்தக்கட்ட கவிஞர்கள்... "மொழி கற்றவர்கள்" என்ற துரதிஸ்டத்தின் பேரில் வார்த்தை வளமென்று மீண்டும் மக்கள் மொழியில் இலக்கியம் தந்த பாரதியைப் புறந்தள்ளிவிட்டு, மீண்டும் சங்க காலத்தை இழுத்து வந்து "செய்யுள்" எழுதி வருகின்றனர்..!

இவைகளுக்கு "பொழிப்புரை", தெளி வுரை, உவமை... உவமேயங்கள்... போன்ற அன்று அனுபவித்த இலக்கணத் துன்பங் களை திரும்பவும் உருவாக்கிக் கொண்டிருக் கிறார்கள். இந்த இரு சாரார்களுக்குமிடையில் புதுக் கவிதையுலகுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் அநேகர் தோன்றியுள்ளனர். இலக்கியத்தின் உச்ச நிலை கவிதை என்பர். அவ்வுச்ச நிலையை உருவாக்குவதற்கு, அன்று மரபுக் கவிதைகள் செய்த அதே பணியைத் தொடர்பவர்கள் வரிசையில் நிறைய நிறைய கவிஞர்கள் உருவாகி வருவதையும் அவதானிக்கின்றோம்..

அந்த நல்லதொரு அவதானிப்பில் இளங்கவிஞர் சு.தவச்செல்வன் அடையாளம் காணப்பட்டுள்ளார்..

"சுவை புதிது... பொருள் புதிது.. வளம் புதிது... சொற் புதிது, சோதி மிக்க நவ கவிதை எந் நாளும் அழியாத மகா கவிதை..!"

என்று புதுக் கவிதைக்கு பாரதி இலக்கணம் வகுத்தவர்.. புதுக் கவிதையின்

தோற்றத்துக்கு பாரதியார் முன்னோடியாக விருக்கின்றார். இவரது காலத்திலிருந்தே தமிழ்க் கவிதை புது வடிவம் பெற்றது. பாரதி யின் இக் கவிதைகளை, அவர் கூறியதற் கிணங்க அவர் காலத்தில் பலரும் வசனக் கவிதைகளென்றே கூறினர். படிப்பதற்கும், விளங்கிக் கொள்வதற்கும் இலகுவாக இருந்த இக் கவிதைகள், மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றன.

பாரதி தனது மானசீக குருவாக இரு கவிஞர்களை ஏற்றுக் கொண்டவர். அமெரிக்கக் கவிஞன் வோல்ட் விட்மனின் "புல்லின் இதழ்கள்" என்ற கவிதைத் தொகுப்பும், தாகூரின் "கீதாஞ்சலி" கவிதைத் தொகுப்பும் பாரதியை வெகுவாக ஆகர்ஷித்தன. ,

பாரதிக்குப் பின் புதுக் கவிதைகளின் தோற்றத்துக்கு ந.பிச்சைமூர்த்தி க.நா.சுப்பிர மணியம், கு.ப.ராஜகோபாலன், சி.சு. செல்லப்பா இவர்களுக்கடுத்த நிலையில், சில கால இடை வெளிக்குப் பின் புதுக் கவிதையின் வளர்ச்சிக்கு நிறைய படைப்புக்களைத் தந்த கவிக்கோ அப்துல் ரஹ்மான், மு.மேத்தா, கவிஞர் வைரமுத்து போன்றோர் முன் நின்றனர்.

இவ்வாறு வரலாற்றுச் சிறப்புக்கள் நிறைந்த புதுக் கவிதையுலகம் தமிழிலக்கிய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு மரபு கவிதைகளின் ஆளுமை போன்று பணி செய்ய வேண்டுமென்பதே கவிதைப் பிரியர்களின் எதிர்பார்ப்புக்களாகும்.

தவச்செல்வனின் படைப்புக்களை அவதானிக்கின்ற போது, அவர் இன்றைய நவீன கவிதைகளையும், கவிஞர்களையும் நன்றாக உள் வாங்கி, தனது கவிதை முன்னெடுப்பை செம்மைப்படுத்தியுள்ளமை நன்கு புலனாகின்றது.

பிரதேச எல்லைக்குள் கவிஞர் குறிஞ்சித் தென்னவனினதும், பிரதேச எல்லை களுக்கப்பால் மகா கவிஞன் சு.வில்வரத்தினத் தின் படைப்புக்களினதும் பார்வைகள் முளை யிடுவதை அறிய முடிகிறது… கவித்துவ படிமங் கள் நிறைந்த இக் கவிதை நூல் சுமந்து நிற்கும் தகவல்கள், எவற்றைச் சமூகத்துக்குச் சொல்ல முனைந்துள்ளன என்பதற்கான விடையே இக் கட்டுரையின் விவரிப்பாக இருக்க முடியும்.

குடும்பத்தின், இனத்தின், சமூகத்தின் எந்த மூலையில், அவைகளுக்கெதிரான கேடுகள் நடக்கின்றதோ அது பற்றி குமிழியிடு கின்ற மனக் கொதிப்பே இக் கவிஞனின் வரிகளாக அமைந்துள்ளன. புத்தகத்தின் 85 பக்கங்களில் 58 கவிதைகள் பதிக்கப் பட்டுள்ளன. 58 கவிதைகளும் ஒவ்வொரு விடயங்களைப் பற்றிப் பாடி நிற்கின்றன.. வாசகனுக்கான உள்ளோட்டமும், மேலோட்டமுமான வாசிப்புக்கு உகந்த எளிமையும், வசீகரமும் கொண்டதாக இவரது எழுத்துக்களிருக்கின்றன.

தவச்செல்வன் தாயைப் பற்றி விதந்துப் பாடிய இரு கவிதைகள் மனத்தை உருக்குவனவாக அமைந்துள்ளன. மலையகக் குடும்பங்களிலுள்ள உறவுகளில் தாயின் உறவே அடித்தள உறவாக அமைந்திருக்கிறது. தந்தையை விட அவளது பராமரிப்பு, பிள்ளை வளர்ப்புக்கான அவளது வேலைத் திட்டங்கள் மிகப் பொறுப்பு வாய்ந்தவை. அக் குடும்பத்தின் வெற்றி, தோல்வியை தாயே நிர்ணயிக் கின்றாள். ஏனைய குடும்பங்களில் தந்தை ஒருவரே நிகராக நிற்பார். இங்கு…. தொழில் வழித் துயரங்களில் உழன்று, தொழிலாதிக்கங் களினால் ஒடுங்கி, அனைத்துக் கொடுமை களுக்குள்ளும் சீரழிந்துக் கொண்டு பிள்ளை களை, தான் உழலும் சமூகத்துக்கப்பால் தூரத்தில் நிறுத்தி வைப்பதில் வென்று நிற்கின்றாள். தாயால் உயர்ந்த நிலைக்கு வளர்ந்துவிட்ட ஒரு மகனின் பெருமிதக் கவிதை இது…

இரு விரல்கள் மடக்கிக் கிள்ளிய
கொழுந்துக் கறைகளால்
நீ தீட்டிய ஓவியமே.
நான் இன்று பேசும் பொருளாய்
மாறியுள்ளேன்.
மிளார் குச்சிகளால் கீறப்பட்ட
வறுமைக் கோடுகளின்
வழியை மறைத்து
நீ காட்டிய பாதைகள் - இன்று
நான் நிற்கும் சிகரத்திற்கானது
உன் முதுகில் பதிந்த
கூடை வரிகளின் அச்சுக்களை

குளிக்கும் வேளையில் பார்த்துக்
கனன்று போன எனது கண்கள்
உன் தலையையும்
தடவிப் பார்க்கச் சொல்கிறது...

"நானும், நீயும், மண்ணும்" என்ற கவிதை நீண்டதாகும். இது போன்று "சிறுமியின் பாடல்" என்ற கவிதையிலும் தாயை அடையாளம் காட்டும் போது...

ஒடிந்து வளைந்து நிற்கும் உடம்பு
புழுதியடர்ந்த கேசம்
வெற்றிலைக் காவியறைந்த பற்கள்
அவளை எனக்குத் தெளிவாகத்
தெரிவிக்கும்
எனவேயவள் என் தாயில்லை..!
பாதணியின்றி நடந்து வெடித்தப் பாதங்கள்
புடைத்த கெண்டை நரம்புகள்
அகன்று விரிந்த கால் விரல்கள்
அம்மாவைக் காட்டும்
அடையாளக் குறிப்புகள் - ஆகவே
அவள் இவளில்லை..
நீண்டு வளர்ந்த நகக் கணுக்களில்
தேயிலைக் கொய்த கறைகள்
பதிந்து நிற்கும் கருமைப் பரப்புகள்
மயிர் படரும் முன்னங் கைகள்
மிளார் குச்சிகளின் கீறல்களால்
ரோமங்களாகக் கிடக்கும் நேர்த்தி
இவையெல்லோருக்கும்
அம்மாவைக் காட்டும்..

யுத்தத்தின் கோரத் தாண்டவம் வடக்கு, கிழக்கு மக்களையழித்து அம்மண்ணை கபளீகரம் செய்திருக்கும் இன்றைய நிலையைக் காட்டும் "தலையிழந்த பனந் தோப்பு" கவிதையாக...

வளியுடன் நிறப்புழுதிகள்
தலைவிரிக் கோலப் பெண்களாய்
தனிமையாய் நிற்கும் பனைகளில் படிந்து
பசுமையைப் பறித்திடும்
சுடுகருவியுடன் சுவையை
சூடாகப் புசித்து புசித்து
நிலமெங்கும் மண்ணின்
நிறம் சாம்பலாய் நிறக்கும்
நாலைந்து ஆண்டுகளுக்கு முன்
தேங்கிய நீரோரியில் வடிந்து நின்ற
குருதி கலந்த பழைய நீரை
பறந்து வரும் நாரைகளும் கொக்குகளும்
பருகி தாகம் தீர்க்கும்
அழிந்த பனந் தோப்புக்களில்
ஒன்றிரண்டு தலையின்றி நிற்கும்
முண்டமாய் நோக்கின்றி துளைத்த
துவக்குகளிட்ட துளையின் வழி தெரியும்
கூறையிழந்த குடிசைகள்
பனையிழந்த மண்ணில்
துளிர் விடும் தென்னைகள்...
ஊழிக் கூத்தில் அழிந்த
ஊர்கள் தோறும் புனிதம் நிலைநாட்ட
கால்களை மடித்து
கைகளால் முத்திரை செய்து
தெருத் தோறும் அமர்வார்
எம்பெருமான்..

இன்னும் தேசிய சர்வ தேசிய அரசியல் பேசும் கவிதைகளாக பத்து தலை(முறை) ராவணன், மெல்ல நுழைதல், போன்றவை களும் சமூகத் துரோக சக்திகளான அரசியல் தொழிற்சங்கவாதி களை சித்தரிக்கும் டிராக் குலாக்கள், மற்றும் இயற்கை அனர்த்தம், இயற்கை வசந்தம், தாவரங்கள், ஜீவராசிகளின் மேல் படரும் மனிதாபிமான பார்வைகள், பொதுவான தத்துவ சிந்தனைகள், சமூக அநீதிகள் என இவரது கவிதைகள் விரிவடைகின்றன.

"துக்கத்திலும் சிரிக்கணும்" என்பதற் கொப்ப அங்கதச் சுவையையும் கவிஞர் விட்டு வைக்க வில்லை.. தென்னகத் தமிழர் பிரிட்டிஷ் காரன் பின்னால் பெருந் தோட்டங்களைத் தேடி வந்த இடர்பட்ட வரலாற்றை கிண்டல் படுத்தும்...

கப்பலும் கடற் காற்றும்
உனக்கு வழி காட்ட
காடு மலையும் "மாசி கதையும்"
கண்டறிய தொடங்கியது
உனது "கொலம்பஸ்" பயணம்..!

58 கவிதைகளிலும் சமூக நிலை, சமூக எதிரிகளுக்கான சாடல், கதம்ப உணர்வுகளாக இயற்கை அழகியல் பற்றி பாடி இருப்பினும், முத்தாய்ப்பாக பாரதியைப் போன்று தனது கவிதை மாந்தர்களிடமே ஆக்ரோஷமாக வினாத் தொடுக்கும் பாணியை நினைவூட்டும் சில வரிகள் மனத்திற்கு இதம் தருகின்றன...

பொதுவாக ஒரு சமூகவாதி இலக்கிய வாதியாக உருவாகும் போது, அவனது எழுத்துக்களெல்லாம் எதிர்ப்புக் குரலாகவே ஒலிக்க முற்படுவது யதார்த்தமானது. இங்கு இத் தொகுப்பில் அநேகக் கவிதைகள் இவ்வாறு தோற்றமளிக்கின்றன. சமூகச் சாடல்

நிறைந்த கவிதைகள்இருப்பினும், சமூக அநீதிக்கெதிரான கொதிப்புக்கள் குமிழியிட்ட போதிலும், கவிஞருக்கேயுரிய அவரது இதயம் வாழ்க்கையின் அனைத்துத் தளங்களையும் எட்டி நோக்கும் பார்வை வியப்புக்குரியவையாக விருக்கிறது..

இயற்கையின் அசைவை, காற்றை, தாவரங்களை, மனிதனுக்கடுத்த ஜீவராசி களை, உழைப்பை, ஏமாற்றத்தை, வஞ்ச கத்தை, கொடூரங்களை, காதலை, கனவு களை, மகிழ்ச்சியை புதிய மொழியில் காட்டு கின்ற எழுத்து வளம் கவிதைப் பிரியர்களின் மனத்தை நிறைவடையச் செய்கின்றன.

சமூக அரசியல் எதிரிகளை அடையாளப் படுத்தும் போது, அவர்களை, கொடிய மிருகங்களாக, ராட்ஷசனாக காட்டும் கவிஞன், எவ்வளவு மன அழுத்தத்துக் குள்ளானவனாக இருக்கின்றான் என்பதை அறிய முடிகின்றது. கவிதையாத்தவர் பாட்டாளி வர்க்க தளத்தில் வாழ்பவராகயிருப்ப தனால், படைப்புக்குள் போராட்டமே பாடும் பொருளாக மித மிஞ்சித் தோன்றுகின்றன. இத் தொகுப்புக்கு அணிந்துரை வழங்கியிருக்கும் பேராசிரியர் சி.சிவசேகரம், “எதிர்த்து போரிட வலுவற்ற யாவுமே அழியும்... எனவே நிலைக்க வேண்டுமாயின், போராடியே ஆக வேண்டும்..” என்ற கூற்றுதான் த்வச்செல்வனின் கவிதை உழைப்புக்கு ஆலோசனை கூற முடியும்..!

---

# உச்சு

இருளின் பனி
உறையும் உச்சிகளில்
கூனிக் கிடந்தது
அவருக்கான வெளி...

என்றுமே அணைந்திடாத
தீ பாடிக்
கொண்டு திரிந்தது
கிழவியின்
உதிர்ந்த கதைகளை...

துருத்தி நுளையும் வேர்களில்
வெண்ணிற பூக்களாய்
படர்ந்திருக்கிறது
பாடலின் துயரம்...

உறி வடிந்த
உரத்தின் நெடி
ஊரே முகர்ந்து சிலாகித்து
சிவந்த கதையின் சாரம்
சாரையாய் சரசரக்கிறது

காதல்,கூதல், குழைந்து
புணரி பூத்த
தருணங்கள்...
தத்தித்தாவி சிணுங்கி
சிதைகிறது...

மலைகளில் அலைந்து திரிந்த
அரசர்களின்
காலடித் தடங்களும்...

அவர்கள்
தின்று கழிந்து குவித்த
மலங்களின் எச்சங்களும்...

குறி விறைத்த போடிதல்லாம்
புணரி அழித்த
மலை தேவதைகளின்
அவலக் குரல்களும்...

கொழுந்தின்
பச்சையாய்
துளிர்த்துக்
கொண்டேயிருக்கிறது...
பாடல்
ஓய்ந்த பாடில்லை...!

வெளிகளைத் தாண்டி
மலைகளின் படுகைகளில்
படுத்து
பதுங்கி
பறந்து
பறையடித்து பாடுகின்றது...

அதில்

கிழவி கொண்டு வந்த
கனவுகள்...

விதைத்தும் விளைந்திடாத
விடிவுகள்...

உழைத்தும் உயர்ந்திடாத
ஊதியங்கள்...

உடுக்கைக் குரலில்
உரத்துக் கேட்கிறது...

ஊர் விழித்திடுமோ...!
அல்லது

செவிடனின்
காதுகள் கொண்டு
மலை தேவதைகளின்
புதை குழிகளில்
கிழவியை புதைத்து
உச்சு கொட்டுமா...!

உச்சு...
உச்சு...
உச்சு...

ஜெயதர்மன்

## எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்நாடளாவிய ரீதியில் நடாத்தும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கானசிறுவர்கதை எழுதும் போட்டி -2013

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் தமிழில் சிறுவர் இலக்கியத்தை ஊக்குவிக்கவும் தரமான சிறுவர் இலக்கியப் படைப்புக்களை உருவாக்கவும் நோக்காகக் கொண்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்காக நாடளாவிய ரீதியில் சிறுவர் கதைப் போட்டி ஒன்றினை நடாத்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவப்படுத்தி இப்போட்டி ஒழுங்கு பண்ணப்படுவதனால், சகல முன்பள்ளி ஆசிரியர்களை யும் இப்போட்டியில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

போட்டி விதிகள் :

*இலங்கையில் எந்தப்பாகத்திலும் வசிக்கும் முன்பள்ளி ஆசிரியர்களும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்

*சிறுவர் கதைகளை மட்டுமே போட்டிக்காக அனுப்பி வைக்கலாம்.

*ஒருவர் எத்தனை சிறுவர் கதைகளையும் போட்டிக்காக அனுப்பி வைக்கலாம்.

*கதைகள் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் மிக எளிமையாக இருத்தல் வேண்டும்.

*படம் வரைந்து அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை.

*எந்தக் கருப் பொருளிலும் கதைகள் எழுதப்படலாம்.

*கதைகள் எந்த வடிவிலும் எங்கேயும் வெளிவந்திருக்கக் கூடாது.

*உங்களால் சுயமாக எழுதப்பட்ட புத்தாக்கமாக இருக்க வேண்டும்.

கதையுடன் - உங்கள் பெயர் : ..... முகவரி : ..... தொலைபேசி இல : ..... மின்னஞ்சல் முகவரி : .... கற்பிக்கும் முன்பள்ளி : ..... முன்பள்ளியின் முகவரி : ..... கதையின் பெயர் : ..... கையொப்பம் : ..... போன்ற விபரங்கள் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

சிறந்த கதைகளுக்கு முறையே

முதல் பரிசு : ரூ.10,000/-

இரண்டாம பரிசு : ரூ.7,000/-

மூன்றாம் பரிசு : ரூ.5,000/

12 பரிசுகள் : புத்தகப்பொதி வழங்கி கௌரவிக்கப்படும்.

கதைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 31.12.2013

கதைகளை அனுப்பவேண்டிய முகவரி :

டாக்டர். ஓ.கே.குணநாதன்,
மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், அமிர்தகழி, மட்டக்களப்பு
Tel : 077 6041503, 065 2226658 Fax : 065 2229161
Email : okkuna@gmail.com

## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 80/= ஆண்டுச்சந்தா – 1200/= வெளிநாடு – $ 50U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக
அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K.Bharaneetharan, Kalaiaham , Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.